# குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108

## பாகம் - I

# குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108

## பாகம் – I

தொகுப்பு :

**B. கனக சபாபதி**
BE., CE., FIE., FIV...
94430 43426
bkvaluer@gmail.com

**S. பாலகுமாரன்**
M.Sc., M.Phil.,
89034 63858

**திருச்சிராப்பள்ளி – 620 001**

யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும்
நகல் எடுத்துக் கொள்ளலாம்,
வியாபார நோக்கு இல்லாதவரையில்.
நல்ல விஷயங்கள் பரவட்டுமே !

புத்தகம் அச்சிடுபவர் :
**ராஜ்குமார் பிரிண்டர்ஸ்**
புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017.
செல் : 98651 13112

## காணிக்கை

**திருக்கடையூர்**

**ஸ்ரீ அபிராமி அம்மனுக்கு**

பிரார்த்தனை செய்யுங்கள்

கடவுள் அருகே நீங்கள் செல்லலாம்.

சேவை செய்து பாருங்கள்

கடவுள் உங்களிடமே வருவார்.

**K. சாய்குமார்,** M.Sc., CAIIB
SDCA., BA (Music) Dip. in Sans.

*16/28, 2வது மெயின்ரோடு,*
*ஜெய்நகர், அரும்பாக்கம்,*
*சென்னை - 600 106*
*044 - 23637212*

# அணிந்துரை

*அன்பார்ந்த ஆன்மிகச் சிந்தனையாளர்களுக்கும் இறை வழிபாடு செய்து நந்நலம் அனுபவிக்கும் யாத்ரிகர்களுக்கும் பயன் பெறும் இந்த நூலினைப் படிக்கும் பாக்கியம் பெற்றேன்.*

*மனிதன் வாழ்நாளில் எப்போதும் பெற்றிருக்க வேண்டியது ஒன்றுதான். அது எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கும் மன நிலையே ஆகும். ஆத்மார்த்தமான மகிழ்ச்சியே உண்மையான மகிழ்ச்சி. அப்போது தான் உண்மையான புன்முறுவல் பூத்த முகத்தோடு ஒருவன் திகழ்வான். அந்த மகிழ்ச்சியினைத் தர வல்லது பிரம்மானந்தம் ஒன்றே. கலையினை ரசிப்பதாலும், பழகுவதாலும், இறை வழிபாடு செய்வதாலும், சேவை புரிவதாலும் ஒருவன் அந்நிலையினை உணர முடியும். இருப்பினும் அனைவராலும் எப்போதுமே அவ்வாறு இருக்க முடியாததற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது. குறைகள் என்பது மனம் சார்ந்த விஷயமாக இருந்த போதிலும் அது பல சமயம் மேலோங்கி நிற்பதால் நிறைகளை உணர முடியாமல் போய் விடுகிறது.*

*மனத்தில் சங்கடங்களை வைத்துக்கொண்டு சந்தோஷத்தை அனுபவிக்கக் கூறினால் சாத்தியமாகுமா என்கிற வினா ஒவ்வொரு மனிதனுக்கும் எழத்தான் செய்யும். அப்படியானால் இதற்கெல்லாம் ஒரே ஒரு அடிப்படை காரணம் இருக்கும் அல்லவா? இவை எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு அடிப்படை காரணம் தான் இருக்கிறது. அது முன் வினையே என முன்னோர் காலம் காலமாக உணர்த்தி வருகின்றனர். முன்வினை நல்லதாக அமையும் போது மகிழ்ச்சியும், அதன் தீமையினால் மனத்தாங்கல், வியாதி, கஷ்டம், எண்ணப்படி செயல்கள் நிறைவேறாமை போன்றவை நிகழ்கின்றன.*

இவை யாவற்றிற்கும் இரண்டே காரணங்கள் தான் பிரதானமாகத் திகழ்கின்றன. அவற்றில் ஒன்று குல தெய்வ வழிபாட்டினை மறத்தல், மற்றொன்று பித்ருக்கள் கர்மாவினைச் செய்யாதிருத்தல் ஆகும். துன்பமடையச் செய்து தன்னை நினைக்க வைக்க இறைவன் ஒருபோதும் நினைப்பதில்லை. எப்போதும் அவனையே நினைத்திருந்தால் மனிதனால் துன்பம் அறியப்படுவதில்லை என்பதே சாராம்சம்.

தத்வார்த்தமாக இவையிருந்தாலும், பரிகாரங்கள் செய்து குறைகளின் வீரியத்தைக் குறைக்கவே சராசரி மனிதனின் எண்ணம் ஏங்குகிறது. அவ்வாறு பரிகாரங்களைத் தேடுவோர்க்கு இந்த நூல் பெரும் பாலமாக அமைந்துள்ளது. சன்மார்க்கங்களில் சைவ, வைணவ பேதம் பாராட்டாமல் அனைத்து தெய்வங்களையும் ஒருமுகமாக பாவித்து இந்தத் தொகுப்பு விளங்கியுள்ளது பாராட்டுதற்குரியது. நல்ல வடிவமைப்புடன் பெரிய எழுத்துகளில் வெளிக்கொணர்ந்துள்ளது பயணத்தின் போது படிக்க ஏதுவாக இருக்கும்.

தலயாத்திரையின் மூலம் பெற்ற பெரும் அனுபவத்தை திரு. S. பாலகுமாரன், திரு. B.கனகசபாபதி மிகச் சிறப்பாக பட்டியலிட்டுக் கொடுத்துள்ள தலங்களை, எளிமையாக அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. மேலும் தலத்திற்குக் கீழே பயன் தரும் ஸ்லோகங்களையும் கொடுத்திருப்பது நம்மையும் அறியாமல் இறைவனை நினைத்துத் துதிக்கும் பாக்கியம் கிடைக்கச் செய்கிறது என்பது நிதர்சனம்.

பரிகாரங்களுக்காக தெய்வ வழிபாடு என்கிற நிலை இல்லாமல் எல்லோரும் இறை வழிபாடு செய்து தல யாத்திரை மேற்கொண்டு பயனுற வேண்டும் என்பதே இந்நூலின் மேலோங்கிய கோட்பாடாகும். பாரதத்தின் பொக்கிஷங்களாகத் திகழும் ஆலயங்களைத் தரிசித்து இறையருள் பெறுவோமாக.

✧ ✧ ✧

**பி. சுவாமிநாதன்**
எழுத்தாளர் / சொற்பொழிவாளர்

மதுரா வில்லா
புது எண் : 7, பீட்டர் தெரு
கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059.
இல்லம் : 044 - 2239 1788
கைப்பேசி : 98401 42031

# அணிந்துரை

எழுதுவதில் இரண்டு வகை இருக்கிறது.

ஒன்று - நாம் எழுதியதை அடுத்தவர்கள் ரசித்துப் படித்துப் பாராட்ட வேண்டும் என்கிற சுய நோக்கத்துடன் கொடுப்பது.

இரண்டாவது - நாம் எழுதியதை அடுத்தவர்கள் படித்துப் பயன் பெற வேண்டும் என்கிற பொது நோக்கத்துடன் கொடுப்பது.

என் இனிய நண்பர் திரு. கனகசபாபதி அவர்கள் இதுவரை எழுதிய நூல்களும் சரி....இந்த நூலும் சரி....இனி, எழுதப் போகிற நூல்களும் சரி! அவர் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்தான் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை.

இந்தக் காலத்தில் ஒரு கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்கிற எண்ணம் ஒருவருடைய மனதில் எழுவதே பெரிய விஷயம். குடும்பத் தலைவர் ஒருவர் மனதில் இப்படி ஒரு எண்ணம் உதித்து, மனைவி - குழந்தை மற்றும் குடும்பத்தினருடன் வெளியூரில் உள்ள ஒரு கோயிலுக்கு அவர் திடீரென்று புறப்பட்டுச் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இவர் செல்கின்ற வேளையில் அந்தக் கோயில் பூட்டப்பட்டிருக்கலாம். காரணம் -அதிக அளவு வருவாயும், வருமானமும் இல்லாத அந்த பிரமாண்ட கிராமத்துக் கோயிலின் ஒரே பூஜகர், வழக்கத்துக்குச் சற்று முன்னதாகவே பூஜையை முடித்து விட்டு, தனது குடும்ப நலனுக்காக அடுத்த ஒரு வேலையைக் கவனிக்கப் போயிருக்கலாம். இதில் கிஞ்சித்தும் தவறில்லை.

இந்த நிலையில் கோயில் வாசலில் குடும்பத்தினருடன் சென்ற அன்பர் காத்திருப்பது தேவைதானா? ஒருவேளை அந்த பூஜகருக்கு உரிய முன்னறிவிப்பு (போன் அல்லது கடிதம்) கொடுத்து விட்டு வந்திருந்தால், இத்தகைய ஒரு நிலையை அவர் தவிர்த்திருக்கலாம் அல்லவா? தான் தரிசிக்க வேண்டிய கோயிலின் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை அவர் எப்படிப் பெறுவார்? சிரமம்தானே!

இதையெல்லாம் மனதில் கொண்ட, இப்படிப்பட்ட துர்பாக்கிய நிலை எந்த ஒரு பக்தருக்கும் - எந்தக் காலத்திலும் வரவே கூடாது என்று இந்நூல் ஆசிரியர்கள் சிந்தித்ததன் விளைவாகவே இந்த அற்புதமான நூல் இன்று நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நூல், பத்தோடு பதினொன்று அல்ல. வாழ்நாள் முழுவதும் பொக்கிஷம் போல் பாதுகாக்க வேண்டிய - கிடைத்தற்கரிய புதையல்.

எத்தகைய ஒரு வியாதிக்கும், அதைத் தீர்த்தருளக் கூடிய இறைவன் குடி கொண்டிருக்கும் ஆலயம் எங்கே இருக்கிறது, அதன் முகவரி, தொலைபேசி எண் என்று அனைத்து விவரங்களும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

“பணம் பத்தும் செய்யும்” என்பார்கள். ஆனால், பணம் இருந்தும், வியாதியில் இருந்து மீள முடியாதவர்களைப் பற்றி நாம் அதிகம் கேள்விப்படுகிறோம் அல்லவா! இத்தகையச் சூழ்நிலையில் கடவுள்தான் எல்லாமே!

உங்களுக்கு முன்னால் கடவுள் தோன்றி, “உனக்கு நோயில்லா இனிமையான வாழ்க்கை வேண்டுமா? இல்லையேல் கட்டுக்கட்டான பணம் வேண்டுமா? ” என்று கேட்டால், எதைத் தேர்ந்தெடுப்பீர்கள்?!

முதலாவது விஷயத்தைத்தானே! அதுதான் உண்மை!

மாத்திரைகளாலும் மருந்தாலும் ஆகாத முயற்சிகள், தெய்வத்தின் அருளால் கைகூடும் என்பதை நேரில் பார்த்து, ஆதாரபூர்வமாக உணர்ந்து, பிறர் சொல்லக் கேட்டறிந்து இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. நோயுள்ள ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தெய்வத்தை தரிசித்து அருள் பெற்றால், இனிமையான வாழ்க்கை வாழலாம் என்று அதற்கு உண்டான திருக்கோயில்கள் இந்த நூலில் அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த இந்த வியாதிக்கு, இன்னின்ன மருத்துவர்கள் (கடவுளர்கள்) இவர்களிடம் பிரார்த்தித்து, உரிய ஃபீஸ் ( பரிகாரம் செய்து ) செலுத்தி, பிரிஸ்க்ரிப்ஷன் (பிரசாதம்) பெற்றுச் சென்றால், விளைவது அனைத்தும் நலமே என்று சொல்லாமல் சொல்கிறது நூல்.

இன்னொரு முக்கிய விஷயமும் இந்த நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதாவது, "குறிப்பிட்ட வியாதி உங்களுக்கு இல்லை என்றால் இந்தக் கோயிலுக்கு நீங்கள் போக வேண்டாம் என்பது பொருள் அல்ல. சாதாரண பக்தராக அவசியம் சென்று தரிசிக்க வேண்டும்'' என்று எழுதப்பட்டுள்ளது. அவசியமான வாக்கியம் இது. திருநள்ளாறு சென்று சனி பகவானைக் கும்பிடும் பெரும்பாலானவர்கள், அங்குள்ள ஈசனான தர்ப்பாரண்யேஸ்வரை தரிசிக்காமல் திரும்பி விடுகிற அவலத்தை என்னவென்று சொல்வது?!

திரு. கனகசபாபதியின் பணிக்கு திரு. பாலகுமாரன் அவர்களும் தோள் சேர்ந்திருக்கிறார். ஆன்மிக அன்பர்கள் அனைவரும் அவசியம் வாங்கிப் பாதுகாக்க வேண்டிய நூல்; பரிசளிக்க வேண்டிய நூல்; பலருக்கும் பயன்படக் கூடிய நூல்.

நன்றி.

✧ ✧ ✧

**B. கனகசபாபதி**
94430 43426

**S. பாலகுமாரன்**
*89034 - 63858*

# *முன்னுரை*

*திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்பன் கோயில் செய்து வரும் ஆன்மிகப் பணிகளில் ஒன்று, ஆலய அன்பர்களுக்காக அவ்வப்போது ஆன்மிக யாத்திரைகள் ஏற்பாடு செய்து பல்வேறு புனிதத் தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்வித்தல். இந்த யாத்திரைகளில் கலந்து கொண்டு பல கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்தோம். கோயில்களுக்குச் செல்லும் ஆர்வம் படிப்படியாக அதிகரித்ததன் காரணமாக, நாங்களாகவே யாத்திரைகள் செய்து மேலும் பல கோயில்களை தரிசித்தோம். நட்சத்திரக் கோயில்கள், பெருமாளின் திவ்ய தேசங்கள், அபிமானத் தலங்கள், சமயக்குரவர் மூவரால் பாடப்பெற்ற தேவாரத் திருத்தலங்கள், திருவாசகத் தலங்கள், திருவிசைப்பாத் தலங்கள், திருப்பல்லாண்டுத் தலங்கள், தேவார வைப்புத்தலங்கள், ஜோதிர்லிங்கத் தலங்கள், சக்தி பீடங்கள், சக்தித் தலங்கள், திருப்புகழ் திருத்தலங்கள், மகான்கள் அவதரித்த புண்ணிய பூமிகள், சித்தர் பீடங்கள், என 1200க்கும் மேற்பட்ட புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசிக்கும் பேறு பெற்றோம். எங்களுக்குக் கிடைத்த இந்த பாக்கியம் பூர்வ ஜென்ம புண்ணியத்தாலும், பெற்றோரின் ஆசீர்வாதத்தாலும் மட்டுமே என்பது உண்மை.*

*இவ்வாறு ஒவ்வொரு ஆலயத்திற்குச் செல்லும்போதும் அவற்றின் தல வரலாறு, அருமை பெருமைகள், அவ்வாலயத்திற்கே உண்டான சிறப்புச் செய்திகள் போன்றவற்றை குறிப்பெடுத்துக் கொள்ளும் வழக்கம் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட குறிப்புகளைத் திரட்டி 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் நாள் "108 திவ்ய தேசங்களும் 276 தேவாரத் தலங்களும்" என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டோம். அந்நூலிற்கு அன்பர்களிடமிருந்து மிகுந்த வரவேற்பு கிடைத்தது.*

*நூல் வெளிவந்த பிறகு பல அன்பர்கள் அவர்கள் பார்த்திராத பல கோயில்களைப் பற்றி விவரம் கேட்பதில் மிக்க ஆர்வம் காட்டினார்கள். ஒருநாள் பெண்மணியொருவர், தன் குழந்தை பிறந்து பல ஆண்டுகளாகியும் பேச்சு வரவில்லை என்று மிகுந்த ஆதங்கத்துடனும் துயரத்துடனும் கூறி, என்ன செய்வது? என்று தெரியவில்லையே என வருத்தப்பட்டார். அன்றைய தினம் அவருக்கு மிகச் சாதாரணமாக சொன்னது : ''ஒருமுறை சீர்காழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்கா சென்று இறைவன் சப்த புரீஸ்வரரையும் இறைவி ஓசை கொடுத்த நாயகியையும் வழிபட்டு மனமுருகி பிரார்த்தனை செய்து வாருங்களேன்''.*

*சில மாதங்களுக்குப் பின்னர் ஐயப்பன் கோயிலுக்கு வந்த அந்தப் பெண்மணி, "நீங்கள் சொன்னதற்கேற்ப திருக்கோலக்கா சென்று மனமுருகி ஈசனையும் அம்பாளையும் பிரார்த்தித்து, குழந்தைக்கு தேன் பிரசாதம் அளித்து வந்தோம். இறைவன் திருவருளால் எங்கள் குழந்தை தற்போது நன்றாகத் தெளிவாகப் பேசுகின்றான். எங்களுக்கு மிகவும்* ***மகிழ்ச்சியாகவும்*** *மனநிறைவாகவும் உள்ளது. இறைவனருளால் எங்கள் மனக்கவலை நீங்கி விட்டது" என்று கூறி ஆனந்த கண்ணீர் விட்டார். இதைக் கேட்டு ஒரு சிறிய சந்தோஷம் எங்களுக்கு.*

*சாதாரணமான சம்பவம் எனக் கருதி முற்றிலுமாக மறந்துவிட்ட நிலையில் சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் வந்த அந்தப் பெண்மணி, தன் தோழியின் குழந்தையின் திக்குவாய் குறைப்பாட்டைக் கூறி அதன் நிவர்த்திக்கு எந்தக் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும் என்று வழிகாட்டி உதவும்படி கேட்டார். அதற்கு பதிலாக அளித்தது: "கும்பகோணம் - திருவாரூர் சாலையில் நாச்சியார் கோயிலுக்கு அருகிலுள்ள திருப்பேணுபெருந்துறை ஆலயத்திற்கு குழந்தையுடன் சென்று ஸ்ரீ மங்களாம்பிகையையும், ஸ்ரீ சிவானந்தேஸ்வரரையும் வணங்கி சின் முத்திரையுடன் தியான நிலையிலுள்ள தண்டபாணிக்கு தேன் அபிஷேகம் செய்து மனமுருகி பிரார்த்தித்து பின்னர் அத்தேனை தினமும் குழந்தைக்கு கொடுத்து வந்தால் திக்குவாய் குறைபாடு விரைவில் நீங்கும்''.*

*சில மாதங்கள் கழித்து மறுபடியும் சந்தித்த அப்பெண்மணி மிக்க மகிழ்ச்சியுடன் தன் தோழியின் குழந்தைக்குத் திக்குவாய் குறைபாடு நீங்கி தற்சமயம் குழந்தை மிக நன்றாகப் பேசுகின்றான் என்று கூறி நன்றியைத் தெரிவித்தார். மீண்டுமோர் ஆத்ம திருப்தி ஏற்பட்டது எங்களுக்கு.*

*இவ்வாறாக அன்பர்கள் பலர் தமது குறைகளுக்கான நிவர்த்தித் தலங்களை கேட்டறிந்துச் செல்வதும், பின்னர் குறைகள் தீர்ந்ததும் நன்றி கூறுவதும் தொடர்ந்தது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கேற்ப "நாம் சேகரித்துள்ள அரிய செய்திகளைத் தொகுத்து பல்வேறு குறைபாடுகளுக்கான நிவர்த்தித் தலங்களைப் பற்றி மற்றவர்களுக்குப் பயன்படும் விதத்தில் ஏன் தனியாக ஒரு நூல் எழுதக் கூடாது" என்று யோசித்து முடிவெடுத்ததின் வெளிப்பாடே இந்நூல்.*

*குறைபாடுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து அவற்றைத் தனித்தனியே பிரித்து அவற்றிற்கு உரித்தான ஆலயங்கள், விலாசம், சென்றடையும் வழி, தொடர்புக்கான தொலைபேசி எண், கோயில் திறந்திருக்கும் நேரம், வழிபடும் முறை, சிறப்புக் குறிப்புகள் மற்றும் அக்குறை நிவர்த்திக்காக தினமும் நம்பிக்கையுடன் துதிக்க வேண்டிய பாடல்கள், ஸ்லோகங்கள் போன்றவற்றைத் தொகுத்து "குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108" என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளியிடுவதில் மிகவும் மகிழ்வுறுகிறோம். இந்நூலில் நாங்கள் குறிப்பிட்டுள்ள கோயில்கள் தமிழகத்தில் உள்ள தேவாரத் திருத்தலங்கள், வைப்புத்தலங்கள், வைணவ திவ்ய தேசங்கள், அபிமானத் தலங்கள் மற்றும் சில குறிப்பிட்ட ஆலயங்கள் மட்டுமே! இந்நூலில் குறிப்பிட்ட கோயில்கள் அல்லாமல் அந்தந்தக் குறைபாடுகளுக்கு உள்ளூரிலமைந்த கோயில்களும் மற்ற வெளி மாநிலக் கோயில்களும் உள்ளன என்பது உண்மை. தமிழகக் கோயில்கள் 108 என்ற வரையறை ஏற்படுத்திக்கொண்ட காரணத்தாலேயே மற்ற கோயில்களைப் பற்றி இங்கே குறிப்பிட இயலவில்லை. ( இந்தியாவிலேயே தாயாருக்கு சிரார்த்தம் கொடுக்கக்கூடிய ஒரே தலம் என்ற விசேஷ காரணத்தால் குஜராத் மாநிலத்திலுள்ள ஸித்பூர் விதிவிலக்கு).*

நாங்கள் கற்றது கை மண்ணளவே. இந்த ஆலயங்களை நேரில் தரிசித்ததன் பேரிலும், அங்குள்ளோரிடம் கேட்டறிந்ததன் அடிப்படையிலும், தல வரலாறு மற்றும் கோயில் சம்பந்தமான பல நூல்களைப் படித்ததின் அடிப்படையிலும், மற்றவர்களுக்கு ஒரு சிறிய தொண்டாற்றும் எண்ணத்தில் நாங்கள் அறிந்த செய்திகளைத் தொகுத்து இந்நூலில் வழங்கியுள்ளோம். தவறுகளிருந்தால் பொறுத்தருளி மறவாது சுட்டிக்காட்ட வேண்டுகிறோம். அதேபோல தங்களது அனுபவத்தில் குறிப்பிட்ட குறைகளுக்கான வேறு தலங்கள் இருப்பின், தகுந்த ஆதாரத்துடன் அச்செய்திகளை எங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினால் மற்றவர்களுக்கு வழிகாட்ட உதவியாக இருக்கும்.

இந்நூலின் மூலம் கிடைக்கும் தொகை ஏழை மாணவர்களின் கல்விக்காகப் பயன்படுத்தப்படும்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய அன்பர்கள் திரு. K. சாய்குமார் மற்றும் திரு. P. சுவாமிநாதன் அவர்களுக்கு நன்றி. ஆரம்பத்திலிருந்தே ஊக்கம் கொடுத்து அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய நண்பர்கள் திரு. Dr. R. மணிவாசகம், திரு. R. தங்கராஜ் போஸ் அவர்களுக்கும், மற்றும் இந்நூல் வெளிவருவதற்கு ஏதாவது ஒருவகையில் உதவி செய்த மற்றவர்களுக்கும் நன்றி! கோயில் பற்றிய சரியான தகவல் தந்துதவிய கோயிலைச் சார்ந்தவர்களுக்கு நன்றி!

வாழ்க்கையின் ஆதாரமே நம்பிக்கைதான். கடவுளின் மீது முழு நம்பிக்கை வைத்து உங்கள் குறை நீங்க மனதார பிரார்த்தியுங்கள். உங்களுடன் இணைந்து நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

உலகத்திலேயே மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது எதுவென்றால் அது மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதுதான். பிறருக்காக வாழும் நெறியான வாழ்க்கையும், தர்மம் செய்யும் நல்ல மனமும் கிடைத்துக் கொண்டேயிருக்குமானால் மீண்டும் ஒரு மனிதப் பிறவியைக் கொடுக்க இறைவனை வேண்டி நிற்கிறோம்.

*சுவாமியே சரணம் ஐயப்பா !*

*திருச்சிராப்பள்ளி - 620 001* *7.3.2013*

✧ ✧ ✧

## *கோயில்களுக்குச் செல்லும் அன்பர்களுக்குச் சில குறிப்புகள்*

1. இதுவரை உங்கள் குல தெய்வக் கோயிலுக்கு நீங்கள் சென்றதில்லை என்றால், முதலில் அங்கே சென்று குல தெய்வத்திற்கு அபிஷேக, ஆராதனை செய்து வழிபடுங்கள். அதே போல இதுவரை, மறைந்த முன்னோர்களுக்கு உங்கள் குடும்பத்தில் பிதுர்காரியம் செய்யும் வழக்கம் இல்லாமலிருந்தால் அதை செவ்வனே செய்யத் தொடங்குங்கள். இவ்விரண்டையும் நிறைவேற்றிய பிறகே குறை தீர்க்கும் தலத்திற்குச் செல்லத் திட்டமிடுங்கள்.

2. இங்கு குறிப்பிட்டுள்ள கோயில்கள் குறிப்பிட்ட குறைகளுக்கான கோயில்கள் மட்டுமே என்றும், குறைகள் உள்ளவர்கள் மட்டுமே அங்கு செல்ல வேண்டும் என்றும் பொருள் கொள்ள வேண்டாம். எல்லோரும் செல்லலாம். எப்போதும் செல்லலாம். கோயில் என்பது பொதுவானது. பலன்கள் பற்பல.

3. கோயிலுக்குச் செல்வதினால் மட்டுமே நம்முடைய குறைகள் தீர்ந்துவிடுமா என்ன? என்று அவநம்பிக்கை கொள்ளாமல், இறைவனை முழுவதுமாக நம்பி ஆத்மார்த்தமாகவும், மனப்பூர்வமாகவும், மனமுருகியும், "நல்லதே நடக்கும்" என எண்ணியும் வழிபடுங்கள். நிறைய அதிசயங்கள் பலரது வாழ்வில் நடந்திருக்கின்றன என்பது உண்மை. அதே போல நம்பிக்கைக்கும் பக்திக்கும், சாதி, மத, நாடு பேதம் கிடையாது என்பதும் உண்மை.

4. கோயிலுக்குச் செல்வதற்கு முன் தொலைபேசி (சில சமயம் எண் மாறியிருக்க வாய்ப்புண்டு என்பதை நினைவில் கொள்ளவும்) அல்லது கடிதம் மூலம் தொடர்பு கொண்டு, செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகள் பற்றி விவரமாகத் தெரிந்து கொண்டு பயணத்தைத் திட்டமிடுங்கள். பயணிக்கும்போது சந்தேகம் இருப்பின் ஆங்காங்கே சரியான வழித்தடம் கேட்டுச் செல்லுங்கள்.

5. கோயிலிருக்குமிடம் சிறிய ஊராக இருக்கலாம். ஆதலால் பூஜை பொருட்களை முன்னதாகவே வாங்கிச் செல்லுங்கள்.

6. நிறைய நெய் வாங்கிச் சென்று அர்ச்சகரிடம் தந்து கருவறையில் தீபமேற்றச் செய்யுங்கள். முடிந்தால் சற்று அதிகமாகவே நெய் தந்து மற்ற நாட்களிலும் தீபம் ஏற்றச் செய்யுங்கள். இறைவனின் சன்னிதானம் பிரகாசமாக இருந்தால் நம்முடைய வாழ்க்கையும் நிச்சயம் பிரகாசமாக இருக்குமே!

7. தோஷப் பரிகாரங்களுக்காகச் செல்வதென்றால் முன்கூட்டியே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, எப்போது வரவேண்டும், என்னென்ன பொருட்கள் கொண்டுவரவேண்டும், எப்படி பூஜையில் கலந்து கொள்ள வேண்டும், என்னென்ன தானம் செய்ய வேண்டும் என்பது போன்ற சரியான விவரங்கள் அறிந்த பின்னரே பயணத்தைத் திட்டமிடுங்கள்.

8. தங்களது சக்திகேற்ப, வசதியற்ற கோயில்களுக்குப் பொருளுதவியும், சுவாமிக்கு வஸ்திரமும், ஏழை அர்ச்சகர்களுக்கு வஸ்திர தானமும் செய்யுங்கள். கோயில் திருப்பணிக்கு நிறைய கொடுங்கள்.

9. நிறைய தான, தர்மங்கள் செய்யுங்கள். விரைவில் குறைகள் நிவர்த்தியாகும்.

10. இறைவழிபாடு சம்பந்தப்பட்ட நூல்களை அச்சிட்டு மற்ற அன்பர்களுக்கு வழங்குங்கள். வசதியில்லாத புராதனக் கோயில்களின் தலவரலாறு புத்தகத்தை அச்சிட்டு இலவசமாக வழங்குங்கள். நீங்காத குறைகள் விரைவில் நிவர்த்தியாவதற்கு அதுவும் ஒரு வழியாகும்.

11. குறைகளுக்காக இந்நூலில் குறிப்பிட்டுள்ள பாடல்களை – ஸ்லோகங்களை மனமார தினமும் சொல்லிப் பிரார்த்தியுங்கள். சம்பந்தப்பட்டவர்கள் சொல்லமுடியாமல் இருக்கும் நிலையில் இருந்தால் தாய், தந்தை, நெருங்கிய உறவினர், நண்பர்கள் சொல்லிப் பிரார்த்திக்கலாம்.

12. எந்த ஒரு இடத்தில் கணபதி ஹோமமும், நவக்கிரக ஹோமமும் நடைபெறுகின்றனவோ, அந்த இடம் மிக சுபிட்சமாக இருக்கும். அதுபோல எவர் ஒருவர் தினமும் விநாயகர் அகவல், நவக்கிரக கவசம் பாராயணம் செய்கின்றாரோ அவர்கள், சொல்லும்படியான பெரிய குறைகள் இல்லாமல் சுபிட்சமாக இருப்பார்கள். தினமும் பாராயணம் செய்யுங்கள்.

13. கோயிலுள் அமைதி காத்திடுங்கள். ஆலயத்தூய்மை காத்திடுங்கள். இயன்றால் குடும்பத்தினருடன் சென்று உழவாரப் பணி செய்திடுங்கள். எண்ணெய் தீபத்தைக் கோயிலுள் கண்ட கண்ட இடத்தில் ஏற்றி கோயிலை அசுத்தப் படுத்தாதீர்கள்.

14. கோயில் வாயிலில் கையேந்துபவர்களுக்கு ( பணமாகத் தராமல் ) உணவாக வழங்குங்கள். பிஸ்கட் பாக்கெட் தரலாம். சிறுவர்களுக்கு பேனா, பென்சில், நோட்டு, புத்தகங்கள் கொடுக்கலாம்.

15. கோயில்களுக்குச் செல்கையில் அருகாமையிலுள்ள மற்ற தலங்களையும் தரிசித்து விட்டு வாருங்கள். ஒவ்வொரு கோயிலுக்கும் ஏதாவது ஒரு தனிச் சிறப்பும் விசேஷ சக்தியும் இருக்கும்.

16. தங்களது குறைகள் நிவர்த்தியான பின்னர் மீண்டும் அத்தலத்திற்குச் சென்று இறைவனுக்கு நன்றி கூறி வாருங்கள்.

*குறை ஒன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா*
*குறை ஒன்றுமில்லை கண்ணா......*
*குறை ஒன்றுமில்லை கோவிந்தா....*

✧ ✧ ✧

# குறைகள் நிவர்த்தித் தலங்கள் 108



| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நோய்கள் விலக | நாங்குனேரி | 1 |
| 2 | நோய்கள் விலக | காஞ்சிபுரம் | 2 |
| 3 | தீராத நோய்கள் தீர | திருநெடுங்களம் | 3 |
| 4 | தீராத கொடிய நோய்கள் விலக | திருவள்ளூர் | 4 |
| 5 | சர்க்கரை நோய் குறைய, கட்டுப்பாட்டில் இருக்க | கோயில் வெண்ணி | 5 |
| 6 | இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்த, இதய நோய், உஷ்ண ரோகம் நீங்க | அன்னியூர் | 6 |
| 7 | கடும் சுரம் நீங்க | சாட்டியக்குடி | 7 |
| 8 | கடும் சுரம் நீங்க | திருநெல்வேலி | 8 |
| 9 | இருதய நோய் குணமாக | திருநின்றவூர் | 9 |
| 10 | தீராத வயிற்று வலி விலக | அன்னப்பன்பேட்டை | 10 |
| 11 | சூலை நோய் – தீராத வயிற்று வலி தீர | திருவதிகை | 11 |
| 12 | மஞ்சள் காமாலை நோய் நீங்க | மூலனூர் | 12 |
| 13 | உடல் அங்கக் குறைபாடுகள், பாலாரிஷ்டம், நரம்பு தளர்ச்சி தொடர்பான நோய் நீங்க | கூனஞ்சேரி | 13 |
| 14 | கோமாவிலிருந்து எழுந்திருக்க, காக்காய் வலிப்பு நோய், குழந்தைகளின் பாலதோஷம் குணமாக | திருவாசி | 14 |
| 15 | காக்காய் வலிப்பு நோய் விலக | திருவீழிமிழலை | 15 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 16 | சிறுநீரகக் கோளாறுகள் கட்டுப்படுத்த | ஊட்டத்தூர் | 16 |
| 17 | புற்று நோய் குணமாக | நண்டாங்கோயில் | 17 |
| 18 | எலும்பு முறிவு, பக்கவாதம் குணமடைய | திருமாகறல் | 18 |
| 19 | வெண்குஷ்டம் நீங்க | ராஜேந்திரப்பட்டணம் | 19 |
| 20 | வெண்குஷ்டம் நீங்க | தலையாலங்காடு | 20 |
| 21 | விஷக்கடியிலிருந்து குணம் பெற | பூவனூர் | 21 |
| 22 | கண் நோய்கள் தீர | திருக்காரவாசல் | 22 |
| 23 | கண் பார்வை கோளாறு நீங்க | திருவெள்ளியங்குடி | 23 |
| 24 | கண் நோய் விலக | திருப்பயத்தங்குடி | 24 |
| 25 | கண் புரை முற்றாமல் இருக்க | மலையடிப்பட்டி | 25 |
| 26 | சித்தப்பிரமை, ஏவல், பில்லி சூனியம் நீங்க | திருமுருகன்பூண்டி | 26 |
| 27 | சித்தப்பிரமை நீங்க | திருஏடகம் | 27 |
| 28 | மனநோய் குணமாக | குணசீலம் | 28 |
| 29 | பேய், பிசாசு, பில்லி சூனியம், மனப்பிரமை நீங்க | சோளிங்கர் | 29 |
| 30 | மரண பயம் விலக | திருநீலக்குடி | 30 |
| 31 | யம பயம் நீங்க | ஸ்ரீ வாஞ்சியம் | 31 |
| 32 | ஆயுள் விருத்தியடைய | திருத்தலையூர் | 32 |
| 33 | சத்ரு பயம் நீங்க | மயிலாப்பூர் | 33 |
| 34 | கனவில் அடிக்கடி பாம்பு வந்தால், துரத்தினால் | கோடகநல்லூர் | 34 |
| 35 | கெட்ட கனவுகளிலிருந்து விடுபட | திருவேளுக்கை | 35 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 36 | நோயின் கடுமை தாங்க முடியாதவர்களுக்கு | திருவைகாவூர் | 36 |
| 37 | மரண அவஸ்தையில் இருப்பவர்கள் / நோய்வாய்பட்டோர் குணமடைய அல்லது சிரமமில்லாமல் இறைவனடி சேர | திசைமுகன்சேரி | 37 |
| 38 | ராகு தோஷ பாதிப்பு நிவர்த்தியாக | திருநாகேஸ்வரம் | 38 |
| 39 | ராகு, கேது தோஷ பாதிப்பு நிவர்த்திக்கு (ஜாதகத்தில் கால சர்ப்பதோஷம் இருந்தால்) | திருபாம்புரம் | 39 |
| 40 | ராகு கேது பரிகாரத் தலம் | கொடுமுடி | 40 |
| 41 | கேது தோஷ பாதிப்பு நிவர்த்திக்கு | கீழப்பெரும்பள்ளம் | 41 |
| 42 | சனி தோஷ பாதிப்பு விலக | திருக்கொள்ளிக்காடு | 42 |
| 43 | சனி தோஷ பாதிப்பு விலக | குச்சனூர் | 43 |
| 44 | சனி தோஷ பாதிப்பு விலக | திருநள்ளாறு | 44 |
| 45 | செவ்வாய் தோஷ பாதிப்பு விலக | வைத்தீஸ்வரன்கோயில் | 45 |
| 46 | குரு பரிகாரத் தலம் | தென்குடித்திட்டை | 46 |
| 47 | சுக்கிர தோஷ பாதிப்பு விலக | கஞ்சனூர் | 47 |
| 48 | சர்வதோஷ பரிகாரத் தலம் | திருச்சிறுபுலியூர் | 48 |
| 49 | நாகராஜா பூஜை செய்ய | திருச்சிராப்பள்ளி | 49 |
| 50 | வாஸ்து தோஷ நிவர்த்திக்கு | திருச்சிராப்பள்ளி | 50 |
| 51 | வாஸ்து தோஷ நிவர்த்திக்கு | மண்ணச்சநல்லூர் | 51 |
| 52 | தற்போது உள்ள வீட்டின் வாஸ்து தோஷ நிவர்த்திக்கு | திருவிற்குடி | 52 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 53 | தொழிற்சாலைக் கட்டுமானப் பணிகள் தங்கு தடையின்றி நடக்க | சித்தன்னக்குடி | 53 |
| 54 | அடுக்கு மாடிக் கட்டிட வேலைகள் தங்கு தடையின்றி நடக்க | கடுவெளி | 54 |
| 55 | அனைத்து பாப தோஷ நிவர்த்திக்கு | கோவிலடி | 55 |
| 56 | திருடிய பாவம் நிவர்த்தியாக | சக்கரப்பள்ளி | 56 |
| 57 | தர்ப்பணம், சிராத்தம் செய்ய | திலதர்ப்பணபுரி | 57 |
| 58 | பித்ரு காரியம் செய்ய | பவானி | 58 |
| 59 | பித்ரு காரியம் செய்ய | ராமேஸ்வரம் | 59 |
| 60 | பித்ருக்களுக்காகப் பிரார்த்திக்க | மேலப்பெரும்பள்ளம் | 60 |
| 61 | பித்ருக்கள் இட்ட சாபம் நீங்க | திருமங்கலம் | 61 |
| 62 | பித்ரு சாப நிவர்த்திக்கு | திருப்பூந்துருத்தி | 62 |
| 63 | தாயாருக்கு சிராத்தம் செய்ய | ஸித்பூர் | 63 |
| 64 | சிராத்தம் செய்ய (குறிப்பாக வாரிசு இல்லாதவர்களுக்கு) | நென்மேலி ( புண்டரீகநல்லூர்) | 64 |
| 65 | கல்வி தொடங்க – வித்யாரம்பத்திற்கு | இன்னம்பூர் | 65 |
| 66 | கல்வி பயிலத் தொடங்க, கல்வியில் சிறந்து விளங்க | கூத்தனூர் | 66 |
| 67 | கல்வியில் சிறந்து விளங்க | திருவஹீந்திரபுரம் | 67 |
| 68 | கவனம் சிதறாமல் படித்து கல்வியில் மேம்பட | துடையூர் | 68 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 69 | கல்வியில் மந்தம், கவனக்குறைவு, ஞாபகசக்தி குறைபாடு நீங்க | திருவெண்காடு | 69 |
| 70 | சிறந்த ஞாபகசக்தி, பேச்சாற்றல், கல்வி ஞானம் பெற | செட்டிப் புண்ணியம் | 70 |
| 71 | குழந்தைகள் மன பயம் நீங்க | ஊட்டத்தூர் | 71 |
| 72 | கோழைத்தனம் நீங்கி, திட மனதுடன் விளங்க | அனந்தமங்கலம் | 72 |
| 73 | மந்தபுத்தி விலக (ஜாதகத்தில் குளிகன், மாந்தி இருந்தாலும்) | திருநறையூர் (நாச்சியார் கோயில்) | 73 |
| 74 | கலைகளில், சங்கீதத்தில் சிறந்து விளங்க | ஊத்துக்காடு | 74 |
| 75 | சங்கீதத்தில் சிறந்து விளங்க | திருவையாறு | 75 |
| 76 | பிறந்து வெகு நாட்களாகியும் சரியாக பேச்சு வராமல் இருக்கும் குழந்தைகளுக்கு, பிறவி ஊமைகளுக்கு, திக்குவாய் உள்ளவர்களுக்கு, அதிர்ச்சியால் பேசும் தன்மை இழந்தவர்களுக்கு | திருக்கோலக்கா | 76 |
| 77 | ஊமை, திக்குவாய் குறைகள் நீங்க | திருப்பேணுபெருந்துறை | 77 |
| 78 | அதிர்ச்சியால் பேசமுடியாது போனவர்கள் மீண்டும் பேச | திருக்காரகம் – காஞ்சிபுரம் | 78 |
| 79 | மாற்றுத்திறனாளிகள் நலம் பெற | திருக்கூடலூர் | 79 |
| 80 | உரிய காலத்தில் திருமண பாக்கியம் பெற | திருவிடந்தை | 80 |
| 81 | திருமணத் தடை நீங்க | நாச்சியார் கோயில் (திருநறையூர்) | 81 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 82 | திருமணத் தடை நீங்க | திருப்பைஞ்ஞீலி | 82 |
| 83 | திருமணத் தடை நீங்க | திருமணஞ்சேரி | 83 |
| 84 | மூலம், ஆயில்யம் மற்றும் சுவாதி நட்சத்திரக்காரர்களுக்கான திருமணத் தடை நீங்க | இஞ்சிமேடு (யக்னமேடு) | 84 |
| 85 | திருமணம் கைகூட, புத்திரபாக்யம் பெற, பதவி உயர்வு பெற | திருக்காவளம்பாடி | 85 |
| 86 | பெண்களுக்கான கர்ப்பப்பை கோளாறுகள், ருதுகால பிரச்சினை நீங்க | பெட்டவாய்த்தலை | 86 |
| 87 | பிள்ளைப் பேறு பெற | (ராஜ) மன்னார்குடி | 87 |
| 88 | பிள்ளைப் பேறு பெற | கருவளர்சேரி | 88 |
| 89 | கரு உண்டாக மற்றும் (கருச்சிதைவு ஏற்படாமல்) கரு காத்து சுகப்பிரசவமாக | திருக்கருகாவூர் | 89 |
| 90 | சுகப்பிரசவத்திற்கு | திருச்சிராப்பள்ளி | 90 |
| 91 | சுகப்பிரசவத்திற்கு | திருப்புறம்பயம் | 91 |
| 92 | தீர்க்க சுமங்கலியாக வாழ | திருமங்கலக்குடி | 92 |
| 93 | மாங்கல்ய தோஷம் நிவர்த்தியாக | திருவேள்விக்குடி | 93 |
| 94 | பிரிந்த தம்பதியர் ஒன்று சேர | திருலோக்கி | 94 |
| 95 | கடன் தொல்லையிலிருந்து விடுபட | திருச்சேறை | 95 |
| 96 | வழக்குகள் விரைவில் தீர | சிவபுரம் | 96 |
| 97 | நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர | பேளூர் | 97 |
| 98 | இழந்த பொருள் (நியாயமாக சம்பாதித்தது) திரும்பக் கிடைக்க | திருக்கோகர்ணம் | 98 |

| வ. எண். | பொருள் | தலங்கள் | பக்கம் |
|---|---|---|---|
| 99 | இழந்த பொருள் (நியாயமாக சம்பாதித்தது) திரும்பக் கிடைக்க | பாப்பாகோயில் | 99 |
| 100 | காணாமல் போனவர் திரும்பக் கிடைக்க | தேரெழுந்தூர் | 100 |
| 101 | திக்கற்றோரும், விரக்தியுற்றோரும் வழிபட வேண்டிய தலம் | வலிவலம் | 101 |
| 102 | வறுமைநிலை நீங்கி தன அபிவிருத்தி பெற | நாதன்கோயில் | 102 |
| 103 | உணவிற்குப் பஞ்சமில்லாத நிலை பெற | திருச்சோற்றுத்துறை | 103 |
| 104 | அவப்பெயர் நீங்க | திருப்பாற்கடல் | 104 |
| 105 | இழந்த பதவி, செல்வத்தை மீண்டும் பெற | S. புதூர் (திருத்தண்டிகைபுரம்) | 105 |
| 106 | வேலை வாய்ப்புக் கிட்ட | அரியக்குடி | 106 |
| 107 | தலைவிதி – வாழ்க்கை முறையை மேம்படுத்த | திருப்பட்டூர் | 107 |
| 108 | தனது குலதெய்வம் அறியாதவர்கள் வணங்க வேண்டியது | கதிராமங்கலம் | 108 |
| | விநாயகர் அகவல் | --- | 109 |
| | நவக்கிரக கவசம் | --- | 110 |
| | சுந்தரர் பாடிய தேவார பாடல் | --- | 111 |
| | திருக்கோலக்கா ஸ்ரீ ஓசைநாயகி அம்பாள் வாக்வாதினி பூஜை வழிபாடு விபரம் | --- | 112 |
| | குறிப்பிற்கு பயன்படுத்திய நூல்கள் | --- | 114 |
| | குறைகள் நிவர்த்தித் தலங்கள் பாகம்–2ல் விவரிக்கப்பட்டுள்ள தலங்கள் | --- | 115 |


✧ ✧ ✧

## 1. நோய்கள் விலக

| | |
|---|---|
| *தலம்* | **நாங்குனேரி** |
| *விலாசம்* | ஸ்ரீசிரிவர மங்கைத் தாயார் உடனாய<br>ஸ்ரீ வானமாமலைப் பெருமாள் திருக்கோயில்<br>நாங்குனேரி, திருநெல்வேலி மாவட்டம் - 627 108. |
| *வழித்தடம்* | திருநெல்வேலி - நாகர்கோயில் சாலையில்<br>திருநெல்வேலியிலிருந்து 25 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 12.00 மாலை : 04.30 - 08.30 |
| *தொலைபேசி* | 04635 - 250119 (ஜீயர் மடம்) |
| *வழிபட வேண்டிய முறை* | இறைவனுக்கு தினமும் தைலக்காப்புச் செய்து அதை அகலமான எண்ணெய் கிணற்றில் ஊற்றி நிரப்புகின்றனர். அந்த எண்ணெயை உட்கொண்டால் அல்லது தடவினால் நோய்கள் (தோல் வியாதிகள்) தீரும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்யதேசங்களுள் 90-ஆவது தலம்.<br>பாண்டியநாட்டுத் திருப்பதி. மிக விசேஷமான தலம்.<br>நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தெய்வ நாயகன் நாரணன் திரிவிக் கிரமன் அடியிணை மிசை,<br>கொய்கொள் பூம்பொழில் சூழ்குரு கூர்சட கோபன்<br>செய்த ஆயிரத் துள்ளிவை தண்சிரீ வரமங்கை மேய பத்துடன்,<br>வைகல் பாட வல்லார் வானோர்க்காரா அமுதே.<br>( நம்மாழ்வார் ) |

## 2. நோய்கள் விலக

| | |
|---|---|
| *தலம்* | **காஞ்சிபுரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ பெருந்தேவி தாயார் உடனாய<br>ஸ்ரீ வரதராஜப் பெருமாள் (தேவராஜ சுவாமி) திருக்கோயில்<br>காஞ்சிபுரம் – 631 501. |
| *வழித்தடம்* | பிரபலமான ஊர். |
| *நேரம்* | காலை : 07.00 – 12.30 மாலை : 03.30 – 08.30 |
| *தொலைபேசி* | 044 – 27269773 |
| *வழிபட வேண்டிய முறை* | பெருமாள் கருவறையின் வெளிப்பிரகாரத்தின் (வைய மாளிகை) மேற்கூரையில் அமைந்துள்ள தங்க, வெள்ளி பல்லிகளைத் தொடுவோர் நோய் தீர்ந்து குணம் பெறுவர் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 43–ஆவது தலம்.<br>தொண்டை நாட்டுத் திருத்தலம்.<br>முக்தி தரும் வைணவ திருத்தலம்.<br>திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | அஸ்மின் பராத்மன் நநு பாத்மகல்பே<br>த்வமித்த முத்தாபித பத்மயோனி :<br>அநந்த பூமா மம ரோகராசிம்<br>நிருந்த்தி வாதாலயவாஸ விஷ்ணோ<br>( ஸ்ரீ நாராயணீயம் – நோய் தீர்க்கும் ஸ்லோகம் ) |

## 3. தீராத நோய்கள் தீர

| | |
|---|---|
| *தலம்* | **திருநெடுங்களம்** |
| *விலாசம்* | ஸ்ரீ ஒப்பிலாநாயகி உடனாய<br>ஸ்ரீ நித்ய சுந்தரேஸ்வரர் திருக்கோயில்<br>திருநெடுங்களம் அஞ்சல், துவாக்குடி வழி,<br>திருச்சிராப்பள்ளி – 620 015. |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – தஞ்சாவூர் வழித்தடத்தில் துவாக்குடிக்கு வடக்கே 3 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 – 12.00 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 0431 – 2520126, 95788 – 94382 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனுக்கும், அம்பாளுக்கும் மாதுளம் பழத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டு, சுந்தர தீர்த்தக் கரையில் உள்ள கருப்பண்ண சாமிக்கு பானகம், நைவேத்தியம் செய்து பலருக்கும் வழங்கினால் தீராத நோய்கள் தீரும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களில் 125 –ஆவது தலம்.<br>சோழநாட்டுத் தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>காசியில் உள்ளது போலவே கருவறை மேல் இரண்டு விமானங்கள் உள்ளன. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத<br>என் அடியான் உயிரை வௌவேல் என்றுஅடற் கூற்றுதைத்த<br>பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்<br>நின் அடியார் இடர் களையாய் நெடுங்கள மேயவனே.<br>( சம்பந்தர் தேவாரம் ) |

## 4. தீராத கொடிய நோய்கள் விலக

| | |
|---|---|
| *தலம்* | **திருவள்ளூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ கனகவல்லி உடனாய<br>ஸ்ரீ வீரராகவப் பெருமாள் திருக்கோயில்,<br>திருவள்ளூர் - 602 001, திருவள்ளூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | சென்னை அரக்கோணம் ரயில் பாதையில்<br>சென்னையிலிருந்து 45 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 - 12.00 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 044 - 27660378 |
| *வழிபட வேண்டிய முறை* | அமாவாசையன்று (புஷ்கரணியில்) நீராடிவிட்டு வைத்திய வீரராகவரையும், விஜயகோடி விமானத்தையும் சேவித்தால் நோய்கள் பூண்டோடு கழியும். இங்குள்ள திருக்குளத்தில் 3 அமாவாசைகள் வெல்லத்தைக் கரைத்தால் தீராத கொடிய நோய்கள் தீரும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களுள் 59-ஆவது தலம்.<br>தொண்டை நாட்டுத் திருத்தலம்.<br>திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார்<br>மங்களாசாசனம் செய்தது.<br>புனர்பூச நட்சத்திரக் கோயில். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | முனிவன் மூர்த்தி மூவராகி வேதம் விரித்துரைத்த<br>புனிதன், பூவை வண்ணனண்ணல் புண்ணியன் விண்ணவர்கோன்,<br>தனியன் சேயன் தானொருவன் ஆகிலும் தன்னடி யார்க்கு<br>இனியன், எந்தை யெம்பெருமான் எவ்வுள் கிடந்தானே.<br>( திருமங்கையாழ்வார் ) |

## 5. சர்க்கரை நோய் குறைய, கட்டுப்பாட்டில் இருக்க

| | |
|---|---|
| *தலம்* | **கோயில் வெண்ணி** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தர நாயகி உடனாய<br>ஸ்ரீ வெண்ணி கரும்பேஸ்வரர் திருக்கோயில்<br>கோயில் வெண்ணி அஞ்சல் – 614 403<br>நீடாமங்கலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூர் – திருவாரூர் பேருந்து பாதையில் சாலியமங்கலம் கடந்து இடப்பக்கம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – மாலை : 06.00 |
| *தொலைபேசி* | 99524 – 92583 (குருக்கள் மகன்) |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டு, சர்க்கரையையும், ரவையையும் சம அளவில் கலந்து பிரகாரத்தில் எறும்புகளுக்கு உணவாக இட்டு வலம் வந்தால், சர்க்கரை நோய் படிப்படியாகக் குறையும், கட்டுப்பாட்டில் இருக்கும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 219–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | முத்தினை பவளத்தை முளைத்த எம்<br>தொத்தினைச் சுடரை சுடர் போல் ஒளிப்<br>பித்தனைக் கொலு நஞ்சினை வானவர்<br>நித்தனை நெருநற் கண்ட வெண்ணியே<br>( அப்பர் – தேவாரம் ) |

## 6. இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்த, இதய நோய், உஷ்ண ரோகம் நீங்க

| *தலம்* | **அன்னியூர்** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ கௌரி – பார்வதி உடனாய<br>ஸ்ரீ அக்னிபுரீஸ்வரர் திருக்கோயில்<br>அன்னியூர் அஞ்சல், குடவாசல் வட்டம்<br>திருவாரூர் மாவட்டம் – 612 201. |
| *வழித்தடம்* | கும்பகோணம் – திருவாரூர் சாலையில், நாச்சியார் கோயிலிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பாதையில் திருவீழிமிழலைக்கு அருகிலுள்ளது. கும்பகோணம் – காரைக்கால் சாலையில் S. புதூர் வழியாக வடமட்டம் வந்து அன்னியூர் அடையலாம். ஆடுதுறையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும் வரலாம். |
| *நேரம்* | காலை : 07.30 – 12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 0435 – 2449578 |
| *வழிபட வேண்டிய முறை* | அக்னி தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ அக்னிபுரீஸ்வரரையும் ஸ்ரீகௌரியையும் வன்னி இலைகளால் அர்ச்சனை மற்றும் அபிஷேகம் செய்து, தயிர்சாதம் நிவேதனம் செய்து வழிபட இரத்தக்கொதிப்பு கட்டுப்படும், உஷ்ணரோகம் நீங்கப் பெறும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 179–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது.<br>தமது இல்லத்தில் அக்னிமூலை சரியாக அமையப் பெறாதவர்கள் இங்கு வந்து வழிபட்டு தோஷப் பரிகாரம் பெறுகின்றனர். திருமணத் தடை நீக்கும் தலமும் கூட. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்<br>தானம் காட்டுவர் தன்னடைந்தார்க் கெலாம்<br>தானம் காட்டித் தன் தாளடைந்தார் கட்கு<br>வானம் காட்டுவர் போல் வன்னியூரரே.<br>( அப்பர் ) |

## 7. கடும் சுரம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **சாட்டியக்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ வேதநாயகி உடனாய<br>ஸ்ரீ வேதபுரீஸ்வரர் திருக்கோயில்<br>சாட்டியக்குடி – கிள்ளுக்குடி அஞ்சல் – 611 109<br>தேவூர் வழி, நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – தேவூர் சாலையிலுள்ளது.<br>திருவாரூர் – நாகப்பட்டினம் சாலையிலுள்ள கீழ்வேளூரிலிருந்து கச்சனம் வழியாகச் செல்லும் திருத்துறைப் பூண்டி சாலையிலுள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04366 - 279410 ; 94424 - 46077 |
| *வழிபட வேண்டிய முறை* | ஜ்வரதேவதை இறைவனை வழிபட்ட தலம்.<br>ஈசனையும், அம்பாளையும் அபிஷேக அர்ச்சனை செய்து வழிபட்டால் சுரம் விலகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | திருவிசைப்பாத் தலம். குபேர ஸ்தலம்.<br>கருவூர் தேவர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு<br>சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு<br>தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு<br>செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே<br>( சம்பந்தர் பதிகம் ) |

## 8. கடும் சுரம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருநெல்வேலி** |
| *விலாசம்* | ஸ்ரீ காந்திமதியம்மன் உடனாய<br>ஸ்ரீ நெல்லையப்பர் திருக்கோயில்<br>திருநெல்வேலி – 627 006. |
| *வழித்தடம்* | பெரிய நகரம். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ரயில் மற்றும் பேருந்து வசதியுள்ளது. |
| *நேரம்* | காலை : 05.30 – 12.30 மாலை : 04.00 – 09.00 |
| *தொலைபேசி* | 0462 - 2339910 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்து ஜ்வரதேவருக்கு மிளகு அரைத்துப் பூசி வெந்நீரால் அபிஷேகம் செய்து, அர்ச்சனை செய்து வழிபட கடும் சுரம் நீங்குகின்றது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 258–ஆவது தலம்.<br>பாண்டிய நாட்டுத் தலம். சம்பந்தர் பாடல் பெற்றது.<br>தாமிரசபை. பொள்ளாப் பிள்ளையார் சன்னிதி சிறப்பு. புனர்பூச நட்சத்திரக் கோயில்.<br>சஷ்டியப்த பூர்த்தி செய்ய உகந்த தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | மருந்தவை மந்திர மறுமை நன்னெறியவை மற்றுமெல்லாம்<br>அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே<br>பொருந்து தண் புறவினிற் கொன்றை பொன் சொரிதரத்துன்றுபைம்பூ<br>செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலியுறை செல்வர்தாமே<br>( சம்பந்தர் ) |

## 9. இருதய நோய் குணமாக

| | |
|---|---|
| *தலம்* | **திருநின்றவூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ மரகதாம்பாள் உடனாய<br>ஸ்ரீ இருதயாலீஸ்வரர் திருக்கோயில்<br>திருநின்றவூர் - 602 204<br>திருவள்ளூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | சென்னை திருவள்ளூர் சாலையில் ஆவடியை அடுத்து உள்ளது. (33 கி.மீ.) |
| *நேரம்* | காலை : 07.00 - 12.30 மாலை : 05.00 - 08.30 |
| *தொலைபேசி* | 94441 - 64108 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனின் கருவறையே இதய வடிவில் அமைந்து உள்ளது. ஸ்ரீ இருதயாலீஸ்வரரையும், ஸ்ரீ மரகதாம் பாளையும் அர்ச்சனை அபிஷேகம் செய்து வழிபட இருதய நோய் நீங்கி குணம் பெறுவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | பூசலார் நாயனார் தலம்.<br>அருகில் 58வது வைணவ திவ்ய தேச<br>ஸ்ரீ பக்த வத்சலப் பெருமாள் கோயிலுள்ளது. |
| | இதேபோல மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் 5 கி.மீ.ல் உள்ள மூவலூரில் உள்ள ஸ்ரீசௌந்தர நாயகி, ஸ்ரீ மங்கள நாயகியை உத்திர நட்சத்திரத்தன்று 11 நெய் விளக்கேற்றி வழிபட்டால் இதய நோய் குணமடைகிறது என்பது ஐதீகம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய விநாசனாய த்ரைலோக்ய நாதாய ஸ்ரீமகாவிஷ்ணவே நமஹ<br>அச்சுதானந்த கோவிந்த விஷ்ணோ: நாராயணாம்ருதா<br>ரோகான்மே நாசயாசேஷான் ஆசு தன்வந்த்ரே ஹரே:<br>( தன்வந்திரி மந்திரம் ) |

## 10. தீராத வயிற்று வலி விலக

| | |
|---|---|
| *தலம்* | **அன்னப்பன்பேட்டை** |
| *விலாசம்* | ஸ்ரீ சுந்தராம்பாள் உடனாய<br>ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயில்<br>அன்னப்பன்பேட்டை<br>தென்னாம்பட்டனம் அஞ்சல் – 609 106<br>சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சீர்காழி – காவிரிப் பூம்பட்டினம் சாலையில், திருவெண்காட்டிற்கு அருகிலுள்ள மங்கைமடம் பாதையிலுள்ளது. |
| *நேரம்* | காலை : 09.00 – 10.00 மாலை : 06.00 – 07.00 |
| *தொலைபேசி* | 04364 – 292179, 93605 – 77673 |
| *வழிபட வேண்டிய முறை* | சுவாமி, அம்பாளுக்கு வில்வத்தால் அர்ச்சனை செய்து, அந்த வில்வத்தை பிரசாதமாக சாப்பிட்டு வருவதன் மூலமாக வயிற்று வலி மற்றும் இதர நோய்களும் நீங்கப் பெற்றவர்களாக மாறுவது கண்கூடாக காணப்படும் ஒன்று. தீராத வயிற்று வலி உள்ளவர்கள் 11 திங்கட்கிழமை இந்த தலத்தின் முழு பதிகத்தை வீட்டிலேயே பாராயணம் செய்து, 12–வது திங்கட்கிழமை, தலத்திற்கு நேரில் வந்து பிரார்த்தனை செய்ய, சிறந்த பலன் நிச்சயம் உண்டு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அருகில் உள்ள வைத்தீஸ்வரன் கோயிலையும் வழிபட்டு வாருங்கள் (வ.எண். 45)<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 62–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது. |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | மடல் வரையின் மதுவிம்மு சோலை வயல் சூழ்ந்தழகாருங்<br>கடல் வரை ஓதம் கலந்துமுத்தம் சொரியும் கலிக்காமூர்<br>உடல் வரை இன்னுயிர் வாழ்க்கை யாயவொருவன் கழலேத்த<br>இடர் தொடரா வினையான சிந்தும் மிறைவன் னருளாமே<br>(சம்பந்தர் தேவாரம் ) |

## 11. சூலை நோய் - தீராத வயிற்று வலி தீர

| | |
|---|---|
| *தலம்* | **திருவதிகை** |
| *விலாசம்* | ஸ்ரீதிரிபுரசுந்தரி உடனாய<br>ஸ்ரீ வீரட்டேஸ்வரர் திருக்கோயில்<br>திருவதிகை – பண்ருட்டி அஞ்சல் – 607 106<br>கடலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | பண்ருட்டியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 04.00 – 09.00 |
| *தொலைபேசி* | 94427 - 80111 மாதத்தின் 1–14 தேதி வரை<br>94439 - 88779 மாதத்தின் 15–31 தேதி வரை |
| *வழிபட வேண்டிய முறை* | அட்டவீரட்டானத் தலம். அப்பர், இத்தலத்து ஈசனையும், அம்பாளையும் பாடித்தொழுது தன் கொடிய சூலை நோய் நீங்கப் பெற்றார். ஈசன் வீரட்டேஸ்வரரையும், அம்பாள் திரிபுர சுந்தரியையும் அர்ச்சனை செய்து வழிபட சூலை நோய் நீங்கும். கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | 39-வது தேவாரத் திருத்தலம். நடுநாட்டுத் தலம். மூவர் பாடியது. |
| | இதே போல திருநெல்வேலி – தென்காசி சாலையில் உள்ள பாவூர் சத்திரத்திலிருந்து 2 கி.மீ.ல் உள்ள கீழப்பாவூர் ஸ்ரீ அலர்மேல் மங்கை பத்மாவதி உடனாய ஸ்ரீ பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயிலில் ஸ்ரீ நரசிம்மருக்கு (16 கரம்) பால் மற்றும் இளநீர் அபிஷேகம் செய்து வழிபட்டால் சூலை நோய் நீங்கும்.<br>காலை : 07.30 – 10.30 மாலை : 05.00 – 07.30<br>94423 – 30643 |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கூற்றாயினவாறு விலக்ககிலீர், கொடுமைபல செய்தன தான் அறியேன்<br>ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்<br>தோற்ற தென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட<br>ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறை அம்மானே!<br>( அப்பர் – தேவாரம் ) |

## 12. மஞ்சள் காமாலை நோய் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **மூலனூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தர்ய நாயகி உடனாய<br>ஸ்ரீ சோளீஸ்வரர் திருக்கோயில்<br>மூலனூர் அஞ்சல்– 638 106<br>தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கரூர் – தாராபுரம் சாலையில் தாராபுரத்திலிருந்து 25கி.மீ.ல் உள்ளது. சின்னதாராபுரம், கன்னிவாடிக்கு அடுத்து உள்ளது. வெள்ளக்கோயிலிலிருந்தும் வரலாம் (18 கி.மீ.). |
| *நேரம்* | காலை : 07.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04202 - 227838 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்தில் வியாழன் மற்றும் ஞாயிறன்று நீராடிவிட்டு, காலை 7.00 மணிக்கு வெறும் வயிற்றில் நீர் கூட அருந்தாமல் வந்து வழிபட்டால், மஞ்சள் காமாலை நோய்க்கு வேர் பூஜிக்கப்பட்டு தரப்படுகிறது. அதை மாலையாக்கி அணிய மூன்று நாட்களில் நோய் நீங்கி குணம் கிடைக்கின்றது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவார வைப்புத்தலம். விஷக்கடி தீர்க்கும் தலமும் கூட. திருமூலர் வழிபட்ட தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு<br>சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு<br>தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு<br>செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே<br>( சம்பந்தர் பதிகம் ) |

## 13. உடல் அங்கக் குறைபாடுகள், பாலாரிஷ்டம், நரம்பு தளர்ச்சி தொடர்பான நோய் நீங்க

| *தலம்* | **கூனஞ்சேரி** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ பார்வதி அம்பாள் உடனாய<br>ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில்<br>கூனஞ்சேரி – 612 301, சுவாமிமலை<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவையாறு – கும்பகோணம் (கல்லணை சாலையில்) சுவாமி மலைக்கு சுமார் 2 கி.மீ. முன்பாக இடதுபுறச் சாலையில் சுமார் 3 கி.மீ.ல் உள்ளது. சுவாமிமலையிலிருந்து நேரடியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 09.00 – 12.00 ஒரு கால பூஜை.<br>(அர்ச்சகர் வீடு அருகிலேயே உள்ளது) |
| *தொலைபேசி* | 98431 – 38641, 95859 – 67429 |
| *வழிபட வேண்டிய முறை* | அஷ்டமி, சோமவாரம், பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் எட்டு வகை மலர்கள் கொண்டு இங்குள்ள அஷ்ட லிங்கங்களுக்கு நெய் விளக்கேற்றி, அபிஷேக ஆராதனைகள் செய்து மனமுருகி வழிபட்டால் இக்குறைகள் நிவர்த்தியாகின்றன என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | அருகிலேயே 10–ஆம் வைணவ திவ்ய தேசமான திருப்புள்ளம் பூதங்குடியும், 11–ஆம் வைணவ திவ்ய தேசமான திரு ஆதனூரும், தொண்டரடிப் பொடியாழ் வாரின் அவதாரத் தலமான திருமண்டங்குடியும் உள்ளன. அவசியம் தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய விநாசனாய த்ரைலோக்ய நாதாய ஸ்ரீமகாவிஷ்ணவே நமஹ<br>அச்சுதானந்த கோவிந்த விஷ்ணோ: நாராயணாம்ருதா<br>ரோகான்மே நாசயாசேஷான் ஆசு தன்வந்த்ரே ஹரே:<br>( தன்வந்திரி மந்திரம் ) |

## 14. கோமாவிலிருந்து எழுந்திருக்க, காக்காய் வலிப்பு நோய் குழந்தைகளின் பாலதோஷம் குணமாக

| | |
|---|---|
| *தலம்* | **திருவாசி** |
| *விலாசம்* | ஸ்ரீ பாலாம்பிகை உடனாய<br>ஸ்ரீ மாற்றறிவரதர் திருக்கோயில்<br>திருவாசி அஞ்சல் – 621 216<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – சேலம் சாலையில்<br>திருச்சிராப்பள்ளியிலிருந்து 12 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 – 12.00 மாலை : 04.30 – 08.30 |
| *தொலைபேசி* | 0431 – 6574972 92452 – 57239 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ மாற்றறிவரதரையும், ஸ்ரீ பாலாம்பிகையையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் முயலகன் நோய் எனப்படும் காக்காய் வலிப்பு நோய் விலகும். இத்திருத்தலத்தில் நடராசர் திருவடியில் முயலகனுக்குப் பதில் பாம்பு உள்ளது.<br>குழந்தைகளுக்கு ஏற்படும் பாலதோஷம் நிவர்த்தியாக, அம்பாளுக்கு 3 அல்லது 5 கிழமைகள் ( வெள்ளி உகந்தது ) குழந்தையுடன் வந்து அர்ச்சனை செய்து வழிபட, பாலதோஷம் நிவர்த்தியாகும்.<br>திருமணத்தடை நீக்கும் தலமும் கூட.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 116–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்<br>பணிவளர் கொங்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்<br>அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சிலாச் சிராமத் துறைகின்ற<br>மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்போ<br>( சம்பந்தர் ) |

# 15. காக்காய் வலிப்பு நோய் விலக

| | |
|---|---|
| *தலம்* | **திருவீழிமிழலை** |
| *விலாசம்* | ஸ்ரீ பத்ரவல்லி உடனாய<br>ஸ்ரீ பத்ரவல்லீஸ்வரர் திருக்கோயில்<br>திருவீழிமிழலை - 609 505, திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் பூந்தோட்டம் வழியாகச் செல்லலாம். நாச்சியார் கோயில் – பூந்தோட்டம் சாலை வழியாகவும் செல்லலாம். கும்பகோணம்–காரைக்கால் சாலையில் உள்ள S.புதூர் வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 08.30 - 12.30 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 04366 - 273050 94439 - 24825 |
| *வழிபட வேண்டிய முறை* | இக்கோயிலுள் உள்ள வல்லிதீர்த்தக் கிணற்றில் தொடர்ந்து ஆறு ஞாயிற்றுக்கிழமைகள் நீராடி ஈசனுக்கும், அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனை செய்து மனமுருகி பிரார்த்தித்து வழிபட்டால் குறை நீங்கும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | மிக அருகில் 178–வது தேவாரத் திருத்தலம் – மூவரால் பாடப்பெற்ற திருவீழிநாதர் திருக்கோயில் உள்ளது. திருமணத் தடை நீக்கும் தலம். சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் செய்ய உகந்த தலம். தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் இங்கு வந்து முறையாக வழிபாடு செய்யலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய விநாசனாய த்ரைலோக்ய நாதாய ஸ்ரீமகாவிஷ்ணவே நமஹ<br>அச்சுதானந்த கோவிந்த விஷ்ணோ: நாராயணாம்ருதா<br>ரோகான்மே நாசயாசேஷான் ஆசு தன்வந்த்ரே ஹரே:<br>( தன்வந்திரி மந்திரம் ) |

# 16. சிறுநீரக கோளாறுகளைக் கட்டுப்படுத்த

| | |
|---|---|
| *தலம்* | **ஊட்டத்தூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனாய<br>ஸ்ரீ சுத்தரத்னேஸ்வரர் திருக்கோயில்<br>ஊட்டத்தூர் அஞ்சல் – – 621 109, பாடாலூர் வழி<br>லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – சென்னை நெடுஞ்சாலையில் பாடாலூருக்கு வலப்பக்கம் புள்ளம்பாடி சாலையில் 5 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 –12.00 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 97880 – 62416 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்தில் நடராசர் மிக விசேஷம். ஆலிங்கநதனம், பஞ்சநதனம், சிங்கநதனம், யானைநதனம், யாழிநதனம் என ஐந்துவகை சிலாக் கற்களில் பஞ்சநதக் கல்லால் செய்யப்பட்டவர் இவர்.<br>ஸ்ரீநடராசரை வழிபட்டால் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட கோளாறுகளை நீக்கியருள்வார். மேலும் இழந்த பதவியை மீட்டுத் தருவார். ஒரு கிலோ வெட்டி வேரை 48 துண்டுகளாக வெட்டி ஒரு கதம்ப மாலையாக கட்டிச் சென்று நடராசருக்கு சாத்தவேண்டும். பிறகு அந்த வேரை ஒவ்வொரு நாளைக்கும் ஒரு துண்டாக நீரில் ஊறவைத்து, காலை எழுந்தவுடன் அந்நீரை வடிகட்டி 48 நாட்களுக்கு பருகி வந்தால் சிறுநீரக உபாதைகள் நீங்குகின்றன. 11 நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | குழந்தைகள் மனபயம் போக்கும் தலமும் கூட.<br>(பார்க்க வ.எண். 71) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய விநாசனாய த்ரைலோக்ய நாதாய ஸ்ரீமகாவிஷ்ணவே நமஹ<br>அச்சுதானந்த கோவிந்த விஷ்ணோ: நாராயணாம்ருதா<br>ரோகான்மே நாசயாசேஷான் ஆசு தன்வந்த்ரே ஹரே:<br>( தன்வந்திரி மந்திரம் ) |

## 17. புற்று நோய் குணமாக

| | |
|---|---|
| *தலம்* | **நண்டாங்கோயில் (திருந்துதேவன்குடி)** |
| *விலாசம்* | ஸ்ரீ அருமருந்தம்மை, அபூர்வநாயகி உடனாய<br>ஸ்ரீ கற்கடேஸ்வரர் திருக்கோயில்<br>திருந்துதேவன்குடி, திருவிசலூர் அஞ்சல்<br>வேப்பத்தூர் – 612 105, திருவிடைமருதூர் வட்டம்<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – மயிலாடுதுறை (கல்லணை) சாலையில் வேப்பத்தூருக்கு வடக்கே திருவிச நல்லூரை அடுத்து உள்ளது. அணைக்கரை சாலை அரசுக் கல்லூரியிலிருந்தும் செல்லலாம் (1 கி.மீ.) |
| *நேரம்* | காலை : 09.00 – 01.00 மாலை : 04.00 – 06.00 |
| *தொலைபேசி* | 0435 - 2000240, 99940 - 15871, 99650 - 77862 |
| *வழிபட வேண்டிய முறை* | காலை வேளையில் ஸ்ரீ அருமருந்தம்மைக்கு எண்ணெய் சார்த்தி வழிபட்டு, அங்கு தரப்படும் எண்ணெயை நம்பிக்கையுடன் உட்கொண்டால் நோய்கள் படிப்படியாக குறைகின்றன என்பது அன்பர்களின் அனுபவமாகும்.<br>(அபிஷேகம் 10.40 – 12.00)<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 96–ஆவது தலம். சோழநாட்டு வடகரைத் தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. ஆயில்ய நட்சத்திரக்கோயில். சந்திர தோஷ நிவர்த்தித் தலம். கடகராசி பரிகாரத்தலம்.<br>அருகில் 97–ஆவது தேவாரத் திருத்தலமான திருவிசநல்லூரில் உள்ள சதுர்கால பைரவர் விசேஷம். ரிஷப ராசித் தலம் இது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்/ ஸ்லோகம்* | 1) மருந்துவேண்டில் இவை, மந்திரங்கள் இவை<br>புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை,<br>திருந்துதேவன் குடிதேவர் தேவு எய்திய<br>அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே ( சம்பந்தர் )<br>2) ஓம் நமோ பகவதே... என்னும் தன்வந்திரி ஸ்லோகம் படிக்கவும்.<br>( பக்கம் 13 ) |

## 18. எலும்பு முறிவு, பக்கவாதம் குணமடைய

| | |
|---|---|
| *தலம்* | **திருமாகறல்** |
| *விலாசம்* | ஸ்ரீ திரிபுவன நாயகி உடனாய<br>ஸ்ரீ திருமாகறலீஸ்வரர் திருக்கோயில்<br>மாகறல் கிராமம் – 631 603<br>காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| *வழித்தடம்* | காஞ்சிபுரம் – உத்திரமேரூர் – ஓரிக்கை பாதையில் செய்யாற்றின் கரையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 044 - 27240294 |
| *வழிபட வேண்டிய முறை* | எலும்பு முறிவு, பக்கவாதம் போன்றவற்றால் அவதியுறுபவர்கள், திருமாகறலீஸ்வரரையும் அம்பாளையும் அர்ச்சனை செய்து 48 நாட்கள் கீழ்வரும் பாடலை தினமும் ஓதி வழிபட, விரைவில் குணமடைவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 7ஆவது தலம்.<br>தொண்டை நாட்டுத் திருத்தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல் விளையாடல் அரவம்<br>மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடு பொழில் மாகறல் உளான்<br>கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான்<br>செங்கண் விடை அண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.<br>( சம்பந்தர் ) |

## 19. வெண்குஷ்டம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **ராஜேந்திரப்பட்டணம் (திருஎருக்கத்தம்புலியூர்)** |
| *விலாசம்* | ஸ்ரீ நீலோற்பலாம்பாள் உடனாய<br>ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்<br>திருஎருக்கத்தம்புலியூர்<br>ராஜேந்திரப்பட்டணம் அஞ்சல் –608 703<br>விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | விருத்தாசலம் – ஜெயங்கொண்டம் சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 11.30 மாலை : 04.00 – 08.30 |
| *தொலைபேசி* | 99761 – 73524 (குருக்கள்) |
| *வழிபட வேண்டிய முறை* | (திருக்குளத்தில்) நீராடிவிட்டு, ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் வெண்குஷ்டம் மற்றும் கர்ம வினைகள் தீரும்.<br>ஊமைத் தன்மை நீங்கவும் இங்கு வந்து வழிபடலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 36–ஆவது தலம்.<br>நடுநாட்டுத் திருத்தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>திருவோணம் நட்சத்திரக் கோயில். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | படையார் தரு பூதப் பகடுஆர் உரிபோர்வை<br>உடையான் உமையோடும் உடனாய் இடுகங்கைச்<br>சடையான் எருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்<br>விடையான் அடியேத்த மேவா வினைதானே.<br>( சம்பந்தர் ) |

# 20. வெண்குஷ்டம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **தலையாலங்காடு** |
| *விலாசம்* | ஸ்ரீ பாலாம்பிகா உடனாய<br>ஸ்ரீ நர்த்தனபுரீஸ்வரர் திருக்கோயில்<br>தலையாலங்காடு, (53 சிமிழ்),<br>செம்பங்குடி அஞ்சல் - 612 603<br>குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் - கும்பகோணம் சாலையில் வலப்பக்கம் உள்ளது. (தலையாலங்காடு பேருந்து நிறுத்தம்) |
| *நேரம்* | காலை : 08.00 - 10.30 மாலை : 05.00 - 07.00 |
| *தொலைபேசி* | 04366 - 269235 |
| *வழிபட வேண்டிய முறை* | இது ரோக நிவர்த்திப் பரிகாரத் தலம். திருக்குளத்தில் 48 நாட்கள் நீராடி ஸ்ரீ நர்த்தனபுரீஸ்வரரையும், ஸ்ரீ பாலாம்பிகையையும் அர்ச்சனை செய்து தீபமிட்டு உறுதியுடன் வழிபட்டால் வெண்குஷ்டம் நீங்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| | இதே போல கருங்குஷ்டம் உள்ளவர்கள் நீடா-மங்கலம் - மன்னார்குடி சாலையிலுள்ள பூவனூர் சிவன் கோயிலிலுள்ள இரண்டாவது தீர்த்தமாகிய கிருஷ்ண குஷ்டஹரத்தில் நீராடி வழிபட நோய் தீரும். 04367 - 261182 (பார்க்க வ.எண். 21 ) |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 210-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது. கபில முனிவர் பூஜித்தது.<br>சனி தோஷ நிவர்த்தித் தலமும் கூட. |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | மெய்த்தவத்தை வேதத்தை வேதவித்தை<br>விலங்குஇள மாமதிசூடும் விகிர்தன் தன்னை<br>எய்த்தவமே யுழிதந்த ஏழையேனை<br>இடர்க்கடலில் வீழாமே ஏறவாங்கி<br>பொய்த்தவத்தார் அறியாதநெறி நின்றானைப்<br>புனல் கரந்திட்டு உமையோடு ஒருபாக நின்ற<br>தத்துவனைத் தலையாலங்காடன் தன்னைச்<br>சாராதே சாலநாள் போக்கினேனே (அப்பர்) |

## 21. விஷக்கடியிலிருந்து குணம் பெற

| | |
|---|---|
| *தலம்* | **பூவனூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ கற்பகவல்லி உடனாய<br>ஸ்ரீ புஷ்பவன நாதர் திருக்கோயில்<br>பூவனூர் அஞ்சல் – 612 803, திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | நீடாமங்கலம் – மன்னார்குடி சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 12.00 மாலை : 04.30 – 07.30 |
| *தொலைபேசி* | 97870 – 92863, 98653 – 28552 |
| *வழிபட வேண்டிய முறை* | ஞாயிறு காலை (திருக்குளத்தில்) நீராடி, 07.30 மணிக்குள் கோயிலுக்குள் வந்து, ஸ்ரீ சாமுண்டீஸ்வரியை அர்ச்சனை செய்து வழிபட்டு, இங்கு தரப்படும் வேரைக் கட்டிக் கொண்டால் விஷக்கடிகளின் பாதிப்பிலிருந்து குணம் பெறலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 220 ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது.<br>உத்திராட நட்சத்திரக்கோயில். |
| | இதேபோல் தாராபுரத்தின் அருகிலுள்ள மூலனூர் விஷக்கடி தீர்க்கும் தலம். (பார்க்க வ.எண்.12) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான்<br>நாவினூறு நூறாயிர நண்ணினார்<br>பாவமாயின பாறிப் பறையவே<br>தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே<br>( அப்பர் ) |

## 22. கண் நோய்கள் தீர

| | |
|---|---|
| *தலம்* | **திருக்காரவாசல்** |
| *விலாசம்* | ஸ்ரீ கைலாச நாயகி உடனாய<br>ஸ்ரீ கண்ணாயிரமுடையார் திருக்கோயில்<br>திருக்காரவாசல் அஞ்சல் - 610 202<br>திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 - 12.00 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 80982 - 74712 |
| *வழிபட வேண்டிய முறை* | திருக்குளத்தில் நீராடி, கண்ணாயிரநாதருக்கு அபிஷேகத்திற்கு மூலிகைத் தைலமும், பிரசாதத்திற்குத் தேனில் ஊறவைத்த அத்திப் பழமும் தந்து, திரும்ப பெற்றுக் கொண்டு, 48 நாட்கள் தைலத்தை சிரசில் தேய்த்தும், தேன் அத்திப்பழத்தை சாப்பிட்டும் வந்தால் கண் நோய் குணமாகும்.<br>சுவாமி, அம்பாள், தியாகராஜர் சன்னதிக்கு நெய் விளக்கேற்றி வழிபட வேண்டும். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 236-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>சப்தவிடங்கத் தலங்களுள் ஆதிவிடங்கத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | 1. தாயானே தந்தையுமாகிய தன்மைகள்<br>ஆயானே ஆய நல்லன்பர்க் கணியானே<br>சேயானே சீர் திகழுந் திருக் காறாயில்<br>மேயானே என்பவர்மேல் வினை மேவாவே. ( சம்பந்தர் )<br>2. பக்கம் 111-ல் குறிப்பிட்டுள்ள தேவார பாடலையும் துதிக்கவும். |

## 23. கண் பார்வைக் கோளாறு நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருவெள்ளியங்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ மரகதவல்லி உடனாய<br>ஸ்ரீ கோலவில்லி ராமன் திருக்கோயில்<br>திருவெள்ளியங்குடி, திருமங்கலக்குடி (வழி)<br>பாலாகுடி அஞ்சல் - 612 102<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - அணைக்கரை நெடுஞ்சாலையில் சோழபுரம் மற்றும் திருப்பனந்தாளிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 12.30 மாலை : 05.00 - 07.00 |
| *தொலைபேசி* | 98434 - 70120, 94433 - 96212, 95859 - 81792 |
| *வழிபட வேண்டிய முறை* | பெருமாளையும், தாயாரையும் 48 நாட்கள் விளக்கேற்றி வழிபட கண் பார்வை சிறப்புறும்.<br>சுக்ராச்சாரியாருக்கு அளிக்கப்பட்ட கண் ஒளியே - நேத்ர தீபமே - இத்தலத்தில் தூண்டா விளக்காக ஒளி வீசி பக்தர்களின் கண் நோயைப் போக்கிக் கொண்டிருப்பதாக ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | நான்கு யுகம் கண்ட பெருமாள் இவர்.<br>வைணவ திவ்ய தேசங்களில் 22-ஆவது தலம்.<br>சோழநாட்டுத் திருப்பதி. பூரம் நட்சத்திரக் கோயில்.<br>திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது.<br>எழுகின்ற நிலையில் சங்கு சக்கரத்துடன் உள்ள சதுர்புஜ கருடாழ்வார் இத்தலத்தில் மிக விசேஷம்.<br>கஞ்சனூர் போலவே இதுவும் ஒரு சுக்கிரத்தலம்.<br>(பார்க்க வ.எண். 47) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | 1. ஒள்ளிய கருமம் செய்வனென் றுணர்ந்த மாவலி வேள்வியில் புக்கு,<br>தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு திக்குற வளர்ந்தவன் கோயில்,<br>அள்ளியம் பொழில்வா யிருந்துவாழ் குயில்கள் அரியரி யென்றவை யழைப்ப,<br>வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான் திருவெள்ளி யங்குடி யதுவே.<br>( திருமங்கையாழ்வார் )<br>2. பக்கம் 111- ல் குறிப்பிட்டுள்ள தேவார பாடலையும் படிக்கவும். |

## 24. கண் நோய் விலக

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பயத்தங்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ நேத்ராம்பிகை உடனாய<br>ஸ்ரீ முக்தபுரீஸ்வரர் திருக்கோயில்<br>திருப்பயற்றூர், திருப்பயத்தங்குடி அஞ்சல்– 610 101<br>நாகப்பட்டினம் வட்டம் & மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் கங்களாஞ் சேரியை அடுத்து கிழக்கேச் செல்லும் நாகூர் சாலையில் 5 கி.மீ. தொலைவில் உள்ள கீழவைப்பூரிலிருந்து வடக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – 12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04366 – 272423 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்தில் கருணா தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ நேத்ராம்பிகையை அர்ச்சனை செய்து வழிபட்டால் கண் நோய்கள் விலகும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 195–ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | 1. தந்தையாய்த் தாயுமாகித் தரணியாய்த் தரணி யுள்ளார்க்கு<br>எந்தையும் என்ன நின்ற ஏழுலகு உடனுமாகி<br>எந்தை யெம்பிரானே என்றென்று உள்குவார் உள்ளத்தென்றும்<br>சிந்தையும் சிவமுமாவர் திருப்பயற் றூரனாரே. (அப்பர்)<br>2. பக்கம் 111– ல் குறிப்பிட்டுள்ள தேவார பாடலையும் துதிக்கவும். |

# 25. கண் புரை முற்றாமல் இருக்க

| | |
|---|---|
| *தலம்* | **மலையடிப்பட்டி** |
| *விலாசம்* | ஸ்ரீ கமலவல்லி நாச்சியார் உடனாய<br>ஸ்ரீ அனந்த பத்மநாப சுவாமி – கண் நிறைந்த பெருமாள் திருக்கோயில்<br>மலையடிப்பட்டி – 622 502<br>குளத்தூர் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம். |
| *வழித்தடம்* | கீரனூரிலிருந்து கிள்ளுக்கோட்டை செல்லும் வழியில் 17 கி.மீ.ல் உள்ளது. (பஸ் K3, K8, K12)<br>திருச்சிராப்பள்ளியிலிருந்து துவாக்குடி, அசூர் டோல்கேட் தாண்டி வலதுபக்கம் திரும்பி செங்களூர் மார்க்கமாகவும் செல்லலாம். (பஸ் 26, 100) |
| *நேரம்* | காலை : 06.00 – 10.00 மாலை : 04.00 – 06.30 |
| *தொலைபேசி* | 94432-07299, 99407-49234, 97878-18987 |
| *வழிபட வேண்டிய முறை* | குளத்தில் நீராடி பெருமாளையும், தாயாரையும் அர்ச்சனை செய்து வழிபட கண் நோய்கள் – கண்புரை முற்றாமல் இருக்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தொல்பொருள் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பூஜைப் பொருட்களை வீட்டிலிருந்தே கொண்டு செல்வது உசிதம்.<br>அருகிலே திருவாகீசர் சிவன் கோயிலுள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | 1. த்வரிதம் சக்ஷுரோகான் சமய சமய, மம ஜாத ரூபம் தேஜ: தர்சய தர்சய !!<br>யதா ஹம் அந்தோ நஸ்யாம் ததா கல்பய கல்பய. கல்யாணம் குரு குரு!<br>யானி மம பூர்வஜன்மோ பார்ஜிதானி<br>சக்ஷுப்ரதிரோதக துஷ்க்ருதானி ஸர்வாணி நிர்மூலய நிர்மூலய !!<br>2. பக்கம் 111 ல் குறிப்பிட்டுள்ள தேவார பாடலையும் துதிக்கவும். |

## 26. சித்தப்பிரமை, ஏவல் பில்லி சூனியம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருமுருகன்பூண்டி** |
| *விலாசம்* | ஸ்ரீ ஆலிங்க பூஷண ஸ்தானாம்பிகை உடனாய<br>ஸ்ரீ முருக நாதேஸ்வரர் திருக்கோயில்<br>திருமுருகன்பூண்டி அஞ்சல் – 641 652<br>அவிநாசி வட்டம், திருப்பூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | அவிநாசி – திருப்பூர் சாலையில் 5 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 05.30 – 01.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04296 – 273507, 94434 – 59074 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருக்கோயிலிலுள்ள கிணற்று நீரில் தொடர்ந்து நீராடி, ஈசனையும் அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் சித்தப்பிரமை, மனநலக் குறைபாடு, பில்லி சூனியம் போன்றவை நீங்கும்.<br>தொல்லியல் துறையால் பராமரிக்கப்படும் இக்கோயிலில் முருகன் மிக விசேஷம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 260–ஆவது தலம்.<br>கொங்குநாட்டுத் திருத்தலம்.<br>சுந்தரர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்<br>திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டாறலைக்குமிடம்<br>முடுகுநாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டிமா நகர்வாய்<br>இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கிங்கிருந்தீரெம் பிரானிரே.<br>( சுந்தரர் ) |

## 27. சித்தப்பிரமை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருஏடகம்** |
| *விலாசம்* | ஸ்ரீ ஏலவார் குழலி உடனாய<br>ஸ்ரீ ஏடகநாதேஸ்வரர் திருக்கோயில்<br>திருவேடகம் அஞ்சல் - 625 234<br>வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம். |
| *வழித்தடம்* | மதுரையிலிருந்து துவரிமான், தேனூர் வழியே (திண்டுக்கல் சாலையில்) சோழவந்தான் பேருந்து பாதையில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 - 12.00 மாலை : 04.30 - 08.00 |
| *தொலைபேசி* | 04543 - 258124 |
| *வழிபட வேண்டிய முறை* | பிரம்மதீர்த்தக்குளத்தில் நீராடி, ஈசனையும் அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் சித்தப்பிரமை, பில்லி சூனியம் நீங்கும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 248 –ஆவது தலம்.<br>பாண்டிய நாட்டுத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்ற தலம்.<br>இங்கு மோட்ச தீபம் ஏற்றினால் முன்னோர்களது ஆத்மா சாந்தியடையும் என்பது ஐதீகம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ஏலமார் தருகுழல் ஏழையோ டெழில் பெறும்<br>கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்<br>சாலமா தவிகளுஞ் சந்தனஞ் சண்பகம்<br>சீலமார் ஏடகஞ் சேர் தலாஞ் செல்வமே<br>(சம்பந்தர்) |

## 28. மனநோய் குணமாக

| | |
|---|---|
| *தலம்* | **குணசீலம்** |
| *விலாசம்* | ஸ்ரீ பிரஸன்ன வேங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில்<br>குணசீலம் – 621 204, முசிறி வட்டம்<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – முசிறி சாலையில் உள்ள தலம். |
| *நேரம்* | காலை : 08.30 – 01.00 மாலை : 04.30 – 08.30 |
| *தொலைபேசி* | 04326 – 275210, 275310, 89032 – 75310 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்தில் ( 48 நாட்கள் ) தங்கி, தினமும் காலையில் நீராடி, பெருமாளையும், தாயாரையும் வேண்டிக்கொள்ள அவர்கள் மீது தீர்த்தம் தெளிக்கப்படுகிறது. பைத்தியம், பில்லி சூனியம், செய்வினை நீங்கி குணம் கிட்டுகின்றது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | பெருமாள் வலது கரத்தில் செங்கோலுடன் காட்சியருளுகின்றார். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருத கலச ஹஸ்தாய சர்வாமய விநாசனாய த்ரைலோக்ய நாதாய ஸ்ரீமகாவிஷ்ணவே நமஹ<br>அச்சுதானந்த கோவிந்த விஷ்ணோ: நாராயணாம்ருதா<br>ரோகான்மே நாசயாசேஷான் ஆசு தன்வந்த்ரே ஹரே:<br>( தன்வந்த்ரி மந்திரம் ) |

## 29. பேய், பிசாசு, பில்லி சூனியம், மனப்பிரமை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **சோளிங்கர்** |
| *விலாசம்* | ஸ்ரீ அமிர்தவல்லி உடனாய<br>ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயில்<br>சோளிங்கர் - 631 102, வேலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | வாலாஜா பேட்டையிலிருந்து 23 கி.மீ.லும்<br>அரக்கோணத்திலிருந்து 27 கி.மீ.லும் உள்ளது |
| *நேரம்* | காலை : 08.00 முதல் மாலை : 06.00 வரை |
| *தொலைபேசி* | 04172 - 262225 பெரியமலை - 1300 படிகள்<br>சிறியமலை - 420 படிகள் |
| *வழிபட வேண்டிய முறை* | ஒரு கடிகை (30 நிமிடங்கள்) இத்தலத்தில் தங்கினாலே பீடை விலகி, மோட்சம் கிட்டும். திருக்குளத்தில் நீராடி ஸ்ரீயோக நரசிம்மருக்கு அர்ச்சனை செய்து வழிபட்டு, வலம் வந்தால் அவர்கள் மீது தீர்த்தம் தெளிக்கப்படும். பில்லி சூனியம், பேய், பிசாசு, மனப்பிரமை விலகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களுள் 64-ஆவது தலம். தொண்டைநாட்டுத் திருப்பதி. திருமங்கையாழ்வார், பேயாழ்வார் மங்களாசாசனம் செய்தது.<br>அருகிலேயே சிறிய மலையில் ஸ்ரீ யோக ஆஞ்சனேயர் உள்ளார். அடிவாரத்தில் உள்ள நரசிம்மர் கோயிலையும் தரிசித்தல் வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்<br>தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்,<br>விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை,<br>கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்று கொலோ!<br>( திருமங்கையாழ்வார் ) |

## 30. மரண பயம் விலக

| | |
|---|---|
| *தலம்* | **திருநீலக்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ அநூபமஸ்தநீ உடனாய<br>ஸ்ரீ மனோக்ஞநாத சுவாமி திருக்கோயில்<br>திருநீலக்குடி அஞ்சல் - 612 108<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - காரைக்கால் சாலையில் (13 கி.மீ.) உள்ளது.<br>ஆடுதுறையிலிருந்தும் (3 கி.மீ.) செல்லலாம். |
| *நேரம்* | காலை : 08.00 - 12.00 மாலை : 05.00 - 08.00 |
| *தொலைபேசி* | 91594 - 55050 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனுக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனை செய்து வழிபட்டு நீலப்பட்டுத் துணி, எள் தானம் செய்தால் மரண பயம் நீங்கும். அவ்வாறே ராகு தோஷம் இருந்தால் உளுந்து, நீல வஸ்திரம், வெள்ளிநாகர், வெள்ளிப் பாத்திரம் முதலியவைகளை இத்தலத்தில் தானம் செய்தால், அத்தோஷம் நிவர்த்தியாகும். ஆயுள் விருத்திக்கு எருமை தானம் செய்யலாம். சுவாமிக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் மிக உகந்தது. |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 149 –ஆம் தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது.<br>மார்க்கண்டேயர் சிரஞ்சீவி பட்டம் பெற்ற தலம். |
| | இதேபோல யம பயம் நீக்கும் மற்றொரு தேவாரத் தலம் (115) திருச்சிராப்பள்ளி –துறையூர் சாலையில் மண்ணச்சநல்லூருக்கு அருகிலுள்ள திருப்பைஞ்ஞீலியாகும். (பார்க்க வ.எண். 82) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்<br>செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே<br>அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற் பாதமும் ஆகிவந்து<br>வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே!<br>(அபிராமி அந்தாதி 18–ஆம் பாடல்) |

# 31. யம பயம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **ஸ்ரீ வாஞ்சியம்** |
| *விலாசம்* | ஸ்ரீ மங்களநாயகி உடனாய<br>ஸ்ரீ வாஞ்சிநாத சுவாமி திருக்கோயில்<br>ஸ்ரீ வாஞ்சியம் அஞ்சல் - 610 110<br>நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் மாவட்டம் நன்னிலம் - குடவாசல் சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 12.30 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04366 - 228305 |
| *வழிபட வேண்டிய முறை* | இங்குள்ள குப்த கங்கையில் நீராடி யமனையும், ஈசன், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் யம பயம் நீங்கும். யமனை முதலில் தரிசித்த பிறகே மற்ற தெய்வங்களை வழிபடுதல் வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 187–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது. காசிக்குச் சமமான தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | அருக்கன் அங்கி யமனொடு தேவர்கள்<br>திருத்தும் சேவடியான் திகழும் நகர்<br>ஒருத்தி பாகம் உகந்தவன் வாஞ்சியம்<br>அருத்தியால் அடைவார்க்கு இல்லை அல்லலே.<br>( அப்பர் ) |

## 32. ஆயுள் விருத்தியடைய

| | |
|---|---|
| *தலம்* | **திருத்தலையூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ குங்குமவல்லி உடனாய<br>ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில்<br>திருத்தலையூர் – 621 217<br>துறையூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | துறையூர் – முசிறி சாலையில் 17 கி.மீ.ல் உள்ளது. கண்ணனூர் அருகில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.30 முதல் மாலை : 06.30 வரை |
| *தொலைபேசி* | 97903 – 29346 |
| *வழிபட வேண்டிய முறை* | 6000 ஆண்டுகள் பழமையானது என்று சொல்லப்படுகின்றது. ராவணன் வழிபட்ட லிங்கம் உள்ளது. அம்பாளையும், ஈசனையும் அர்ச்சனை செய்து வணங்கிட ஆயுள் விருத்தியடையும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை ஏற்படும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவார வைப்புத்தலம் – ருத்ர பசுபதிநாயனார் அவதரித்தத் தலம் என்று சொல்லப்படுகின்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல் / ஸ்லோகம்* | 1) திருத்தலையூர்த்தமாண்பு சேடன்பன்னவாலு<br>முரைத்திடவுமடங்காத வுண்மை திகழ்புராணத்தின்<br>பொருட்களையான்சிலதறிந்த புன்மொழியினாற்புகல<br>வரிக்குமனத்தெட்டாத வரனடியைத்தொழுதேய்வோம்<br>2) ஓம் த்ர்யம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்தனம்<br>உர்வாருகமிவ பந்தனான்–ம்ருத்யோர் முக்ஷீய மா ம்ருதாத் \|\|<br>( ம்ருத்யுஞ்ய மந்திரம் ) |

# 33. சத்ரு பயம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **மயிலாப்பூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ பெரியநாயகி உடனாய<br>ஸ்ரீ வாலீஸ்வரர் திருக்கோயில்<br>திருமயிலை – மயிலாப்பூர், சென்னை – 600 004. |
| *வழித்தடம்* | சென்னையில் மயிலாப்பூரில் கோல விழியம்மன் கோயிலருகில் / சென்னை வானொலி நிலையம் அருகில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 044 – 24641670 (கபாலீஸ்வரர் கோயில்) |
| *வழிபட வேண்டிய முறை* | சிவபெருமானே வாலிக்குத் தந்த லிங்கம். வாலி இவரை பூஜித்து எதிரிகளைவிட வலிமை பெற்றான். ஸ்ரீ வாலீஸ்வரரையும், ஸ்ரீ பெரிய நாயகியையும் அர்ச்சனை செய்து வழிபட சத்ரு பயம் விலகும். எதிரிகளை வெற்றி கொள்ளலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இதேபோல இன்னொரு தலம் சென்னை மயிலாப்பூரிலுள்ள கபாலீஸ்வரர் தெப்பக் குளத்தின் தெற்கே உள்ள வெள்ளீச்சுரம் (சரபேஸ்வரர்).<br>(044 – 24611393) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சர்<br>உயிர் அவி உண்ணும் உயர் சண்டி, காளி, ஒளிரும் கலா<br>வயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றே<br>செயிர் அவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே.<br>(அபிராமி அந்தாதி 77–ஆம் பாடல் ) |

## 34. கனவில் அடிக்கடி பாம்பு வந்தால், துரத்தினால்

| | |
|---|---|
| *தலம்* | **கோடகநல்லூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தரநாயகி, ஸ்ரீ பூமி நீளா தேவி உடனாய ஸ்ரீ ப்ருஹன் மாதவன் திருக்கோயில்<br>கோடகநல்லூர் – 627 414<br>நடுகல்லூர் வழி, திருநெல்வேலி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருநெல்வேலி – சேரன்மாதேவி பாதையில் நடுகநல்லூருக்கு தெற்கே 1 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – 11.30 மாலை : 05.00 – 07.30 |
| *தொலைபேசி* | 94862 – 72556 (பட்டர்) ; 94432 – 51906 (டிரஸ்டி) |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்தில் பெருமாளையும், தாயாரையும் அர்ச்சனை செய்து வழிபட கனவில் அடிக்கடி பாம்பு வருவது நீங்கும். பாம்பு பயம் நீங்கும். மேலும் சரும வியாதிகளும் நீங்கும். களத்திர தோஷம், கால சர்ப்ப தோஷம் நிவர்த்தியாகும்.<br>ராகு கேது பரிகாரத்தலமும் கூட.<br>கருடன் சந்நிதியில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | எதிரில் உள்ள நவகைலாயம் செவ்வாய்க்குரிய தலமாகிய கோடகநல்லூர் சிவன் கோயிலையும் அவசியம் தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | பாம்பு துரத்துவதாகவும், கடிப்பதாகவும் கனவு வந்தால் ஸ்ரீமத் பாகவதத்தில் வரும் கஜேந்திர மோட்ச அத்தியாயத்தை பாராயணம் செய்யுங்கள். கீழேயுள்ள மந்திரத்தை காலையில் குளித்து விட்டு பல தடவை சொல்லுங்கள். கனவு வந்த நாளில் சிவ தரிசனம் செய்யுங்கள்.<br>புத்தீந்த்ரிய மன ப்ராணான்<br>பாந்து பார்ஷ த பூஷணா :<br>ஓம் அனந்தாய நமோ நம : |

# 35. கெட்ட கனவுகளிலிருந்து விடுபட

| | |
|---|---|
| *தலம்* | **திருவேளுக்கை** |
| *விலாசம்* | ஸ்ரீ வேளுக்கை வல்லி உடனாய<br>ஸ்ரீ அழகிய சிங்கர் திருக்கோயில்<br>திருவேளுக்கை, காஞ்சிபுரம் – 631 501. |
| *வழித்தடம்* | காஞ்சிபுரம் ஸ்ரீ தீபப் பிரகாசர் திருக்கோயிலுக்கு தெற்கே இத்திவ்ய தேசம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 11.30 மாலை : 04.00 – 07.30 |
| *தொலைபேசி* | 044 – 67271692 |
| *வழிபட வேண்டிய முறை* | கெட்ட கனவுகளால் அவதிப்படுபவர்கள் ஸ்ரீ நரசிம்மரை – அழகிய சிங்கரை அர்ச்சனை செய்து வழிபட, கெட்ட கனவுகளிலிருந்தும், பயத்திலிருந்தும் விடுபடுவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 46–ஆவது திருத்தலம்.<br>பேயாழ்வார், திருமங்கையாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பட்டது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | 1) அச்யுதம் கேசவம் விஷ்ணும் ஹரிம்;<br>ஸோமம் ஜனார்த்தனம் ஹம்ஸம்;<br>நாராயணம் க்ருஷ்ணம் ஜயேத்<br>துர்ஸ்வப்பன சாந்தயே.<br>2) உறங்கச் செல்லுமுன் ஆஞ்சனேயர் ஸ்லோகத்தை சொல்லவும். ( பக்கம் 71, 72 ) |

## 36. நோயின் கடுமை தாங்க முடியாதவர்களுக்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருவைகாவூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ வளைக்கை நாயகி உடனாய<br>ஸ்ரீ வில்வவனேஸ்வரர் திருக்கோயில்<br>திருவைகாவூர் - 612 301<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - திருவையாறு (கல்லணை) சாலையில் அண்டக்குடி கிராமத்திலிருந்து வடக்கே 4 கி.மீ. ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 – 12.00 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 98436 - 06985 |
| *வழிபட வேண்டிய முறை* | அம்பாளையும், ஈசனையும் அபிஷேகம் அர்ச்சனை செய்து, கோயிலை வலம் வந்து, தல மரம் வில்வத்தை வழிபட்டு, மனமுருகப் பிரார்த்தித்தால் பாதிப்பு அகலும். கீழ்கண்ட சம்பந்தர் தேவாரத்தை தினமும் படிக்கவும்.<br>நோயுற்றோர் நேரில் வர இயலாத நிலையில் இருந்தால் அவருக்காக அவரின் நெருங்கிய உறவினர், நண்பர் இங்கு வழிபட்டு பிரார்த்திக்கலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 102–ஆவது தலம்.<br>காவிரி வடகரைத் தலம். சம்பந்தர் பாடியது.<br>இங்கு சிவராத்திரி மிகவும் விசேஷம். ஸ்ரீசைலம், காளஹஸ்தி, திருக்கோகர்ணம் போன்ற சிறப்பான தலங்களுக்கு இணையாக கருதப்படுகின்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கோழைமிடறாக கவிகோளும் இலவாக இசைகூடும் வகையால்<br>ஏழை அடியாரவர்கள் யாவை சொன சொல்மகிழும் ஈசன் இடமாம்<br>தாழை இளநீர்முதிய காய் கமுகின்வீழ நிரைதாறு சிதறி<br>வாழை உதிர்வீழ் கனிகள் ஊறி வயல் சேறுசெயும் வைகாவிலே<br>( சம்பந்தர் ) |

## 37. மரண அவஸ்தையில் இருப்பவர்கள் / நோய்வாய்பட்டோர் குணமடைய அல்லது சிரமமில்லாமல் இறைவனடி சேர

| *தலம்* | **திசைமுகன்சேரி** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீதேவி, பூதேவி உடனாய<br>ஸ்ரீபரமபதநாதர் திருக்கோயில்<br>தியாகமுகன்சேரி, காவேரிப்பாக்கம் வழி,<br>அய்யம்பேட்டை கிராமம் - 632 508<br>அரக்கோணம் வட்டம், வேலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | சென்னை - காஞ்சிபுரம் - வேலூர் பிரதான சாலையில் (NH4), காவேரிப்பாக்கத்தின் வலது புறத்தில் உள்ள சோளிங்கர் சாலையில் 7-ஆவது கி.மீ.ல் வலது பக்கம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 - 12.00 மாலை : 05.00 - 08.30 |
| *தொலைபேசி* | 044 - 22237536, 98426 - 19900 (பட்டர்) |
| *வழிபட வேண்டிய முறை* | நோய் வாய்ப்பட்டு அவதியுறுபவர்களுக்கு இத்தலத்துப் பெருமாளிடம் வேண்டிக் கொண்டு தீர்த்தம், சந்தனம் பெற்றுக் கொடுத்தால் அவர்கள் இறைவனருளால் நோய் அவஸ்தை நீங்கி குணமாகவோ அல்லது நிம்மதியாக இறைவனடி சேரவோ செய்வர் என்பது ஐதீகம். முன்கூட்டியே சொல்லி வைத்தால்தான் பட்டர் அவற்றை எடுத்து வைத்திருந்து தருவார்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | 1000 ஆண்டு பழமையானக் கோயில். வைணவ திவ்ய தேசங்கள் 106- ஐயும் தரிசித்தவர்கள், இத்தலத்தைப் பரமபதம் என மனதில் நினைத்து 108-ஆவது திவ்ய தேசமாகக் கருதி வழிபடலாம். காவேரிப்பாக்கத்தின் இடதுபுறம் திருப்பாற்கடல் உள்ளது. (வ.எண். 104) |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே<br>ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால்<br>எய்ப்புஎன்னை வந்துநலியும்போது அங்குஏதும் நானுன்னை நினைக்கமாட்டேன்<br>அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே!<br>( திவ்யபிரபந்தம்) |

## 38. ராகு தோஷ பாதிப்பு நிவர்த்தியாக

| | |
|---|---|
| *தலம்* | **திருநாகேஸ்வரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ கிரிகுஜாம்பிகை உடனாய<br>ஸ்ரீ நாகநாதர் திருக்கோயில்<br>திருநாகேஸ்வரம் அஞ்சல் - 612 204<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது. ( காரைக்கால் சாலையில்) |
| *நேரம்* | காலை : 06.00 - 12.45 மாலை : 04.00 - 08.45 |
| *தொலைபேசி* | 0435 - 2463354 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டு, ராகு பகவானுக்கு ராகு கால நேரத்தில் பாலாபிஷேகம் செய்து வழிபட ராகு தோஷ பாதிப்பு நிவர்த்தியாகும். அபிஷேகத்தின் போது பால் நீல நிறமாகிறது.<br>காலைச் சந்தியில் குடந்தை நாகேஸ்வரர், உச்சிக்காலத்தில் திருநாகேஸ்வரம், சாயங்காலம் திருப்பாம்புரம், அர்த்த சாமத்தில் நாகைப் பட்டினம் கோயில்களை வழிபட்டால், நாகதோஷம் நீங்கும் என்பது ஒரு நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 146-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம். மூவர் பாடல் பெற்றது.<br>ராகுகால நேரத்தில் ராகு சன்னிதி திறந்திருக்கும்.<br>நவக்கிரகத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | அரவெனும் ராகு ஐயனே போற்றி<br>கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி<br>ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி<br>ராகுக் கன்னியே ரம்மியா போற்றி!<br>( நவக்கிரக கவசம் – ராகு ) |

## 39. ராகு, கேது தோஷ பாதிப்பு நிவர்த்திக்கு

**( ஜாதகத்தில் கால சர்ப்பதோஷம் இருந்தால் )**

| | | |
|---|---|---|
| *தலம்* | **திருப்பாம்புரம்** | |
| *விலாசம்* | ஸ்ரீ பிரமராம்பிகை உடனாய<br>ஸ்ரீ பாம்புரேஸ்வரர் திருக்கோயில்<br>திருப்பாம்புரம், சுரைக்காயூர் அஞ்சல் - 612 203<br>பாலையூர் வழி, குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம். | |
| *வழித்தடம்* | கும்பகோணத்திலிருந்து காரைக்கால் சாலையில் கொல்லுமாங்குடிக்கு முன்னதாகவே கற்கத்தி என்னும் ஊரிலிருந்து 3 கி.மீ.ல் உள்ளது. | |
| *நேரம்* | காலை : 07.00 - 12.30 மாலை : 04.00 - 08.00 | |
| *தொலைபேசி* | 0435 - 2469555, 94430 - 47302 | |
| *வழிபட வேண்டிய முறை* | இங்கு எழுந்தருளியிருக்கும் சுவாமி, அம்பாள் மற்றும் ஏக சரீர இராகு, கேது பகவானுக்கு ராகு காலத்தில் அபிஷேகம் செய்விக்க வேண்டும். இராகு, கேதுவுக்கு நீலம் மற்றும் பல வண்ண ஆடையைச் சார்த்த வேண்டும். சங்கு புஷ்பம், மல்லிகை, நீலமந்தாரை, இலுப்பைப்பூ, செவ்வரளி, நாகலிங்கப்பூ ஆகியவை இராகு கேது பகவானுக்கு பிடித்தவை. அர்ச்சனை முடிந்தபின் உளுத்தம் பருப்பு பொடி மற்றும் கொள்ளுப் பொடி அன்னம் நிவேதனம் செய்து தானம் செய்ய வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். | |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 176-ஆவது தலம். சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>தெரிந்தோ தெரியாமலோ பாம்பை அடித்திருந்தால் இங்கு வந்து வழிபட்டு நிவாரணம் பெறலாம். | |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்கள்* | **ராகு :**<br>அரவெனும் ராகு ஐயனே போற்றி<br>கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி<br>ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி<br>ராகுக் கன்னியே ரம்மியா போற்றி!<br>( நவக்கிரக கவசம் ) | **கேது :**<br>கேதுத் தேவே கீர்த்தித் திருவே<br>பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்<br>வாதம் வம்பு வழக்குகள் இன்றி<br>கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி !<br>( நவக்கிரக கவசம் ) |

## 40. ராகு கேது பரிகாரத் தலம்

| | |
|---|---|
| *தலம்* | **கொடுமுடி** |
| *விலாசம்* | ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனாய<br>ஸ்ரீ கொடுமுடிநாதர் திருக்கோயில்<br>கொடுமுடி – 638 151, ஈரோடு மாவட்டம். |
| *வழித்தடம்* | ஈரோடு – திருச்சிராப்பள்ளி சாலையில் சுமார் 39 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 12.30 மாலை : 03.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04204 - 222375 |
| *வழிபட வேண்டிய முறை* | காவிரியில் நீராடி, கொடுமுடிநாதரையும், திரிபுரசுந்தரியையும் அர்ச்சனை செய்து வழிபட்டு நவக்கிரஹங்களை வலம் வரவும். ராகு கேது பரிகாரம் பற்றிய விவரங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆவன செய்யவும்.<br>சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மூவரும் உள்ள ஆபூர்வ தலம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 264–ஆவது தலம்.<br>கொங்குநாட்டுத் தலம். மூவர் பாடல் பெற்றது.<br>அவிட்ட நட்சத்திரக் கோயில்.<br>இன்னொரு சர்ப்ப தோஷ நிவர்த்தித் தலம் மன்னார்குடி அருகிலுள்ள பாமணி சர்ப்பபுரீஸ்வரர் திருக்கோயில் (221–ஆம் தேவாரத் தலம்) ஆகும்.<br>09.00 – 12.00 05.30 – 08.00<br>93606 – 85073, 97885 – 44971 |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்கள்* | **ராகு :**<br>அரவெனும் ராகு ஐயனே போற்றி<br>கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி<br>ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி<br>ராகுக் கன்னியே ரம்மியா போற்றி!<br>( நவக்கிரக கவசம் )<br><br>**கேது :**<br>கேதுத் தேவே கீர்த்தித் திருவே<br>பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்<br>வாதம் வம்பு வழக்குகள் இன்றி<br>கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி !<br>( நவக்கிரக கவசம் ) |

# 41. கேது தோஷ பாதிப்பு நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **கீழப்பெரும்பள்ளம்** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாய<br>ஸ்ரீ நாகநாத சுவாமி திருக்கோயில்<br>கீழப்பெரும்பள்ளம் – 609 117<br>தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சீர்காழி – பூம்புகார் சாலையில் உள்ளது. மயிலாடுதுறை – பூம்புகார் சாலையில் உள்ளது (20 கி.மீ.). தருமகுளம் வழித்தடம் நிறுத்தம். |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 03.30 – 08.30 |
| *தொலைபேசி* | 04364 – 260424 |
| *வழிபட வேண்டிய முறை* | சிவனையும் அம்பாளையும் வழிபட்ட பிறகு கேதுவுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தால் கேது தோஷ பாதிப்பு நிவர்த்தியாகும்.<br>கருவறையில் நல்லெண்ணெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வாசுகி என்ற நாகராஜா வழிபட்ட தலம்.<br>நவக்கிரகத் தலம். ராகுகாலம், எமகண்டத்தில் அபிஷேகம் நடைபெறும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கேதுத் தேவே கீர்த்தித் திருவே<br>பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்<br>வாதம் வம்பு வழக்குகள் இன்றி<br>கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி !<br>( நவக்கிரக கவசம் – கேது ) |

## 42. சனி தோஷ பாதிப்பு விலக

| | |
|---|---|
| *தலம்* | **திருக்கொள்ளிக்காடு** |
| *விலாசம்* | ஸ்ரீ மிருது பாத நாயகி உடனாய<br>ஸ்ரீ அக்னீஸ்வரர் திருக்கோயில்<br>திருக்கொள்ளிக்காடு - 610 205<br>திருத்துறைப்பூண்டி வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் திருநெல்லிக்காவிலிருந்து வலதுபுறம் திரும்பி செல்ல வேண்டும். |
| *நேரம்* | காலை : 08.00 - 12.00 மாலை : 04.30 - 07.00<br>சனி : காலை 07.00 முதல் மாலை 07.00 வரை |
| *தொலைபேசி* | 04369 - 237454 |
| *வழிபட வேண்டிய முறை* | பொங்கு சனித்தலம். அக்னி வழிபட்ட தலம். ஈசனையும் அம்பாளையும் வணங்கி சனிபகவானுக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டால் சனிதோஷ பாதிப்பு விலகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 232-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>அவிட்ட நட்சத்திரக் கோயில். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | சங்கடந் தீர்க்கும் சனிபக வானே<br>மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்<br>சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே<br>இச்செகம் வாழ இன்னருள் தாதா!<br>( நவக்கிரக கவசம் - சனி ) |

## 43. சனி தோஷ பாதிப்பு விலக

| | |
|---|---|
| *தலம்* | **குச்சனூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சனீஸ்வரர் திருக்கோயில்<br>குச்சனூர் - 625 515<br>உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம். |
| *வழித்தடம்* | தேனியிலிருந்து போடி நாயக்கனூர் வழியாகச் (சுமார் 20 கி.மீ.) செல்லலாம். உத்தமபாளையத்தி லிருந்தும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 06.00 - 02.30 மாலை : 04.00 - 08.30<br>சனி : 06.00 - 03.30 மாலை : 05.00 - 08.30 |
| *தொலைபேசி* | 04554 - 321108 |
| *வழிபட வேண்டிய முறை* | சுயம்பு சனீஸ்வரருக்கு அர்ச்சனை அபிஷேகம் செய்து எள் விளக்கு ஏற்றி வழிபட, சனிதோஷ பாதிப்பு விலகும்.<br>சனிக்கிழமைகளில் வழிபடுவது விசேஷம்.<br>கருப்புத்துண்டு சார்த்தலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | சனிபகவானுக்கு உண்டான சிறப்புத் தலங்கள் :<br>1. திருநள்ளாறு (வ.எண். 44) 2. திருக்கொள்ளிக்காடு<br>3. குச்சனூர் 4. திருநறையூர் (வ.எண். 73)<br>ஏழரைநாட்டு சனி உள்ளவர்கள் ஒரு தடவையாவது தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | சங்கடந் தீர்க்கும் சனிபக வானே<br>மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்<br>சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே<br>இச்செகம் வாழ இன்னருள் தாதா!<br>( நவக்கிரக கவசம் - சனி ) |

# 44. சனிதோஷ பாதிப்பு விலக

| *தலம்* | **திருநள்ளாறு** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ பிராணாம்பிகை உடனாய<br>ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் திருக்கோயில்<br>திருநள்ளாறு அஞ்சல் - 609 607<br>காரைக்கால், புதுச்சேரி மாநிலம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - காரைக்கால் சாலையில் காரைக்காலுக்கு 5 கி.மீ. முன்னால் உள்ளது.<br>திருவாரூர் - மயிலாடுதுறை சாலையில் பேரளம் வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 06.00 - 12.30 மாலை : 04.00 - 08.30<br>சனி : காலை 04.30 முதல் மாலை 09.00 வரை |
| *தொலைபேசி* | 04368 - 236530, 236504 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும் வழிபட்டு சனீஸ்வரருக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட, சனியினால் ஏற்படும் பாதிப்பு விலகும். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 169-ஆவது தலம். சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம். மூவர் பாடல் பெற்றது. நவக்கிரகத் தலம்.<br>மரகதலிங்க வழிபாடு விசேஷம். சப்த விடங்கத்தலம். |
| | இதேபோல இன்னொரு தலம் கும்பகோணம் நாச்சியார் கோயிலுக்கருகில் உள்ள திருநறையூர் ராமநாதசுவாமி ஆலயம் ஆகும். (பார்க்க வ.எண்.73) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | சங்கடந் தீர்க்கும் சனிபக வானே<br>மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்<br>சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே<br>இச்செகம் வாழ இன்னருள் தாதா!<br>( நவக்கிரக கவசம் - சனி ) |

## 45. செவ்வாய் தோஷ பாதிப்பு விலக

| | |
|---|---|
| *தலம்* | **வைத்தீஸ்வரன் கோயில்** |
| *விலாசம்* | ஸ்ரீ தையல்நாயகி உடனாய ஸ்ரீ வைத்தியநாதர்<br>வைத்தீஸ்வரன் கோயில் - 609 117<br>சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை - சீர்காழி சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 05.30 - 01.00 மாலை : 04.00 - 09.00 |
| *தொலைபேசி* | 04364 - 279423 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும், முருகனையும் தரிசித்து இத்தலத்திலுள்ள ஆட்டுவாகனத்தில் எழுந்தருளி இருக்கும் அங்காரகனுக்கு அர்ச்சனை செய்து வஸ்திரம் சார்த்தி ஆராதிக்க செவ்வாய் தோஷ பாதிப்பு விலகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 70-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. நவக்கிரகத் தலம்.<br>உத்திரட்டாதி நட்சத்திரக்கோயில்.<br>நோய் தீர்க்கும் தலமும் கூட.<br>இக்கோயிலில் கிடைக்கும் திருச்சாந்து உருண்டை மருத்துவ குணம் கொண்டது. |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | சிறப்புறு மணியே செவ்வாய் தேவே<br>குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ<br>மங்களச் செவ்வாய் மலரடி போற்றி<br>அங்காரகனே அவதிகள் நீக்கு !<br>( நவக்கிரக கவசம் - செவ்வாய் ) |

## 46. குரு பரிகாரத் தலம்

| | |
|---|---|
| *தலம்* | **தென்குடித்திட்டை** |
| *விலாசம்* | ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை உடனாய<br>ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர் திருக்கோயில்<br>திட்டை– 613 003<br>தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சை – கும்பகோணம் சாலையில் (வலதுபுறம்) திருக்கருகாவூர் செல்லும் வழியில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 01.00 மாலை : 04.00 – 08.30 |
| *தொலைபேசி* | 04362 – 252858 94434 – 45864 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும் அம்பாளையும் வழிபட்டு தனிச் சன்னிதியில் வீற்றிருக்கும் குருபகவானுக்கு வியாழக்கிழமைகளில் 06.00 - 07.00, 01.00 - 02.00 அர்ச்சனை செய்து வழிபட்டால் குரு தோஷ பாதிப்பு விலகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 132 –ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>உள்ளே திருநீற்றுக் கோயிலுள்ளது. |
| | இதேபோல தஞ்சாவூர் – திருவாரூர் சாலையில் உள்ள நீடாமங்கலத்திலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் உள்ளது 215வது தேவாரத் தலமான ஆலங்குடி, குரு ஸ்தலம் (நவக்கிரகத் தலம்).<br>04374 – 269407 |
| | அதேபோல மயிலாடுதுறையிலுள்ள ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்தியை வணங்க குருதோஷம் விலகும்.<br>04364 – 222513 |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | குணமிகு வியாழக் குருபக வானே<br>மணமுள வாழ்வை மகிழ்வுடன் தருள்வாய்<br>பிரகஸ்பதி வியாழக் குருபர நேசா<br>கிரகதோஷ மின்றி கடாட்சித் தருள்வாய்!<br>( நவக்கிரக கவசம் – வியாழன் ) |

## 47. சுக்கிர தோஷ பாதிப்பு விலக

| | |
|---|---|
| *தலம்* | **கஞ்சனூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ கற்பகாம்பிகை உடனாய<br>ஸ்ரீ அக்னீஸ்வரர் திருக்கோயில்<br>கஞ்சனூர் அஞ்சல் - 609 804<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - மயிலாடுதுறை (கல்லணை) சாலையில் சூரியனார் கோயிலுக்கு அடுத்து உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 12.30 மாலை : 04.00 – 09.00 |
| *தொலைபேசி* | 0435 - 2473737 |
| *வழிபட வேண்டிய முறை* | திருக்குளத்தில் நீராடி ஸ்ரீ அக்னீஸ்வரரையும் ஸ்ரீ கற்பகாம்பிகையையும் தரிசனம் செய்து, சுக்கிரனுக்கு தீபமேற்றி வழிபட்டால் சுக்கிர தோஷ பாதிப்பு நிவர்த்தி ஆகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 90–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது. நவக்கிரகத் தலம். |
| | இதைப்போலவே இன்னொரு சுக்கிரத் தலம் 22–ஆவது வைணவ திவ்ய தேசமான திருவெள்ளியங்குடி ஆகும். பூரம் நட்சத்திரக் கோயில் (பார்க்க வ.எண்.23 ) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | சுக்கிர மூர்த்தி சுகசுப மீவாய்<br>வக்கிர மின்றி வரமிகத் தருவாய்<br>வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே!<br>அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!<br>( நவக்கிரக கவசம் – சுக்கிரன் ) |

# 48. சர்வதோஷ பரிகாரத் தலம்

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சிறுபுலியூர்** |
| *விலாசம்* | ஸ்ரீதயா நாயகி உடனாய<br>ஸ்ரீ கிருபா சமுத்திரப் பெருமாள் கோயில்<br>சிறுபுலியூர், கொல்லுமாங்குடி அஞ்சல் – 609 403<br>நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை – பேரளம் – திருவாரூர் சாலையில் கொல்லுமாங்குடிக்கு இடதுபுறம் 3 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04366 – 233041 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ கிருபா சமுத்திரப் பெருமாளையும்<br>ஸ்ரீ தயாநாயகியையும் அர்ச்சனை செய்து வழிபட சர்வ தோஷ பாதிப்பு (குறிப்பாக ராகு கேது) நீங்கும். கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 24–ஆவது திருத்தலம். மிகச் சிறிய சயன கோல பெருமாள் மிக அழகு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்கள்* | 1) கருமாமுகிலுருவா! கனலுருவா! புனலுருவா,<br>பெருமால்வரை யுருவா! பிற வுருவா! நினதுருவா,<br>திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனத்து,<br>அருமாகடலமுதே! உனதடியே சரணாமே.<br>( திருமங்கையாழ்வார்)<br>2) நவக்கிரக கவசம் தினமும் பாராயணம் செய்யவும். (பக்கம் 110) |

## 49. நாகராஜா பூஜை செய்ய

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சிராப்பள்ளி** |
| *விலாசம்* | ஸ்ரீ ஐயப்பன் திருக்கோயில்<br>2, லாசன்ஸ் ரோடு, கண்டோன்மெண்ட்<br>திருச்சிராப்பள்ளி – 620 001. |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி நகரில் – கோர்ட் அருகில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 05.00 – 11.00 மாலை : 05.00 – 09.00 |
| *தொலைபேசி* | 0431- 2461415 |
| *வழிபட வேண்டிய முறை* | வயது மிக ஆகியும் திருமணமாகாதவர்களுக்காவும், திருமணமாகி வெகு நாட்களாகியும் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்காகவும் ஒவ்வொரு ஆயில்யத்தன்று காலை 08.30 மணியளவில் இத்தலத்திலுள்ள நாகராஜாக்களுக்கு விசேஷ ஹோமமும், அபிஷேகமும் நடத்தப்படுகின்றன. இந்தச் சிறப்பு பூஜையில் நேரில் கலந்து கொண்டு அங்கு வழங்கப்படும் பால் பாயசத்தை நம்பிக்கையுடன் உட்கொண்டும், கொடுக்கப்படும் மஞ்சள் பிரசாதத்தை தினமும் இட்டுக்கொண்டும் வர, விரைவில் பலன் கிட்டுகின்றது என்பதை கண்கூடாகக் காணமுடிகிறது.<br>கருவறையில் நெய் தீபம் ஏற்ற நெய் வாங்கிக் கொடுங்கள். |
| *இதர குறிப்பு* | சுபிட்சமாக இருக்கவேண்டி, ஒவ்வொரு பௌர்ணமி யன்று இரவு 7.00 மணியளவில் மகாலட்சுமி பூஜை நடைபெறுகின்றது. வாழ்க்கையில் மிக வளமாக இருக்க வேண்டும் என நினைப்பவர்கள் இப்பூஜையில் கலந்து கொள்ளலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | அரவெனும் ராகு ஐயனே போற்றி<br>கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி<br>ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி<br>ராகுக் கன்னியே ரம்மியா போற்றி!<br>(நவக்கிரக கவசம் – ராகு ) |

## 50. வாஸ்து தோஷ நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சிராப்பள்ளி** |
| *விலாசம்* | ஸ்ரீ ஜெகதாம்பிகை உடனாய<br>ஸ்ரீ பூலோகநாத சுவாமி திருக்கோயில்<br>கீழ் அரண் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 008. |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி, கீழ் அரண் சாலை (E.B. Road) காந்தி மார்க்கெட் அருகில் உள்ளது. பழைமையான கோயில். |
| *நேரம்* | காலை : 07.00 - 12.00 மாலை : 05.00 - 08.00 |
| *தொலைபேசி* | 0431 - 2711360 |
| *வழிபட வேண்டிய முறை* | மனை, வீடு, பூமி தொடர்பான வாஸ்து நாயகராகத் திகழ்வதால் வாஸ்து தொடர்பான குறைபாடுகளை சுவாமியிடம் பிரார்த்திக் கொண்டால் அவை தீரும் என்பது ஐதீகம்.<br>பூமி மனை தொடர்பான நற்காரியங்களுக்கு அதிபதியான வாஸ்து பகவான் பெரும்பாலும் யோக நிலையில் இருப்பார் என்றும், வருடத்தில் சில நாட்கள் மட்டும் விழித்திருப்பதாகவும் சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஒவ்வொரு வருடமும் இந்த வாஸ்து நாட்களில் இத்திருக்கோயிலில் சிறப்பு வாஸ்து ஹோமம் நடைபெறுகிறது. புதியதாக வீடு கட்டுபவர்களும், பழைய, புதிய வீட்டில் தோஷம் இருப்பதாக கருதுபவர்களும் வாஸ்து நாட்களில் நடைபெறும் ஹோமத்தில் கலந்து கொண்டால் வாஸ்து தோஷம் நீங்கும் என்பர். பூஜையில் கலந்து கொள்ளும் மற்றவர்களுக்கு மனை, வீடு வாங்கும் யோகம் விரைவில் கிட்டும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இதே சாலையில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நன்றுடையான் கோயிலில் மனிதத் தலையுடன் கூடிய ஆதி விநாயகர் உள்ளார். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | விக்னமின்றி பணிகள் செவ்வனே நடக்க சொல்ல வேண்டிய விநாயகர் துதி :<br>மூஷிக வாகன மோதக ஹஸ்த<br>சாமர கர்ண விளம்பித சூத்ர<br>வாமன ரூப மஹேஸ்வர புத்திர<br>விக்ன விநாயக பாத நமஸ்தே |

## 51. வாஸ்து தோஷ நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **மண்ணச்சநல்லூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனாய<br>ஸ்ரீ பூமிநாதேஸ்வரர் திருக்கோயில்<br>மண்ணச்சநல்லூர்– 621 005<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து துறையூர் சாலையில் 15 கி.மீ.ல் உள்ளது |
| *நேரம்* | காலை : 08.30 – 12.00 மாலை : 05.30 – 08.00 |
| *தொலைபேசி* | 93447 – 69294 |
| *வழிபட வேண்டிய முறை* | வீட்டின் வட கிழக்கு மூலையில் இருந்து மண் கொண்டு வந்து சுவாமி மேல் வைத்து வாஸ்து பூஜை செய்து, வலம் வந்து முதல் சுற்றில் தல விருட்சத்தில் அம்மண்ணைப் போட வேண்டும். இரண்டாவது சுற்றில் அத்தல விருட்சத்தில் இருந்து மறுபடியும் மண் எடுத்து அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று, அம்மணலைக் கொண்டு வீடு, கட்டிடங்கள் கட்டத் தொடங்கினால் தங்கு தடையின்றி கட்டிட வேலை நடைபெறும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இத்தலத்தை காலால் மிதித்து கண்ணால் பார்த்தால் மிகவும் புண்ணியம் என அகத்தியர் நாடி கூறுகிறது. ஈசன் சுயம்பு. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்தோத்திரம்* | விக்னமின்றி பணிகள் செவ்வனே நடக்க சொல்ல வேண்டிய விநாயகர் துதி :<br>மூஷிக வாகன மோதக ஹஸ்த<br>சாமர கர்ண விளம்பித சூத்ர<br>வாமன ரூப மஹேஸ்வர புத்திர<br>விக்ன விநாயக பாத நமஸ்தே |

## 52. தற்போது உள்ள வீட்டின் வாஸ்து தோஷ நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருவிற்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ ஏழவார் குழலி உடனாய<br>ஸ்ரீ வீரட்டேஸ்வரர் திருக்கோயில்<br>திருவிற்குடி அஞ்சல்– 610 101<br>கங்காளஞ்சேரி, நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் கங்களாஞ் சேரியில் பிரியும் சாலையில் வலதுபுறம் செல்ல வேண்டும். |
| *நேரம்* | காலை : 06.30 – 12.00 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 88708 - 87717 (குருக்கள்) |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டு, இத்தலத்திலிருந்து கல் எடுத்து வந்து அவரவர் வீட்டில் வைத்துக் கொண்டால் வாஸ்து தோஷம் நிவர்த்தியாகும் என்று நம்பிக்கை. சொந்தமாக வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டும் பாக்கியம் விரைவில் கிடைக்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 191 –ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>அட்ட வீரட்டானத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | வடிகொள் மேனியர் வானமாமதியினர் நதியினர் மதுவார்ந்த<br>கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினருடை புலியதளார்ப்பர்<br>விடையதேறும் எம்மான் அமர்ந்தினிதுறை விற்குடி வீரட்டம்<br>அடியராகி நின்றேத்த வல்லார்தமை அருவினை அடையாவே.<br>( சம்பந்தர் ) |

## 53. தொழிற்சாலைக் கட்டுமானப் பணிகள் தங்கு தடையின்றி நடக்க

| *தலம்* | **சித்தன்னகுடி** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ கோதண்ட ராமர் திருக்கோயில்<br>சித்தன்னகுடி, வேளுக்குடி அஞ்சல் – 610 102<br>நீடாமங்கலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – மன்னார்குடி சாலையில் கமலாபுரத்தை அடுத்துள்ளது. திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் ரோட்டிலிருந்து வடபாதிமங்கலம் வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04367 – 245260, 97872 – 72226<br>(அர்ச்சகர் V.S. ராஜகோபாலன்) |
| *வழிபட வேண்டிய முறை* | மூன்று செங்கற்கள் எடுத்துச் சென்று இங்கு வைத்து பூஜை செய்த பிறகு, இத்தலத்திலிருந்து சிறிதளவு மண் எடுத்து வந்து அவற்றை கட்டிடத்தில் சேர்த்து கட்டினால், (தொழிற்சாலை மற்றும் வீடு) கட்டுமானப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெறும் என்பது நம்பிக்கை.<br>வியாழன்தோறும் ஸ்ரீதன்வந்திரி பகவானுக்கு விசேஷ, அபிஷேகம் நடைபெறுகிறது. நோய் தீர பிரார்த்தனை செய்யப்படுகிறது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | சாந்நித்யமான சிறிய கோயில். திருமணத் தடை நீக்கும் தலமும் கூட. அருகிலேயே 231, 235ஆவது தேவாரத்தலங்களான ஓகைப்பேரையூர், திருநாட்டியத்தான் குடி உள்ளன. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | விக்னமின்றி பணிகள் செவ்வனே நடக்க சொல்ல வேண்டிய விநாயகர் துதி :<br>மூஷிக வாகன மோதக ஹஸ்த<br>சாமர கர்ண விளம்பித சூத்ர<br>வாமன ரூப மஹேஸ்வர புத்திர<br>விக்ன விநாயக பாத நமஸ்தே |

## 54. அடுக்கு மாடிக் கட்டிட வேலைகள் தங்கு தடையின்றி நடக்க

| | |
|---|---|
| *தலம்* | **கடுவெளி** |
| *விலாசம்* | ஸ்ரீ ஆகாசபுரீஸ்வரர் திருக்கோயில்<br>56/1 கடுவெளி கிராமம் - 613 203<br>திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி - திருவையாறு ( கல்லணை ) சாலையில் திருக்காட்டுப்பள்ளியை அடுத்து திருவையாறுக்கு முன்னதாகவே 4 கி.மீ.ல் உள்ளது. தஞ்சாவூரிலிருந்து 13 கி.மீ. |
| *நேரம்* | காலை : 09.00 - 10.00; 05.00 - 06.00 |
| *தொலைபேசி* | 96267 - 65472, 94434 - 47826<br>எந்நேரமும் தரிசனம் செய்ய அறங்காவலர் உதவி செய்வார். |
| *வழிபட வேண்டிய முறை* | ஒன்பது செங்கற்களைக் கொண்டு சென்று ஈசனுக்கும் அம்பாளுக்கும் முறையாக அபிஷேகம் ஆராதனைகள் செய்து வழிபட்டு, ஆகாய வாஸ்து பூஜைகளை நிகழ்த்தி பின்னர் அக்கற்களைக் கொண்டு அடுக்குமாடி கட்டிட வேலைகள் செய்ய, கட்டிடப் பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | பூராட நட்சத்திரக் கோயில். கடுவெளிச்சித்தரின் அவதாரத்தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | விக்னமின்றி பணிகள் செவ்வனே நடக்க சொல்ல வேண்டிய விநாயகர் துதி :<br>மூஷிக வாகன மோதக ஹஸ்த<br>சாமர கர்ண விளம்பித சூத்ர<br>வாமன ரூப மஹேஸ்வர புத்திர<br>விக்ன விநாயக பாத நமஸ்தே |

## 55. அனைத்து பாப தோஷ நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **கோவிலடி** |
| *விலாசம்* | ஸ்ரீ இந்திரா தேவி கமலவல்லி உடனாய<br>ஸ்ரீ அப்பக்குடத்தான் திருக்கோயில்<br>கோவிலடி, பூண்டி அஞ்சல் – 613 105<br>திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – திருவையாறு ( கல்லணை ) சாலையில் கல்லணைக்கு அடுத்து உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – 01.00 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 82207 – 59642 (திருக்கோயில் மணியம்) |
| *வழிபட வேண்டிய முறை* | பெருமாளையும், தாயாரையும் அர்ச்சனை செய்து வழிபட்டு, இத்தலத்தில் அன்னதானம் செய்தால் சர்வ பாபங்களும், சகலவித தோஷங்களும் நிவர்த்தியாகும் என்பது ஒரு நம்பிக்கை.<br>இங்குள்ள சந்தான கிருஷ்ணனுக்கு வெண்ணெய், கல்கண்டு, ஏலக்காய் சேர்த்து நிவேதனம் செய்து அதிகாலையில் வழிபட்டால் புத்திரப்பேறு கிடைக்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களுள் 6–ஆம் தலம். சோழநாட்டுத் திருப்பதி. பஞ்சரங்கத் தலங்களில் 2வது. பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | திருமாலி ருஞ்சோலை மலையென்றே னென்ன,<br>திருமால்வந் தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்,<br>குருமா மணியுந்து புனல்பொன்னித் தென்பால்,<br>திருமால் சென்று சேர்விடம் தென் திருப்பேரே.<br>( நம்மாழ்வார் ) |

## 56. திருடிய பாவம் நிவர்த்தியாக

| | |
|---|---|
| *தலம்* | **சக்கரப்பள்ளி** |
| *விலாசம்* | ஸ்ரீ தேவநாயகி உடனாய<br>ஸ்ரீ சக்ரவாகேஸ்வரர் திருக்கோயில்<br>சக்கரப்பள்ளி , அய்யம்பேட்டை அஞ்சல் - 614 201<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூர் - கும்பகோணம் சாலையில் ஐயம்பேட்டையை அடுத்து வலப்புறம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 09.00 -10.00 மாலை : 05.30 - 07.00 |
| *தொலைபேசி* | 80568 - 53485 (குருக்கள்) |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து, அறியாமல் செய்த திருட்டுப் பாவத்தை மன்னிக்கும்படி மனம் உருகிப் பிரார்த்தனை செய்தால் திருடிய பாவம் நீங்குகின்றது என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 134-ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>திருமால் சக்ராயுதம் பெற்ற தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | படையினார் வெண்மழுப்பாய் புலித்தோல் அரை<br>உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்<br>விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்<br>சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.<br>( சம்பந்தர் - தேவாரம் ) |

# 57. தர்ப்பணம், சிராத்தம் செய்ய

| | |
|---|---|
| *தலம்* | **திலதர்ப்பணபுரி** |
| *விலாசம்* | ஸ்ரீ சுவர்ண வல்லி உடனாய<br>ஸ்ரீ முக்தீஸ்வரர் திருக்கோயில்<br>திலதைப்பதி, பூந்தோட்டம் அஞ்சல் - 609 503<br>நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர்- மயிலாடுதுறை சாலையில் பூந்தோட்டம் அருகிலுள்ள கூத்தனூர் ஸ்ரீ சரஸ்வதி கோயிலில் இருந்து 2 கி.மீ.ல் உள்ளது. நாச்சியார் கோயிலில் இருந்து எரவாஞ்சேரி வழியாகவும் வரலாம். |
| *நேரம்* | காலை : 07.00 - 12.45 மாலை : 04.00 - 08.30 |
| *தொலைபேசி* | 04366 - 238818, 239700 ; 94427 - 14055 |
| *வழிபட வேண்டிய முறை* | தர்ப்பணம் என்பது மாதம்தோறும் அமாவாசையில் செய்யப்படுவது (எள்). சிராத்தம் என்பது ஆண்டுக் கொருமுறை முன்னோர்கள் இறந்த திதியில் செய்யப்படுவது (எள் + பிண்டம்). ராமரும், லட்சுமணரும் தசரதருக்கும், ஜடாயுவுக்கும் எள் (தில) தர்ப்பணம் செய்த தலம்.<br>சிராத்தம், தர்ப்பணம் செய்வதற்காகவே அமைந்த விசேஷ திருத்தலம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 175-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது.<br>கோயிலின் எதிரில் ஆதி விநாயகர் கோயிலுள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஏஷாம் ந பிதா ந ப்ராதா ந பந்து<br>நாந்ய கோத்ரேணஹ<br>தே ஸர்வே த்ருப்தி மகிலாயாம்து<br>மயாத் யத்தை: குசைஸ்திலை:<br>த்ருப்த்யத த்ருப்த்யத த்ருப்த்யத<br>( பித்ருக்களை திருப்திப் படுத்தும் ஸ்லோகம் ) |

## 58. பித்ரு காரியம் செய்ய

| | |
|---|---|
| *தலம்* | **பவானி** |
| *விலாசம்* | ஸ்ரீ வேதாம்பிகை உடனாய<br>ஸ்ரீ சங்கமேஸ்வரர் திருக்கோயில்<br>பவானி - 638 301, ஈரோடு மாவட்டம். |
| *வழித்தடம்* | ஈரோட்டிலிருந்து வடக்கே 12 கி.மீ.ல் உள்ளது.<br>சேலத்திலிருந்து NH47 வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 05.00 - 01.00 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 04256 - 230192 |
| *வழிபட வேண்டிய முறை* | பவானி ஆறு காவிரியில் சங்கமமாகும் இடத்தில் கோயில் அமை நதுள்ளது. ஆடிப்பெருக்கு விசேஷம். சங்கமத்தில் நீராடி பிதுர் காரியங்கள் செய்து ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வணங்கினால் மிகச் சிறப்பு.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 261 -ஆவது தலம்.<br>கொங்கு நாட்டுத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஏஷாம் ந பிதா ந ப்ராதா ந பந்து<br>நாந்ய கோத்ரேணஹ<br>தே ஸர்வே த்ருப்தி மகிலாயாம்து<br>மயாத் யத்தை: குசைஸ்திலை:<br>த்ருப்த்யத த்ருப்த்யத த்ருப்த்யத<br>( பித்ருக்களை திருப்திப் படுத்தும் ஸ்லோகம் ) |

## 59. பித்ரு காரியம் செய்ய

| | |
|---|---|
| *தலம்* | **ராமேஸ்வரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ பர்வதவர்த்தினி உடனாய<br>ஸ்ரீராமலிங்கேஸ்வரர் திருக்கோயில்<br>ராமேஸ்வரம் – 623 526, ராமநாதபுரம் மாவட்டம். |
| *வழித்தடம்* | ராமநாதபுரம் வழியாகச் செல்லவேண்டும். பிரபலமான தலம். |
| *நேரம்* | காலை : 04.00 – 01.00 மாலை : 03.00 – 08.45 |
| *தொலைபேசி* | 04573 – 221223 |
| *வழிபட வேண்டிய முறை* | 108 தீர்த்தங்கள் கூடுமிடம். குறிப்பாக தை மற்றும் ஆடி அமாவாசைகளில் இங்கு நீராடி, பித்ரு காரியங்கள் செய்வது மிகவும் விசேஷம்.<br>ஈசனையும் அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 252 – ஆவது தலம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.<br>12 ஜோதிர்லிங்கத் தலங்களுள் தமிழகத்திலுள்ள ஒரே தலம். ராமர் பாதம் உள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல், ஸ்லோகம்* | 1) தேவியை வவ்விய தென்னிலங்கைத் தச மாமுகன்<br>பூவியலும் முடி பொன்றுவித்த பழி போய் அற<br>ஏ (வு) இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்<br>மேவிய சிந்தையி னார்கள்தம் மேல் வினை வீடுமே.<br>( சம்பந்தர் தேவாரம் )<br>2) பித்ருக்களை திருப்திப்படுத்தும் ஸ்லோகத்தையும் சொல்லவும். |

## 60. பித்ருக்களுக்காகப் பிரார்த்திக்க

| | |
|---|---|
| *தலம்* | **மேலப்பெரும்பள்ளம்** |
| *விலாசம்* | ஸ்ரீ வடுவகிர்க்கண்ணி உடனாய<br>ஸ்ரீ வலம்புரநாதர் திருக்கோயில்<br>மேலப் பெரும்பள்ளம், மேலையூர் அஞ்சல் - 609 107<br>மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை – பூம்புகார் சாலையில் காவிரி கடைமுக அணையிலிருந்தும் (ஷட்டர்ஸ் ஸ்டாப்), சீர்காழி – பூம்புகார் பாதையில் மேலையூரிலிருந்து மேற்கே வந்தும் இத்தலத்தை அடையலாம். |
| *நேரம்* | காலை : 08.30 - 11.00 மாலை : 05.30 - 08.00 |
| *தொலைபேசி* | 04364 - 200890; 94864 - 62947 |
| *வழிபட வேண்டிய முறை* | மூலவர் ஸ்ரீ வலம்புரநாதருக்கு அபிஷேகம் செய்து, அர்ச்சனை செய்து வழிபட்டால், பித்ருக்களுக்காக நாம் செய்யும் பிரார்த்தனையை ஏற்று தோஷ நிவர்த்தி செய்வார். ஸ்திரிஹத்தி, பிரம்ம ஹத்தி, சிசு ஹத்தி தோஷ நிவர்த்தித் தலமும் கூட.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 161ஆவது தலம். சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது. மாடக்கோயில்.<br>ஏகரண்ட முனிவர் ஜீவசமாதி அருகில் உள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கொடியுடை மும்மதிலூடுருவக் குனிவெஞ்சிலை தாங்கி<br>இடிபட எய்த அமரர் பிரான் அடியார் இசைந்தேத்தத்<br>துடியிடை யாளையொர் பாகமாகத் துதைந்தாரிடம் போலும்<br>வடிவுடைமேதி வயல் படியும் வலம் புர நன்னகரே.<br>( சம்பந்தர் ) |

## 61. பித்ருக்கள் இட்ட சாபம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருமங்கலம்** |
| *விலாசம்* | ஸ்ரீ லோகநாயகி உடனாய<br>ஸ்ரீ ஸாம வேதீஸ்வரர் திருக்கோயில்<br>திருமங்கலம் - 621 703<br>லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி அரியலூர் சாலையில்<br>லால்குடிக்கு வடக்கே 4 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 - 11.30 மாலை : 04.30 - 07.30 |
| *தொலைபேசி* | 0431 - 2541040, 98654 - 22027 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்தில் ஈசன், கயா பல்குனி நதியை தோற்றுவித்ததாக ஐதீகம். நீத்தார் கடன்களை காசியிலும், கயாவிலும் செய்தால் என்ன பலனோ, அப்பலன் இந்நதியில் ஸ்நானம் செய்து இறைவனை அர்ச்சனை செய்து வழிபட்டால் கிடைக்கும். பித்ரு கடன்கள், பித்ரு சாபங்கள் நீங்கி நன்மை பெறலாம்.<br>இழந்த செல்வத்தை மீண்டும் பெற வைக்கும் சக்தி படைத்தவர் இத்தல சனீஸ்வரர்.<br>பலாப்பழம், தேன் கலந்து சுவாமி, அம்மனுக்கு படைத்து, 64 தடவை கோயிலை வலம் வந்து வணங்கினால் சர்வரோக நிவர்த்தியாகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைப்புத்தலம். ஆனாய நாயனார் முக்தியடைந்த தலம். காசிக்குச் சென்ற பலன் தரும் க்ஷேத்ரம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | திசை முழுவதும் கனநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி<br>மிசை மிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே<br>அசைய எழும் குழல் நாதத்து அஞ்செழுத்தாய் தமைப்பரவும்<br>இசை விரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார்.<br>( சம்பந்தர் ) |

## 62. பித்ரு சாப நிவர்த்திக்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பூந்துருத்தி** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தர நாயகி உடனாய<br>ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்<br>திருப்பூந்துருத்தி அஞ்சல் – 613 103<br>திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூர் – திருவையாறு சாலையிலுள்ள திருக்கண்டியூருக்கு மேற்கே திருக்காட்டுப்பள்ளி சாலையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.20 – 12.25 மாலை : 04.00 – 08.15 |
| *தொலைபேசி* | 94866 – 71417 |
| *வழிபட வேண்டிய முறை* | திருக்குளத்தில் நீராடி ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் பித்ருக்களால் ஏற்பட்ட சாபம் நிவர்த்தியாகும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 128–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | எக்குறை தீர்க்கினும் யாரிடர் நீங்கினும்<br>என்குறை நீங்க வழி தந்தருள்வாய்!<br>பூந்துருத்தி நாதா! புஷ்பவனேஸ்வரா!!<br>பித்ரு சாபம் நீங்க உன்னை சரணடைந்தேன்!<br>காத்தருள்வாய் நீயே!!<br>பித்ருசாப நிவர்த்திகரணாய ஸ்வாஹா!!!<br>சிவாய நம ஓம்!! |

## 63. தாயாருக்குச் சிராத்தம் செய்ய

| | |
|---|---|
| *தலம்* | **ஸித்பூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சரஸ்வதி திருக்கோயில்<br>மாத்ரு கயா, பதன் மாவட்டம்.<br>மெக்சேனா – 384 151, குஜராத் மாநிலம். |
| *வழித்தடம்* | அஹமதாபாத் டெல்லி ரயில் பாதையில் உள்ளது. அஹமதாபாத்திலிருந்து 110 கி.மீ.ல் உள்ளது. அஹமதாபாத் – அபுரோடு ரயிலில் ஏறி பாலன்பூரில் இறங்கி ஸித்பூர் போகலாம் – 22 கி.மீ. |
| *நேரம்* | எந்நேரமும் சிராத்தம் செய்யலாம். |
| *தொலைபேசி* | 02767 – 223277<br>*Contact address at present :*<br>Sri Vinu Bhai Modi - Manager ( 092281 - 10469 )<br>Sidhpur Sri Gopalakrishna Samaskritha Maha Vidhyalaya<br>Bindu Sarovar Marg., Sidhpur - 384 151 |
| *வழிபட வேண்டிய முறை* | சரஸ்வதி நதிக்கரையில் அமைந்துள்ள இத்திருத்தலத்தில் கபிலமுனி ஆஸ்ரமத்தில், ஞான வாபி, அல்ப சரோவர், பிந்து சரோவர் சங்கமமாகும் இடத்தில் தாயாருக்கு சிராத்தம் செய்யப் படுகிறது.<br>இந்தியாவிலேயே தாயாருக்கு சிராத்தம் செய்யப்படும் ஒரே தலம் இதுதான். மிக விசேஷம். பஞ்ச துவாரகா யாத்திரை செல்பவர்கள் இத்தலத்தையும் தரிசிக்கலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்<br>ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்<br>ஆயம் ஆய காயம்தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்<br>மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.<br>( சம்பந்தர் ) |

## 64. சிராத்தம் செய்ய (குறிப்பாக வாரிசு இல்லாதவர்களுக்கு)

| *தலம்* | **நென்மேலி (புண்டரீகநல்லூர்)** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ மஹாலக்ஷ்மி உடனாய<br>ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் திருக்கோயில்<br>நென்மேலி, செங்கல்பட்டு - 603 002<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
| *வழித்தடம்* | செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் லெவல் கிராசிங் தாண்டி உள்ள வலதுபுற சாலையில் 6 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை 09.00 - 01.00 மட்டும்.<br>மாலையில் தரிசனம் கிடையாது.<br>சனிக்கிழமைகளில் மாலை 04.00-07.00 |
| *தொலைபேசி* | 044 - 27420053 |
| *வழிபட வேண்டிய முறை* | கயாவுக்கு சமமான தலம். பெருமாள் "ஸ்ரார்த்த ஸம்ரக்ஷண நாராயணர்" என்றழைக்கப்படுகிறார். சிராத்தம் செய்பவர்களுக்கு, பெருமாள் தானே முன்னின்று சிராத்தம் செய்வதாக ஐதீகம். பகல் 12.00 - 01.00 மணி - ஒரு கால ஆராதனை மட்டும் ஏற்று பெருமாள் விரதமிருக்கிறார். இங்கு சிராத்தம் செய்ய விரும்புவோர் பித்ருவுக்காக சங்கல்பம் செய்து பெருமாளிடம் சமர்ப்பிக்கின்றனர்.<br>நிவேதனம் செய்யப்படும் வெண் பொங்கல், தயிர் சாதம், பிரண்டை, எள் துவையல் இவற்றை மட்டும் பெருமாள் ஏற்று பித்ருக்களை திருப்தி செய்வதாக ஐதீகம். தேங்காய், பழம், அர்ச்சனை கிடையாது.<br>ஜாதகத்தில் பித்ருதோஷம் உள்ளவர்கள் தொடர்ந்து அமாவாசையில் தரிசிப்பது தோஷ நிவர்த்தி. சிராத்தம் செய்வர்கள் காலை 11.30 மணிக்கு சன்னிதியில் இருக்க வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஏஷாம் ந பிதா ந ப்ராதா ந பந்து<br>நாந்ய கோத்ரேணஹ<br>தே ஸர்வே த்ருப்தி மகிலாயாம்து<br>மயாத் யத்தை: குசைஸ்திலை:<br>த்ருப்த்யத த்ருப்த்யத த்ருப்த்யத<br>( பித்ருக்களை திருப்திப் படுத்தும் ஸ்லோகம் ) |

## 65. கல்வி தொடங்க - வித்யாரம்பத்திற்கு

| | |
|---|---|
| *தலம்* | **இன்னம்பூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சுகந்த குந்தளாம்பிகை உடனாய<br>ஸ்ரீ எழுத்தறிநாதர் திருக்கோயில்<br>இன்னம்பூர் அஞ்சல் – 612 303<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – சுவாமிமலை ( கல்லணை ) சாலையில் புளியஞ்சேரியிலிருந்து வலதுபுறம் 2 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 96558 – 64958 |
| *வழிபட வேண்டிய முறை* | கல்வி பயிலத் தொடங்குமுன் குழந்தைகளை இக்கோயிலுக்குக் கூட்டி வந்து நெல்லில் "**ஓம் அட்சரபுரீஸ்வராய நமஹ**" என்று விரலைப் பிடித்து எழுத வைத்து வித்யாப்யாசத்தைத் தொடங்கும் நிகழ்ச்சி இங்கே மிகப் பிரபலம்.<br>பேச்சு வராத, சரியாகப் பேச வராத, படிப்பில் கவனமில்லாத குழந்தைகளை இங்கு அழைத்து வந்தால் சன்னிதியில் அக்குழந்தையின் நாக்கில் செம்பருத்திப் பூவின் காம்பால் சிவாச்சாரியார் "**ஓம் அட்சரபுரீஸ்வராய நமஹ**" என்றும், "**அகஸ்தியாய நமஹ**", "**ஸரஸ்வதியாய நமஹ**" என்றும் எழுதி அனுப்புகிறார். தேன் தினமும் அருந்த வேண்டும்.<br>சில நாட்களிலேயே குழந்தை நன்றாகப் பேச, படிக்கத் துவங்கி விடும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | கஜப் பிரஷ்ட விமான அமைப்புள்ள ஒரு விசேஷ கோயில். தேவாரத் திருத்தலங்களுள் 99–ஆவது தலம். சோழ நாட்டுக் காவிரி வடகரைத் தலம். அப்பர் சம்பந்தர் பாடல் பெற்றது. உத்திராட நட்சத்திரக் கோயில். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்<br>ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய<br>உருப்பளிங்கு போல்வாள் நம் உள்ளத்தினுள்ளே<br>இருப்பள் இங்கு வாராதிடர். ( கம்பர் ) |

## 66. கல்வி பயிலத் தொடங்க, கல்வியில் சிறந்து விளங்க

| | |
|---|---|
| *தலம்* | **கூத்தனூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ சரஸ்வதி அம்மன் ஆலயம்<br>கூத்தனூர்– 609 503, பூந்தோட்டம் வழி<br>நன்னிலம் வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவாரூர் – மயிலாடுதுறை சாலையில் பூந்தோட்டத்திற்கு மேற்கில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 01.00 மாலை : 04.00 – 08.30 |
| *தொலைபேசி* | 04366 – 239909 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கு அர்ச்சனை செய்து வழிபட குழந்தைகளின் கல்வி மேம்படும். வெண் தாமரைப்பூ சார்த்தவும்.<br>நவராத்திரி நாட்களில் குறிப்பாக விஜயதசமி யன்று வித்யாரம்பம் செய்தால் குழந்தைகள் நன்கு படிப்பர், கல்வியில் மிகச்சிறந்து விளங்குவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தமிழகத்திலேயே ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கு என்று தனியே அமைக்கப்பட்ட ஒரே ஆலயம். அஸ்வினி நட்சத்திரத்திற்கான கோயில். |
| | அருகில் உள்ள திருமீயச்சூர் லலிதாம்பிகையை அவசியம் தரிசிக்க வேண்டும். லலிதா சகஸ்ரநாமம் இங்குதான் இயற்றப்பட்டது. இது 173, 174–ஆவது தேவாரத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம், பாடல்* | 1. ஸரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி<br>வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மே ஸதா<br>( ஸரஸ்வதி துதி )<br>2. விநாயகர் அகவல் தினமும் பாராயணம் செய்யவும் ( பக்கம் – 109 ). |

# 67. கல்வியில் சிறந்து விளங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருவஹீந்திரபுரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ ஹயக்கிரீவர் கோயில்<br>திருவஹீந்திரபுரம் - 607 401<br>கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கடலூருக்கு மேற்கில் 5 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 1100 மாலை : 05.00 - 07.00 |
| *தொலைபேசி* | 04142 - 287515 |
| *வழிபட வேண்டிய முறை* | ஔஷதகிரி என்னும் குன்றின் மீது எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஹயக்கிரீவருக்கு அர்ச்சனை செய்து வழிபட கல்வி ஞானம் தடையின்றி கிடைக்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | கீழே உள்ள பெருமாள் கோயில் வைணவ திவ்ய தேசங்களுள் 41-ஆவது தலம்.<br>நடு நாட்டுத் திருப்பதி.<br>திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| | அருகில் 5 கி.மீ.ல் திருமாணிக்குழி என்ற 49-ஆவது தேவாரத் திருத்தலம் உள்ளது. வித்தியாசமான பூஜை. தரிசிக்க உகந்த தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம், பாடல்* | 1) ஞானா நந்தமயம் தேவம்<br>நிர்மல ஸ்படிகாக்ருதிம்<br>ஆதாரம் ஸர்வ வித்யானாம்<br>ஹயக்ரீவம் உபாஸ் மஹே<br>( ஹயக்கிரீவர் துதி )<br>2) விநாயகர் அகவல் தினமும் பாராயணம் செய்யவும். ( பக்கம் 109) |

## 68. கவனம் சிதறாமல் படித்து கல்வியில் மேம்பட

| | |
|---|---|
| *தலம்* | **துடையூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ மங்களாம்பிகை உடனாய<br>ஸ்ரீ கடம்பவன விஷ மங்களேஸ்வரர் திருக்கோயில்<br>துடையூர்– 621 213<br>திருவாசி வழி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – முசிறி சாலையில் ( 10 கி.மீ.ல்) திருவாசியை அடுத்து இடதுபுறம் கொள்ளிடக் கரையில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 12.30 மாலை : 05.00 – 07.00 |
| *தொலைபேசி* | 98947 – 96967 – ஹரிஹரன் |
| *வழிபட வேண்டிய முறை* | இத்திருத்தலத்தில் வீணையின்றி காட்சி தரும் யோக ஞான சரஸ்வதிக்கும், வீணையுடன் காட்சியருளும் திகி சண்டாள தட்சிணாமூர்த்திக்கும் தேனபிஷேகம் செய்து வழிபட்டு, அத்தேனை குழந்தைகளுக்குக் கொடுத்து வர, அவர்கள் நினைவாற்றலில் சிறந்து விளங்கி, நன்கு கல்வி கற்பர். மேலும் தட்சிணா மூர்த்திக்கு மனோரஞ்சிதப் பூ மாலை ஏழு வாரம் சார்த்தி வழிபடுவது மிக நல்ல பலனைக் கொடுக்கும்.<br>அருகிலுள்ள வாதக்கால் முனி சமாதியை வணங்கினால் சகலவிதமான வாதநோய்கள் விலகும்.<br>படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு, மாதாமாதம் திருவோணம் அன்று அங்குள்ள புற்றுக்கு பரிகாரம் செய்யப் படுகின்றது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | சிவன், விஷ்ணு, பிரம்மா, முருகன், தக்ஷிணாமூர்த்தி சூரியன் ஆகிய அறுவரும் தம்பதியராய் காட்சியருளும் ஆபூர்வத் தலம். வணங்கினால் தம்பதியினர் அன்யோன்யமாய் இருப்பர். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்<br>ஏய உணர்விக்கும் என்னம்மை – தூய<br>உருப்பளிங்கு போல்வாள் நம் உள்ளத்தினுள்ளே<br>இருப்பள் இங்கு வாராதிடர்.<br>( கம்பர் ) |

## 69. கல்வியில் மந்தம், கவனக்குறைவு, ஞாபகசக்தி குறைபாடு நீங்க

| | | |
|---|---|---|
| *தலம்* | **திருவெண்காடு** | |
| *விலாசம்* | ஸ்ரீ பிரம்மவித்யாநாயகி உடனாய<br>ஸ்ரீ சுவேதாரன்யேஸ்வரர் திருக்கோயில்<br>திருவெண்காடு அஞ்சல் – 609 114<br>சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை – பூம்புகார் சாலையில் மேலையூரிலிருந்து இடதுபுறமாகச் செல்லும் சீர்காழி சாலையில் மங்கை மடத்திற்கு முன்பாக உள்ளது. | |
| *நேரம்* | காலை : 06.00 – 01.00 மாலை : 04.00 – 08.30 | |
| *தொலைபேசி* | 04364 – 256424 | |
| *வழிபட வேண்டிய முறை* | கல்விக்கதிபதியான புதனுக்குரிய விசேஷமான தலம் இது. வித்யையை அருளும் ஸ்ரீ பிரம்ம வித்யாம்பிகையை வழிபட்டு, அருகிலேயே உள்ள புதனுக்கு, புதன்கிழமைகளில் நெய் தீபம் ஏற்றி 17 முறை வலம் வந்து வழிபட்டால் குறைகள் விரைவில் நீங்கும். கணிதத்தில் சிறந்து விளங்க இத்தலத்திற்கு வந்து வழிபடவும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றுங்கள். | |
| *இதர குறிப்பு* | காசிக்குச் சமமானத் தலம். தேவாரத் திருத் தலங்களுள் 65–ஆவது தலம். நால்வர் பாடிய தலம். முக்குளம் உள்ளது. நவக்கிரகத் தலம். அகோர மூர்த்தி மிக விசேஷம். பட்டினத்தார், சிறுத்தொண்டர் அவதாரத் தலம். ருத்ரபாதம் – பித்ரு காரியம் செய்ய உகந்த தலம். | |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்கள்* | ஓம் கஜத்வஜாய வித்மஹே<br>சுகஹஸ்தாய தீமஹி<br>தந்நோ புத ப்ரசோதயாத்<br>( புதன் காயத்ரி ) | இதமுற வாழ இன்னல் நீக்கும்<br>புத பகவானே பொன்னடி போற்றி<br>பதந் தருவாய்ப் பன்னொளி யானே<br>உதவியே அருளும் உத்தமா போற்றி!<br>( நவக்கிரக கவசம் – புதன் ) |

## 70. சிறந்த ஞாபகசக்தி, பேச்சாற்றல், கல்வி ஞானம் பெற

| | |
|---|---|
| *தலம்* | **செட்டிப் புண்ணியம்** |
| *விலாசம்* | ஸ்ரீ தேவநாதப் பெருமாள்<br>ஸ்ரீஹயக்கிரீவர் திருக்கோயில்<br>செட்டிப் புண்ணியம் - 603 204<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சென்னை – செங்கல்பட்டு தேசிய நெடுஞ்சாலையில் (NH45) சிங்கப்பெருமாள் கோயிலை அடுத்து வரும் மஹீந்திரா சிட்டி எதிர்புறச் சாலையில் 4 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 - 12.00 மாலை : 04.30 - 08.00 |
| *தொலைபேசி* | 044 - 27400836, 044 - 27464325, 86751 - 27999 |
| *வழிபட வேண்டிய முறை* | புதன் வியாழக் கிழமைகளில் ஸ்ரீ யோக ஹயக்கிரீவருக்கு கல்கண்டு, தேன் படைத்து அர்ச்சனை செய்து வேண்டிக் கொண்டு, தேனை தினமும் உட்கொண்டே வர நல்ல ஞாபக சக்தி, பேச்சாற்றல் , கல்வி ஞானம் கிட்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | அருகில் உள்ள சிங்கப் பெருமாள் கோயில் மிகப் பிரபலமான நரசிம்ம க்ஷேத்திரம். அவசியம் தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம், பாடல்* | 1) ஞானா நந்தமயம் தேவம்<br>நிர்மல ஸ்படிகாக்ருதிம்<br>ஆதாரம் ஸர்வ வித்யானாம்<br>ஹயக்ரீவம் உபாஸ் மஹே ( ஹயக்கிரீவர் துதி )<br>2) விநாயகர் அகவல் தினமும் பாராயணம் செய்யவும். ( பக்கம் 109) |

## 71. குழந்தைகள் மன பயம் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **ஊட்டத்தூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனாய<br>ஸ்ரீ சுத்தரத்னேஸ்வரர் திருக்கோயில்<br>ஊட்டத்தூர் அஞ்சல் - 621 109, பாடாலூர் வழி<br>லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி - சென்னை நெடுஞ்சாலையில் (NH45) பாடாலூருக்கு வலப்பக்கம் புள்ளம்பாடி சாலையில் 5 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 -12.00 மாலை : 04.30 - 08.00 |
| *தொலைபேசி* | 97880 - 62416 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்திலுள்ள கால பைரவருக்கு 11 வாரம் சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபட்டால் குழந்தை களுக்கான மன பயம் நீங்கும்.<br>தேய்பிறை அஷ்டமி திதி அன்று பைரவருக்கு ஹோமம் செய்து அன்னதானம் செய்து வந்தால் எதிரிகள் தொல்லை, வாகனங்களால் ஏற்படும் மரணபயம் நீங்கும். இது ஒரு விசேஷமான பூமி.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இங்குள்ள நடராசர் மிகவும் விசேஷம். காரியசித்தித் தலம். திருமண பாக்கியத் தலம். மாடுகளுக்கு வியாதி தீர்க்கும் தலம். தோஷ நிவர்த்தித் தலம். இழந்த பதவியை மீட்டுத்தரும் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | புத்திர்பலம் யசோ தைர்யம்<br>நிர்பயத்வம் அரோகதா<br>அஜாட்யம் வாக்படுத்வம் ச<br>ஹநுமத் ஸ்மரணாத் பவேத்.<br>(ஆஞ்சநேயர் ஸ்லோகம் ) |

## 72. கோழைத்தனம் நீங்கி, திட மனதுடன் விளங்க

| | |
|---|---|
| *தலம்* | **அனந்தமங்கலம்** |
| *விலாசம்* | ஸ்ரீ திரிநேத்திர தச புஜ அனுமன்<br>ஸ்ரீ ராஜகோபால சுவாமி திருக்கோயில்<br>காழியப்பநல்லூர் அஞ்சல் - 609 307<br>அனந்த மங்கலம், தரங்கம்பாடி வட்டம்<br>நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை - பொறையார் சாலையில் திருக்கடையூரை அடுத்து 5 கி.மீ.ல் இடதுபுறம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 01.00 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 04364 - 289888 |
| *வழிபட வேண்டிய முறை* | அமாவாசை, மூலம், கேட்டை, புதன், வியாழன், சனி போன்ற நாட்களில் ஸ்ரீ திரி நேத்திர தச புஜ அனுமனுக்கு அர்ச்சனை செய்து வடைமாலை சார்த்தி வழிபட, கோழைத் தனம் நீங்கி, அச்சம் அகன்று, அசாத்திய தன்னம்பிக்கையும், மன உறுதியும் கிடைக்கும். வாக்கு வன்மை பெருகும், அறிவு கூர்மையாகும். தொடர்ந்து வணங்கினால் வாழ்க்கையில் மேம்பட்டு விளங்குவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | அனுமன் பக்தர்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது இத்தலத்தை அவசியம் தரிசனம் செய்ய வேண்டும்.<br>திருக்கடையூரில் சஷ்டியப்த பூர்த்தி செய்பவர்கள் அந்த ஊரில் உள்ள அமிர்த நாராயணப் பெருமாள் கோயிலையும் அனந்தமங்கலம் ஆஞ்சனேயரையும் வணங்குவது நல்லது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | அஸாத்ய ஸாதக ஸ்வாமின்<br>அஸாத்யம் தவகிம் வத<br>ராம தூத கிருபாஸிந்தோ<br>மத் கார்யம் ஸாதயப்ரபோ.<br>( அனுமன் ஸ்லோகம் ) |

## 73. மந்தபுத்தி விலக

**(ஜாதகத்தில் குளிகன், மாந்தி இருந்தாலும் )**

| | |
|---|---|
| *தலம்* | **திருநறையூர் (நாச்சியார் கோயில்)** |
| *விலாசம்* | ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பிகா உடனாய<br>ஸ்ரீராமநாதசுவாமி திருக்கோயில்<br>திருநறையூர் – 612 602, நாச்சியார்கோயில்<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – திருவாரூர் சாலையில் சித்தீஸ்வரம் ஸ்ரீ சித்தநாதசுவாமி திருக்கோயிலுக்கும் நாச்சியார் கோயில் சீனிவாசப் பெருமாள் திருக்கோயிலுக்கும் இடையில் சாலையின் வலப்புறம் அமைந்துள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 12.30 மாலை : 04.30 – 08.30 |
| *தொலைபேசி* | 0435 – 2467167 |
| *வழிபட வேண்டிய முறை* | இது ஒரு சனிதோஷப் பரிகாரத் தலம். சனிக்கிழமை களில் ஈசனையும், அம்பாளையும் வணங்கி, குடும்பத்துடன் காட்சியருளும் சனி பகவானை அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட, மந்தபுத்தி விலகும். தோஷம் நிவர்த்தியாகும். உலகிலேயே இத்திருக்கோயிலில் மட்டுமே சனிபகவான் தன் மனைவிகளான மந்தாதேவி, ஜேஷ்டாதேவி சமேதராய் தன் இரு மகன்களான ஆயுளை நிர்ணயிக்கும் மாந்தி, காலத்தின் அதிபதியான குளிகன் இவர்களோடு காட்சியருளுகிறார்.<br>கருவறையில் எண்ணெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | அஷ்டமத்து சனி, ஏழரை சனி நடப்பவர்கள், எட்டு சனிக்கிழமைகளில் தொடர்ந்து அர்ச்சனை செய்ய கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | சங்கடந் தீர்க்கும் சனிபக வானே<br>மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்<br>சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே<br>இச்செகம் வாழ இன்னருள் தாதா!<br>( நவக்கிரக கவசம் – சனி ) |

## 74. கலைகளில், சங்கீதத்தில் சிறந்து விளங்க

| | |
|---|---|
| *தலம்* | **ஊத்துக்காடு** |
| *விலாசம்* | ஸ்ரீ காளிங்க நர்த்தன கிருஷ்ணர் திருக்கோயில்<br>ஊத்துக்காடு – 612 701<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் தாராசுரத்திற்கு அருகிலுள்ளது (11 கி.மீ.). திருக்கருகாவூரிலிருந்தும் வரலாம். |
| *நேரம்* | காலை : 09.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04374 – 268549 94426 – 99355 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ காளிங்க நர்த்தன கிருஷ்ணருக்கான ஒரே தனிக்கோயில். மிக அற்புத படைப்பு. சங்கீதம், கலைத்துறையைச் சார்ந்தவர்களின் பிரார்த்தனைத் தலம். கலையை புதிதாகக் கற்றுக்கொள்பவர்கள் மனமுருக பிரார்த்தனை, அபிஷேக ஆராதனைகள் செய்து அரங்கேற்றம் செய்தால் பிற்காலத்தில் மிகவும் பிரபலமாவர் என்பது நம்பிக்கை.<br>ஆலய வளர்ச்சிப் பணிகளுக்கு சங்கீத வித்வான்கள் எல்லோரும் தாராளமாக உதவ வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | (ஊத்துக்காடு) வெங்கட கவி பிறந்த தலம்.<br>ரோகிணி நட்சத்திரக் கோயில்.<br>ராகு கேது சர்ப்ப தோஷத்தினால் ஏற்படக் கூடிய திருமணத் தடை நீக்கும் வைணவத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்<br>பண் களிக்கும் குரல் வீணையும், கையும், பயோதரமும்<br>மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்<br>பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே.<br>( அபிராமி அந்தாதி 70–ஆம் பாடல்) |

## 75. சங்கீதத்தில் சிறந்து விளங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருவையாறு** |
| *விலாசம்* | ஸ்ரீ தர்மசம்வர்த்தினி உடனாய<br>ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில்<br>திருவையாறு - 613 201, தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூரிலிருந்து வடக்கில் 11 கி.மீ.ல் (கல்லணை சாலையில்) உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 - 12.00 மாலை : 04.00 - 09.00 |
| *தொலைபேசி* | 04362 - 260332 |
| *வழிபட வேண்டிய முறை* | திருக்குளத்தில் நீராடி ஈசனையும் அம்பாளையும் அபிஷேக அர்ச்சனை செய்து வழிபட சங்கீதத்தில் மேன்மை பெறுவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருமுறைத்தலங்களுள் 105-ஆவது தலம். சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது. மாணிக்கவாசகரும் பாடியுள்ளார்.<br>'தென் கைலாயம்' என அழைக்கப்படுகிறது.<br>இந்தத் தலத்திலுள்ள தெட்சிணாமூர்த்தி உத்திரட்டாதி நட்சத்திரத்திற்கு உரியவர்.<br>இக்கோயிலின் அருகிலேயே தியாகராஜர் சமாதி உள்ளது. அவசியம் தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்<br>பண் களிக்கும் குரல் வீணையும், கையும், பயோதரமும்<br>மண் களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்<br>பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே.<br>( அபிராமி அந்தாதி 70-ஆம் பாடல்) |

## 76. பிறந்து வெகு நாட்களாகியும் சரியாகப் பேச்சு வராமல் இருக்கும் குழந்தைகளுக்கு, பிறவி ஊமைகளுக்கு, திக்குவாய் உள்ளவர்களுக்கு, அதிர்ச்சியால் பேசும் தன்மை இழந்தவர்களுக்கு

| *தலம்* | **திருக்கோலக்கா** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ ஓசைகொடுத்த நாயகி உடனாய<br>ஸ்ரீ தாளபுரீஸ்வரர் திருக்கோயில்<br>திருக்கோலக்கா – 609 110<br>சீர்காழி அஞ்சல், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சீர்காழியிலிருந்து 1 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 11.30 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 04364 – 292175, 98658 – 85780<br>93450 – 07077 (மேலாளர்), 98430 – 11264 |
| *வழிபட வேண்டிய முறை* | அம்பாள் ஸ்ரீ தொனிப்ரதாம்பாள்– ஓசை கொடுத்த நாயகி நிறைய குழந்தைகளுக்குப் (இதுவரை 245) பேசும் தன்மை வழங்கியுள்ளார். இங்குள்ள திருக்குளத்தில் நீராடி ஈசனுக்கும் அம்பாளுக்கும் வாக்வாதினி அர்ச்சனை செய்து வழிபட, அர்ச்சகர் குழந்தையின் நாவில் அம்பாளின் அபிஷேக தேன் தடவுவார். தேன் பிரசாதமாக வழங்கப்படுகிறது. நாளடைவில் குழந்தைகள் நன்கு பேசுகின்றனர். 3 முதல் 80 வயது வரை உள்ளவர்களுக்கு அம்பாள் அருளால் இதுவரை பேச்சு வந்துள்ளது.<br>(பூஜை விபரங்களுக்கு பக்கம் எண். 112 பார்க்கவும்) |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 69–ஆவது தலம். சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.<br>பாடகர்களும், பேச்சாளர்களும் தமக்கு திடீரென்று தொண்டை கட்டிக் கொண்டாலோ, அல்லது குரல் ஒத்துழைக்காமல் இருந்தாலோ, இத்தல அம்பாளை தரிசித்து மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டு, அபிஷேகத் தேனை உட்கொண்டால் பலன் கிடைக்கும் என்பது உறுதி. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | மடையில் வாளை பாயமாதரார்<br>குடையும் பொய்கை கோலக்காவுளான்<br>சடையும் பிறையும் சாம்பற்பூச்சுங்கீழ்<br>உடையுங் கொண்ட வுருமமென்கொலோ. (சம்பந்தர் – தேவாரம்) |

## 77. ஊமை, திக்குவாய் குறைகள் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பேணுபெருந்துறை** |
| *விலாசம்* | ஸ்ரீ மங்களாம்பிகை உடனாய<br>ஸ்ரீ சிவானந்தேஸ்வரர் திருக்கோயில்<br>திருப்பந்துறை, நாச்சியார்கோயில் அஞ்சல் – 612 602<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – திருவாரூர் சாலையில் உள்ள நாச்சியார் கோயிலில் இருந்து பூந்தோட்டம் பாதையில் 1 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – 09.00 மாலை : 05.30 – 06.30 |
| *தொலைபேசி* | 94436 – 50826 |
| *வழிபட வேண்டிய முறை* | தந்தைக்கு உபதேசித்த முருகன் அதன்பின் ஊமையாகி விட்டதாகவும், இத்தல ஈஸ்வரனை வழிபட்டு மீண்டும் அத்திறனைப் பெற்றதாகவும் தல வரலாறு. ஈசனையும், அம்பாளையும் வழிபட்ட பிறகு முருகனுக்குத் தேனபிஷேகம் செய்து, அத்தேனை 45 நாட்கள் அருந்திவர குறைபாடுகள் நீங்கும். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 181–ஆம் தலம். சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர் பாடல் பெற்றது. |
| | இதேபோல ஊமைத்தன்மை நீக்கும் மற்றொரு தலம் திருஎருக்கத்தம்புலியூர் எனும் ராஜேந்திரப் பட்டணம். (பார்க்க வ.எண். 19) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல் பற்றிய தகவல்* | மாணிக்கவாசகர் அருளிய அற்புத அபரித சக்திவாய்ந்த **திருச்சாழல்** எனும் பதிகத்தை ஊமையாய் இருப்பவர்களுக்காக மற்றவர்கள், குழந்தைக்காக அதன் தாயார் முறையாக தினமும் பாராயணம் செய்து வந்தால், ஊமைத் தன்மை நீங்கி, திக்குவாய் குறைகள் நீங்கி, வாக்கு வன்மையை பெருகச் செய்யும். ( இப்பதிகம் திருப்பேணுபெருந்துறை கோயிலில் கிடைக்கும்). |

## 78. அதிர்ச்சியால் பேசமுடியாது போனவர்கள் மீண்டும் பேச

| | |
|---|---|
| *தலம்* | **திருக்காரகம் – காஞ்சிபுரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ பத்மாமணித்தாயார் உடனாய<br>ஸ்ரீ கருணாகரப் பெருமாள் திருக்கோயில்<br>திருக்காரகம், காஞ்சிபுரம்– 631 501. |
| *வழித்தடம்* | காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள் கோயில் உள் பிரகாரத்திலுள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 –12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 94435 – 97017 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ கருணாகரப் பெருமாளையும், ஸ்ரீ பத்மாமணித் தாயாரையும் முறைப்படி வணங்கி, மனமுருகி பிரார்த்தனை செய்தால் அதிர்ச்சியால் ஊமையாகிப் போனவர்களுக்கு நாளடைவில் மீண்டும் பேச்சு வரும் என்பது ஐதீகம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்யதேசங்களுள் 52–ஆவது தலம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். |
| | பயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி நீங்க, கும்பகோணம் அருகில் உள்ள திருபுவனம் ஈசனையும் தரிசிக்கலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | நீரகத்தாய்! நெடுவரையி னுச்சிமேலாய்!<br>நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி<br>ஊரகத்தாய், ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்!<br>உள்ளுவா ருள்ளத்தாய்! உலகமேத்தும்<br>காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!<br>காமரூபூங் காவிரியின் தென்பால் மன்னு<br>பேரகத்தாய், பேராதென் நெஞ்சி னுள்ளாய்!<br>பெருமான்உன் திருவடியே பேணினேனே. ( திருமங்கையாழ்வார் ) |

# 79. மாற்றுத்திறனாளிகள் நலம் பெற

| | |
|---|---|
| *தலம்* | **திருக்கூடலூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ பத்மாஸனி, புஷ்பவல்லி உடனாய<br>ஸ்ரீ வையம் காத்த ஆடுதுறை பெருமாள் திருக்கோயில்<br>உள்ளிக்கடை அஞ்சல்– 614 202<br>கணபதி அக்ரஹாரம் (வழி)<br>பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | திருவையாறு – கும்பகோணம் (கல்லணை) சாலையில் 11 ஆவது கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.30 – 12.30 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 96598 – 80628, 76678 – 86775 (பட்டர்) |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ வையம் காத்தப் பெருமாளையும், பத்மாஸனி ஸ்ரீ புஷ்பவல்லித் தாயாரையும் மனம் உருகி வழிபட்டால் மாற்றுத் திறனாளிகள் நாளடைவில் நலம் பெறுகின்றனர் என்பது நம்பிக்கை.<br>வெள்ளைநிறப் பூ 4 முழம் பெருமாளுக்குச் சார்த்தி, 1/4 கிலோ வெண்ணெய், கல்கண்டு படைத்து 16 நாட்கள் அர்ச்சனை செய்து மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டால், பிரிந்த தம்பதியர் மீண்டும் சேர்வர். |
| *இதர குறிப்பு* | வராக அவதாரத்திற்கு முன்பே தோன்றியவர்.<br>வைணவ திவ்ய தேசங்களில் 8–ஆவது திருத்தலம்.<br>திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப் பட்டது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தாம்தம் பெருமை யறியார், தூது<br>வேந்தர்க் காயவேந்தரூர் போல்,<br>காந்தள் விரல்மென் கலைநன் மடவார்,<br>கூந்தல் கமழும் கூடலூரே.<br><br>செறும்திண் திமிலேறுடைய, பின்னை<br>பெறும்தண் கோலம் பெற்றா ரூர்போல்,<br>நறுந்தண் தீந்தே னுண்ட வண்டு,<br>குறிஞ்சி பாடும் கூடலூரே.<br>( திருமங்கையாழ்வார் ) |

## 80. உரிய காலத்தில் திருமண பாக்கியம் பெற

| | |
|---|---|
| *தலம்* | **திருவிடந்தை** |
| *விலாசம்* | ஸ்ரீ லக்ஷ்மி வராஹர் ஸ்ரீ நித்ய கல்யாண பெருமாள் திருக்கோயில். திருவிடந்தை - 603 112 கிழக்குக் கடற்கரை சாலை, சென்னை. |
| *வழித்தடம்* | சென்னை மகாபலிபுர கிழக்குக் கடற்கரை சாலையில் சென்னையிலிருந்து 24 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 - 12.00 மாலை : 03.00 - 08.00 |
| *தொலைபேசி* | 044 - 27472235 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ லக்ஷ்மி வராஹரை அர்ச்சனை செய்து வழிபட்டு 9 முறை வலம் வந்து பிரார்த்தித்தால் விரைவில் திருமணம் கைகூடும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 62 ஆம் தலம். தொண்டை நாட்டிலுள்ளது. திருஷ்டி நீக்கும் தலமும் கூட. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | பார்த்தற் காயன்று பாரதங்கைசெய் திட்டு வென்ற பரஞ்சுடர்,<br>கோத்தங் காயர்தம் பாடியில்குர வைபி ணைந்தஎம் கோவலன்,<br>ஏத்து வார்தம் மனத்துள் ளான் இட வெந்தை மேவிய வெம்பிரான்,<br>தீர்த்த நீர்த்தடஞ்சோலை சூழ்திரு வேங்கடமடை நெஞ்சமே!<br>( திருமங்கையாழ்வார் ) |

## 81. திருமணத் தடை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **நாச்சியார் கோயில் ( திருநறையூர்)** |
| *விலாசம்* | ஸ்ரீ வஞ்சுளவல்லி தாயார் உடனாய<br>ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்<br>நாச்சியார் கோயில் - 612 602<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணத்திலிருந்து திருவாரூர் சாலையில் 10 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 - 12.30 மாலை : 04.00 - 09.00 |
| *தொலைபேசி* | 0435 - 2467167 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்தில் தனிச் சன்னதி கொண்டு திருமேனியில் நவ சர்ப்பங்கள் தரித்து பிரார்த்தனாவாதியாய் விளங்கும் அருள்மிகு கல்கருட பகவானுக்குத் தொடர்ந்து 7 வியாழக்கிழமை அர்ச்சனை செய்து வர திருமணத்தடை நீங்கும். பிரார்த்தனைகள் நிறைவேறும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 14-ஆம் தலம். சோழ நாட்டுத் திருத்தலம்.<br>திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| | மூலம் நட்சத்திரக்காரர்களுக்குத் தடை இருந்தால், திருநெல்வேலிக்கு அருகில் உள்ள நாங்குனேரி ஸ்ரீ தோத்தாத்ரி பெருமாளையும் தரிசிக்கவும். |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | பெடையடர்த்த மடவன்னம் பிரியாது மலர்க்கமலம்<br>மடலெடுத்து மது நுகரும் வயலுடுத்த திருநறையூர்<br>முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்,<br>இடர்கெடுத்த திருவாளன் இணையடியே அடைநெஞ்சே<br>( திருமங்கையாழ்வார் ) |

## 82. திருமணத் தடை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பைஞ்ஞீலி** |
| *விலாசம்* | ஸ்ரீ விசாலாட்சி உடனாய<br>ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் திருக்கோயில்,<br>திருப்பைஞ்ஞீலி அஞ்சல் – 621 005<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – துறையூர் சாலையிலுள்ள மண்ணச்சநல்லூருக்கு (மேற்கே) அருகிலுள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 – 01.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 0431 – 2902654 |
| *வழிபட வேண்டிய முறை* | ஞீலி வாழை பயிராகும் ஒரே தலம்.<br>ஸ்ரீ ஞீலிவனேஸ்வரருக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனை செய்து வழிபட்டால் திருமணத்தடை விலகும். தொலைபேசியில் தொடர்பு கொண்டு மற்ற விவரங்கள் அறியவும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் தலங்களில் 115–ஆவது திருத்தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>மூவரால் பாடப்பெற்றது.<br>யம பயம் தீர்க்கும் தலமும் கூட. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க<br>எங்கட்கு ஒரு தவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்<br>தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்<br>வெங்கட் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.<br>(அபிராமி அந்தாதி 35–ஆம் பாடல் ) |

## 83. திருமணத் தடை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருமணஞ்சேரி** |
| *விலாசம்* | ஸ்ரீ கோகிலாம்பாள் உடனாய<br>ஸ்ரீ உத்வாகநாதசுவாமி திருக்கோயில்,<br>திருமணஞ்சேரி - 609 813, மயிலாடுதுறை வட்டம்,<br>நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - மயிலாடுதுறை (கல்லணைச்) சாலையில் குத்தாலத்திற்கு அருகிலுள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 01.00 மாலை : 03.30 - 08.00 |
| *தொலைபேசி* | 04364 - 235002 |
| *வழிபட வேண்டிய முறை* | ஈசனுக்கும் அம்பாளுக்கும் அர்ச்சனை செய்து மாலைகள் அணிவித்து வழிபட்டால் திருமணத் தடை நீங்கும். பின்னர் கோயிலில் தரும் ஒரு மாலையை வீட்டிற்கு எடுத்து வந்து பூசை அறையில் வைத்திருந்து வழிபட்டால் திருமணம் விரைவில் கைகூடும். திருமணம் முடிந்ததும் தம்பதியராக சென்று அம்மாலையைக் கோயிலில் சேர்க்க வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களில் 79-ஆம் தலம். சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது.<br>இதேபோல இன்னொரு திருமணஞ்சேரி புதுக்கோட்டை மாவட்டத்தில் கரம்பக்குடியிலிருந்து 2 கி.மீ.ல் உள்ளது. ஸ்ரீ பெரிய நாயகி அம்பாள் உடனுறை ஸ்ரீசுகந்த பரிமளேஸ்வரர் திருக்கோயில். 99436 06119 (குருக்கள்) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னி வைக்க<br>எங்கட்கு ஒரு தவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்<br>தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ? தரங்கக் கடலுள்<br>வெங்கட் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.<br>(அபிராமி அந்தாதி 35-ஆம் பாடல் ) |

## 84. மூலம், ஆயில்யம் மற்றும் சுவாதி நட்சத்திரக்காரர்களுக்கான திருமணத் தடை நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **இஞ்சிமேடு (யக்னமேடு)** |
| *விலாசம்* | ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்<br>இஞ்சிமேடு, பெரணமல்லூர் அஞ்சல் – 604 503<br>வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். |
| *வழித்தடம்* | வந்தவாசி – சேத்துப்பட்டு பாதையில் சின்னக் கொளப்பளூரில் இருந்து வலப்பக்கம் செல்லலாம் அல்லது வந்தவாசி – ஆரணி பாதையில் சடத்தாங்கல், பெரணமல்லூர் வழியாக இடப்பக்கம் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 09.00 – 12.00 மாலை : 05.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04183 - 225808, 94440 - 22548, 99625 - 22548 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்திலுள்ள, யாகத்திலிருந்து தோன்றிய ஸ்ரீ யக்ன சம்ரக்ஷண ராமரை அர்ச்சனை செய்து வழிபட்டால், மூலம் மற்றும் ஆயில்யம் நட்சத்திரங்களினால் ஏற்படும் திருமணத் தடை நீங்குவது உறுதி. ஸ்ரீ கல்யாண லட்சுமி நரசிம்மரை வழிபட்டால் சுவாதி நட்சத்திரக்காரர்களுக்குத் திருமணத்தடை நீங்கும். மற்ற விவரங்களுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்க! |
| *இதர குறிப்பு* | 1500 ஆண்டு பழைமை வாய்ந்த கோயில். |
| | இதே போல புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசலில் உள்ள தேவார வைப்புத் தலம் ஸ்ரீ தர்மஸம்வர்தினி உடனாய ஸ்ரீ விருத்தபரீஸ்வரர் திருக்கோயிலில் ஈசனையும் அம்பாளையும் பால் அபிஷேகம் செய்து அர்ச்சித்து வழிபட்டால் மூலம், ஆயில்யம், கேட்டை நட்சத்திரக்காரர்களின் திருமணத்தடை விலகும்.<br>06.00 - 12.00, 04.00 - 08.00; 99762 - 38448 |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ய: ஸ்வாமீ ஸரஸஸ்தடே விஹரதோ ஸ்ரீஸ்வாமி நாம்ன: ஸதா<br>ஸௌவர்ணாலய மண்டிதோ விதிமுகைர்பர்ஹிர்முகை: ஸேவித:<br>ய: சத்ருன் ஹனயன்னிஜானவதி ச ஸ்ரீபூவராஹாத்மக:<br>ஸ்ரீமத் வேங்கட பூதேந்த்ரரமண: குர்யாத்தரிர் மங்களம்<br>மங்கள ஸ்லோகம் ( வராஹர் ) |

## 85. திருமணம் கைகூட, புத்திரபாக்யம் பெற, பதவி உயர்வு பெற

| *தலம்* | **திருக்காவளம்பாடி** |
|---|---|
| *விலாசம்* | ஸ்ரீ மடவரல்மங்கை தாயார் உடனாய<br>ஸ்ரீ ராஜ கோபால சுவாமி திருக்கோயில்<br>திருக்காவளம்பாடி<br>கீழ்சட்டநாதபுரம் அஞ்சல் - 609 109<br>திருநாங்கூர் வழி, நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சீர்காழி - பூம்புகார் வழித்தடத்தில் உள்ளது. நாங்கூரிலிருந்து 3 கி.மீ. திருவெண்காடு வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 08.00 - 11.00 மாலை : 04.00 - 06.00 |
| *தொலைபேசி* | 04364 - 237690, 97878 - 53732 |
| *வழிபட வேண்டிய முறை* | அவல், வெண்ணெய் அமுது செய்து ஸ்ரீ கோபால கிருஷ்ணரையும் தாயாரையும் அர்ச்சனை செய்து வழிபட விவாஹம் விரைவில் கைகூடும், சந்தான பாக்கியம் கிடைக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களுள் 27-ஆம் தலம். திருநாங்கூர் பதி. இங்கு 11 கருட சேவை மிகவும் சிறப்பு.<br>திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தாவளந் துலக முற்றும் தடமலர்ப் பொய்கை புக்கு,<br>நாவளம் நவின்றங் கேத்த நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்,<br>மாவளம் பெருகி மன்னும் மறையவர் வாழும் நாங்கைக்,<br>காவளம் பாடிமேய கண்ணனே! களைகண் நீயே.<br>( திருமங்கையாழ்வார் ) |

## 86. பெண்களுக்கான கர்ப்பப்பைக் கோளாறுகள், ருதுகால பிரச்சினைகள் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **பெட்டவாய்த்தலை** |
| *விலாசம்* | ஸ்ரீ பாலாம்பிகை உடனாய<br>ஸ்ரீ மத்தியார்ஜுனேஸ்வரர் திருக்கோயில்<br>பெட்டவாய்த்தலை-639 112, திருவரங்கம் வட்டம்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி - கரூர் சாலையில் 25 கி.மீ.ல் குளித்தலைக்கு முன்பாக உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.45 - 12.45 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 0431 - 2612442 |
| *வழிபட வேண்டிய முறை* | இவ்வாலயத்தின் விசேஷ பெருமை : இந்த ஊரில் வாழ்ந்த பொற்றாளம் பூவாய் சித்தர் "இக்கோயில் அம்பாள் பாலாம்பிகைக்கு விரதம் இருந்து வழிபட்டால் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் மற்றும் கர்ப்பப்பை கோளாறுகள் நீங்கும்" என்று அருள்வாக்கு கூறியுள்ளார். இதனால் மேற்கண்ட பிரச்சினைகள் உள்ள பெண்கள் இக்கோயிலில் உள்ள பொற்றாளம் பூவாய் சித்தர் திருமேனியில் தங்களது பிரச்சினைகள் நிவர்த்தியாக வேண்டும் என்று ஒரு சீட்டில் எழுதிக் கட்டி வைக்கின்றனர். தொடர்ந்து இறைவனையும், இறைவியையும் வழிபடுகின்றனர்.<br>இவ்வாறு செய்தால் மாதவிடாய், கர்ப்பப்பை பிரச்சினை மற்றும் குழந்தைப் பேரின்மை உள்ள பெண்கள் அந்த பாதிப்பில் இருந்து விடுபடலாம். இவ்வாறு அந்தக் கோளாறுகளில் இருந்து விடுபட்ட பெண்கள் ஏராளம் என்பது கண்கூடாக தெரிகிறது. |
| *இதர குறிப்பு* | இதே போலுள்ள மற்றொரு தலம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள வலங்கைமானிலிருந்து 4 கி.மீல் உள்ள ஆண்டான் கோவிலாகும். (கடுவாய் புத்தூர்) இது தேவாரத் திருத்தலங்களுள் 214-ஆவது ஆகும். 04374 - 265130<br>நேரம் : 08.00 - 12.00 04.00 - 08.00 |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | பாலாம்பி கேச வைத்யேச<br>பவரோக ஹரேதிச<br>ஜபேந் நாமத்ரயம் நித்யம்<br>மஹா ரோக நிவாரணம் |

## 87. பிள்ளைப் பேறு பெற

| | |
|---|---|
| *தலம்* | **(ராஜ) மன்னார்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ ருக்மணி, சத்யபாமா உடனாய<br>ஸ்ரீ ராஜ கோபால சுவாமி திருக்கோயில்<br>மன்னார்குடி- 614 001, தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சைக்கு மேற்குத் திசையிலுள்ளது. தஞ்சை, திருவாரூர், கும்பகோணம், திருச்சியில் இருந்து பேருந்து வசதியுள்ளது. பெரிய ஊர். |
| *நேரம்* | காலை : 05.00 - 12.00 மாலை : 04.30 - 09.00 |
| *தொலைபேசி* | 04367 - 222276 |
| *வழிபட வேண்டிய முறை* | பிள்ளைப்பேறு வேண்டுவோர் திருக்குளத்தில் நீராடி, ஸ்ரீ வாசுதேவர், ருக்மணி, சத்யபாமாவுக்கு அர்ச்சனை செய்து, ஸ்ரீ சந்தான கோபாலனை கையிலெடுத்து பட்டர் கூறும் ஸ்லோகத்தை சொல்லி வழிபட்டு ஸப்த பிரகாரம் வலம் வர வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள்.. |
| *இதர குறிப்பு* | அபிமானத் தலம். இது ஒரு ரோகிணி நட்சத்திரக் கோயில். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | இந்தீவரஸ்யாமள கோமளாங்கம்<br>இந்த்ராதி தேவார்ச்சித பாதபத்மம்<br>ஸந்தான கல்பத்ரும மாஸ்ரிதானாம்<br>பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி<br>( பால முகுந்தாஷ்டகம் ) |

## 88. பிள்ளைப் பேறு பெற

| | |
|---|---|
| *தலம்* | **கருவளர்சேரி** |
| *விலாசம்* | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஆலயம்<br>கருவளர்சேரி, மருதாநல்லூர் அஞ்சல் - 612 402<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - வலங்கைமான் பாதையில் மருதா நல்லூரிலிருந்து கிழக்கில் 1கி.மீ.ல் அமைந்துள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 - 12.00 மாலை : 04.00 - 08.00 |
| *தொலைபேசி* | 0435- 2000538; 93448 - 95538<br>(வேம்பு குருக்கள்) |
| *வழிபட வேண்டிய முறை* | திருமணமாகி வெகு நாட்களாகியும் குழந்தைப்பேறு இல்லாத பெண்கள், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி தாயிடம் வேண்டிக் கொண்டு, படி பூஜை செய்து அவளது மஞ்சள் கிழங்கினைப் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து பூசி வர பிள்ளைப்பேறு விரைவில் கிட்டும்.<br>கொண்டு செல்ல வேண்டியது :<br>உருண்டை மஞ்சள்-7, எலுமிச்சைப்பழம் 2, தேங்காய் - 2, நெய், பழங்கள், வெற்றிலை பாக்கு, புஷ்பம் அல்லது மாலை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | அருகிலேயே ஏனாதிநாத நாயனார் பிறந்து முக்தி பெற்ற தலம் ஏனனூர் உள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்<br>தகனம் முன் செய்த தவப்பெருமாற்கு, தடக்கையும் செம்<br>முகனும், முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்<br>மகனும் உண்டாயது அன்றோ? வல்லி! நீ செய்த வல்லபமே!<br>( அபிராமி அந்தாதி 65-ஆம் பாடல் ) |

## 89. கரு உண்டாக மற்றும் (கருச்சிதைவு ஏற்படாமல்) கரு காத்து சுகப்பிரசவமாக

| | |
|---|---|
| *தலம்* | **திருக்கருகாவூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ கர்ப்ப ரக்ஷாம்பிகை உடனாய<br>ஸ்ரீ முல்லை வன நாதர் திருக்கோயில்<br>திருக்கருகாவூர் அஞ்சல் – 614 302<br>பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூர் – கும்பகோணம் சாலையிலுள்ள பாபநாசத்திலிருந்து தெற்கே செல்லலாம் அல்லது தஞ்சாவூர் நீடாமங்கலம் சாலையிலுள்ள சாலியமங்கலத்திலிருந்து வடக்கே செல்லலாம். |
| *நேரம்* | காலை : 06.00 – 12.30 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 04374 – 273423, 94439-08300, 88700- 58269 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ கர்ப்பரக்ஷாம்பிகையின் சன்னிதி படியை நெய்யால் மெழுகி கோலமிட்டு அர்ச்சனை செய்து வழிபட்டு வலம் வந்து பிரார்த்தித்துக் கொண்டால் அன்னை கரு கொடுப்பாள், கருவைக் காத்தருள்வாள்.<br>இங்கு மந்திரித்துத் தரப்படும் விளக்கெண்ணை யினை கருவுற்றத் தாயின் வயிற்றில் தடவி வந்தால், கரு காக்கப்பட்டு சுகப்பிரசவம் உண்டாகும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் தலங்களுள் 135–ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்<br>தகனம் முன் செய்த தவப்பெருமாற்கு, தடக்கையும் செம்<br>முகனும், முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்<br>மகனும் உண்டாயது அன்றோ? வல்லி! நீ செய்த வல்லபமே!<br>( அபிராமி அந்தாதி 65–ஆம் பாடல் ) |

## 90. சுகப் பிரசவத்திற்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சிராப்பள்ளி** |
| *விலாசம்* | ஸ்ரீ மட்டுவார்குழலி உடனாய<br>ஸ்ரீ தாயுமானவ சுவாமி திருக்கோயில்,<br>மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி - 620 002. |
| *வழித்தடம்* | பெரிய நகரங்களில் ஒன்று. தமிழ்நாட்டின் மையப் பகுதியில் உள்ளது. |
| *நேரம்* | காலை : 05.30 - 12.00 மாலை : 04.00 - 08.30 |
| *தொலைபேசி* | 0431 - 2704621, 2710484 |
| *வழிபட வேண்டிய முறை* | மலைக்கோயில் (258 படிகள்). செட்டிப் பெண்ணுக்குப் பிரசவம் பார்க்க ஈசன் தாயாய் வந்தருளிய தலம்.<br>ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட சுகப்பிரசவம் ஏற்படும். பிரார்த்தனை நிறைவேறிய பின்னர் வாழைத்தார் வாங்கித்தந்து நேர்த்திக் கடனைப் பூர்த்தி செய்ய வேண்டும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 123-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது.<br>கடும் ஜுரம் நீங்க ஜ்வரதேவரை வழிபடலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம், பாடல்* | 1) ஹே சங்கர ஸ்மரஹர பிரமாதி நாத<br>மன்னாத ஸாம்ப சசிசூட ஹர திரிசூலின்<br>சம்போ சுகப்ரஸவக்ருத் பவமே தயாளோ<br>ஸ்ரீமாத்ருபூத சிவ பாலயமாம் நமஸ்தே<br>மேற்படி சுலோகத்தை மூன்றுமுறை தினம் சொல்லவும்.<br>2) மட்டுவார் குழலா ளொடு மால்விடை<br>இட்டமா உகந்தேறும இறைவனார்<br>கட்டு நீத்தவர்க்கு இன்னருளே செயும்<br>சிட்டர் போலும் சிராப்பள்ளிச் செல்வரே (அப்பர்) |

## 91. சுகப் பிரசவத்திற்கு

| | |
|---|---|
| *தலம்* | **திருப்புறம்பயம்** |
| *விலாசம்* | ஸ்ரீ கரும்படு சொல்லியம்மை உடனாய<br>ஸ்ரீ சாட்சி நாத சுவாமி திருக்கோயில்<br>திருப்புறம்பயம் அஞ்சல் – 612 303<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – திருவையாறு சாலையில் சுவாமி மலைக்கு முன்னதாக உள்ள புளியஞ்சேரியில் பிரியும் வலதுபுற சாலையில் இன்னம்பூர் (99–வது தேவாரத் தலத்தைக்) கடந்து செல்ல வேண்டும். |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 94446 – 26632, 99523 – 23429 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ குகாம்பாளுக்கு பௌர்ணமியன்று சாம்பிராணித் தைலம் சார்த்தி மனமாற வழிபட, சுகப் பிரசவம் ஆகும். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 100–ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது. ஆயில்ய நட்சத்திரக் கோயில். |
| | கோர்ட் விவகாரங்களில் அல்லல்படும் பக்தர்கள் ஈசனை வழிபட்டால், நல்ல நியாயமான தீர்ப்பு கிடைக்கும். |
| | அம்பிகை இனிய குரல் வளம் அருளுபவர். இசை வல்லுனர்கள், பேச்சாளர்கள் சித்திரை 1 முதல் 30 தேதி வரை வழிபட்டால் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஹே சங்கர ஸ்மரஹர பிரமாதி நாத<br>மன்னாத ஸாம்ப சசிசூட ஹர திரிசூலின்<br>சம்போ சுகப்ரஸவக்ருத் பவமே தயாளோ<br>ஸ்ரீமாத்ருபூத சிவ பாலயமாம் நமஸ்தே<br>மேற்படி சுலோகத்தை மூன்றுமுறை தினம் சொல்லவும். |

## 92. தீர்க்க சுமங்கலியாக வாழ

| | |
|---|---|
| *தலம்* | **திருமங்கலக்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ மங்களாம்பிகை உடனாய<br>ஸ்ரீ பிராணநாதேஸ்வரர் திருக்கோயில்<br>திருமங்கலக்குடி – 612 102<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சை மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – மயிலாடுதுறை (கல்லணை) சாலையில் சூரியனார் கோயிலுக்கு முன்னதாகவே உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.30 – 12.30 மாலை : 04.00 – 08.30 |
| *தொலைபேசி* | 0435 – 2470480 |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ மங்களாம்பிகைக்கு மனமுருகப் பிரார்த்தித்து 5 வெள்ளிக்கிழமை அர்ச்சனை செய்தால் திருமணத்தடை, களத்திர தோஷம் நீங்கி தீர்க்க சுமங்கலி பிராப்தம் கிடைக்கப் பெறுகிறார்கள். திருமணம் ஆனபிறகு மாங்கல்ய தோஷம் உள்ளவர்கள், மங்களாம்பிகைச் சன்னதியில் **மறுமாங்கல்யம்** செய்து கொள்வதால் தீர்க்க சுமங்கலி பிராப்தம் கிடைக்க பெறுகிறார்கள்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களில் 92-வது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.<br>இவ்வாலயத்தின் தனி சிறப்பு சுவாமி சன்னிதியில் வெள்ளை எருக்கன் இலையில் தயிர்சாதம் நிவேதனம் செய்து சாப்பிடுவது. |
| | ஞாயிறு அன்று அர்ச்சனையும், தயிர்சாதம் அன்னதானமும் செய்தால் பூர்வ ஜென்ம தோஷம், பித்ருக்கள் தோஷம், நவக்கிரஹங்கள் தோஷம், முன்னோர்கள் சாபம், புத்திரதோஷம், 7 1/2 ஆண்டு சனிதோஷம், அஷ்டம சனிதோஷம் போன்றவை நிவர்த்தியாகும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஸர்வ மங்கள மாங்கல்யே<br>சிவே ஸர்வார்த்த சாதகே!<br>சரண்யே திரியம்பகே தேவி<br>நாராயணீ நமோஸ்துதே |

## 93. மாங்கல்ய தோஷம் நிவர்த்தியாக

| | |
|---|---|
| *தலம்* | **திருவேள்விக்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ பரிமள சுகந்த நாயகி உடனாய<br>ஸ்ரீ மணவாளேஸ்வரர் திருக்கோயில்<br>திருவேள்விக்குடி - 609 801<br>குத்தாலம் அஞ்சல், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - மயிலாடுதுறை ( கல்லணை ) சாலையில் குத்தாலத்திற்கு வடகிழக்கே 3 கி.மீ.ல் உள்ளது. மிகச்சிறிய கிராமம். |
| *நேரம்* | காலை : 07.00 - 11.00 மாலை : 05.00 - 07.00 |
| *தொலைபேசி* | 04364 - 235462 |
| *வழிபட வேண்டிய முறை* | ஒவ்வொரு பௌர்ணமியும் மாங்கல்ய தோஷம் நிவர்த்தியாகவும், புத்திர பாக்கியம் பெறவும், யாகம் செய்து மாலை அணிவிக்கப்படுகிறது.<br>கொண்டு செல்ல வேண்டியது : மாலை 2, தேங்காய் 2, வாழைப்பழம், நல்லெண்ணெய் 1/2 லிட்டர், வெற்றிலை பாக்கு, உதிரிப்பூ, குங்குமம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களில் 77-ஆவது தலம். சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது.<br>இது திருமணத்தடை நீக்கும் தலம்.<br>தோல் வியாதியை நீக்கும் தலமும் கூட. |
| | அருகிலுள்ள திருமணஞ்சேரியையும் இத்தலத்தையும் ஒரே நாளில் தரிசித்தல் விசேஷம். (பார்க்க வ.எண். 83) |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஓம்கார பூர்விகே தேவி வீணா புஸ்தகதாரிணி<br>வேதமாதர்நமஸ்துப்யம் அவைதவ்யம் ப்ரயச்சமே<br>பதிவ்ரவே மஹாபாகே பர்துஸ்ச ப்ரியவாதினி<br>அவைதவ்யம்ச ஸௌபாக்யம்<br>தேஹித்வம் மம ஸுவ்ருதே!<br>புத்ரான் பௌத்ராம்ஸ்ச ஸௌக்யம்<br>ஸௌமங்கல்யம் ச தேஹிமே! ( ஸௌபாக்ய ஸ்லோகம் ) |

# 94. பிரிந்த தம்பதியர் ஒன்று சேர

| *தலம்* | **திருலோக்கி** |
|---|---|
| விலாசம் | ஸ்ரீ மஹாலக்ஷ்மி உடனாய<br>ஸ்ரீ க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாள் திருக்கோயில்<br>திருலோக்கி அஞ்சல் – 609 804, துகிலி வழி<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – சென்னை சாலையிலுள்ள திருப்பனந்தாளிலிருந்து தென்கிழக்கில் 5 கி.மீ.ல் உள்ளது.<br>கும்பகோணம் – சுவாமிமலை கல்லணை சாலையிலுள்ள துகிலியிலிருந்தும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 09.00 – 11.00; மாலை : 05.30 – 07.30 |
| *தொலைபேசி* | 94870 – 31630 (பட்டர்) |
| *வழிபட வேண்டிய முறை* | ஸ்ரீ க்ஷீராப்தி சயன நாராயணப் பெருமாளுக்கு வில்வத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டு வலம் வந்தால், பிரிந்த தம்பதியினர் ஒன்று சேர்வர் என்பது ஐதீகம். இப்பெருமாள் பிரியா வரமருள்பவர். கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | திருலோக்கியில் உள்ள சிவன் கோயில். கருவூர்த் தேவர் பாடல் பெற்ற திருவிசைப்பா தலம். மாங்கல்ய தோஷ நிவர்த்தித் தலம் ( 93607 - 69884 ), 0435-2456696<br>இதே போல பிரிந்த குடும்பம் ஒன்று சேர தரிசிக்க வேண்டிய கோயில் சென்னை கோயம்பேட்டிலுள்ள குறுங்காலீஸ்வரர் கோயில் 044 – 24796237.<br>குடும்பத்தில் ஒற்றுமை நிலவ தரிசிக்க வேண்டிய கோயில் சென்னை திரிசூலத்திலுள்ள திரிசூலநாதர் கோயில். 044 – 22642600 |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | வருந்தாவகை, என் மனத் தாமரையினில் வந்து புகுந்து,<br>இருந்தாள், பழைய இருப்பிடமாக; இனி எனக்குப்<br>பொருந்தாது ஒரு பொருள் இல்லை, விண் மேவும் புலவருக்கு<br>விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.<br>( அபிராமி அந்தாதி 90–ஆம் பாடல் ) |

## 95. கடன் தொல்லையிலிருந்து விடுபட

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சேறை** |
| *விலாசம்* | ஸ்ரீ ஞானவல்லி உடனாய<br>ஸ்ரீ செந்நெறியப்பர் திருக்கோயில்<br>திருச்சேறை அஞ்சல் – 612 605<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – திருவாரூர் சாலையில் நாச்சியார் கோயிலை அடுத்துள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 12.00 மாலை : 05.00 – 08.30 |
| *தொலைபேசி* | 0435 - 2468001 |
| *வழிபட வேண்டிய முறை* | ஞான தீர்த்தத்தில் நீராடி ஈசனையும் அம்பாளையும் வணங்கி, ஸ்ரீரிண விமோசன லிங்கேஸ்வரர் சன்னிதியில் ஈசனுக்கு 11 திங்கட்கிழமை தொடர்ந்து அர்ச்சனை செய்து வழிபட்டால் கடன் தொல்லையிலிருந்து விரைவில் விடுபடுவர் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 212–ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல், ஸ்லோகம்* | 1) இல்லாமை சொல்லி, ஒருவர் தம்பால் சென்று, இழிவுபட்டு நில்லாமை நெஞ்சில் நினை குவிரேல், நித்தம் நீடு தவம் கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும் செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. (அபிராமி அந்தாதி 54–ஆம் பாடல் )<br>2) “ஓம் ரிண விமோசனாய நமஹ” என்ற மந்திரத்தை 108 முறை தினமும் துதிக்கவும். |

## 96. வழக்குகள் விரைவில் தீர

| | |
|---|---|
| *தலம்* | **சிவபுரம்** |
| *விலாசம்* | ஸ்ரீ ஆர்யாம்பாள் உடனாய<br>ஸ்ரீசிவகுருநாத சுவாமி திருக்கோயில்<br>சிவபுரம், சாக்கோட்டை அஞ்சல் - 612 401<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - திருவாரூர் சாலையில் சாக்கோட்டை பட்டாமணி ஐயர் பேருந்து நிறுத்தம் அருகில் பிரியும் கிளைப் பாதையில் சிவபுரம் உள்ளது. |
| *நேரம்* | காலை : 06.00 - 12.00 மாலை : 04.00 - 08.30 |
| *தொலைபேசி* | 0435 - 2414453, 98653 - 06840 |
| *வழிபட வேண்டிய முறை* | இங்குள்ள பைரவர் விசேஷமான மூர்த்தி. இவருக்கு காலைச்சந்தி, அர்த்தசாமம் ஆகிய காலத்தில் அபிஷேகம் செய்து வடைமாலை சார்த்தி - தயிர்சாதமும், கடலை உருண்டையும் நிவேதித்து, சிவகுருநாதரை அங்கப் பிரதட்சணம் செய்து வந்தால் வழக்குகளில் வெற்றி, தீராத நோய் தீரும் என்ற நம்பிக்கை வழக்கத்தில் உள்ளது.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 184-ஆவது தலம்.<br>சோழநாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>அப்பர், சம்பந்தர் பாடல் பெற்றது.<br>இன்னொரு தலம் : திண்டுக்கல் அருகில் உள்ள சித்தையன் கோட்டை |
| ***நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்*** | சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் வொடுமிகு<br>உருவிய லுலகவை புகழ்தர வழி யொழுகுமெயுறு பொறியொழி<br>அருதவ முயல்பவர் தனதடியடை வகை நிலையரனுறை பதி<br>திருவயர் சிவபுர நினைபவர் திகழ்குலனில னிடைநிகழுமே<br>(சம்பந்தர் ) |

## 97. நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர

| | |
|---|---|
| *தலம்* | **பேளூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ அறம் வளர்த்த நாயகி உடனாய<br>ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில்<br>பேளூர் – 636 104, வாழப்பாடி வட்டம்,<br>சேலம் மாவட்டம். |
| *வழித்தடம்* | சேலம் – ஆத்தூர் சாலையில் வாழப்பாடிக்கு வடக்கே உள்ளது. சேலத்திலிருந்து அயோத்தியாபட்டிணம் வழியாகவும் செல்லலாம். |
| *நேரம்* | காலை : 06.00 – 01.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 04292 - 241400 |
| *வழிபட வேண்டிய முறை* | நிலப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட தகராறு உள்ளவர்கள் இத்தலத்து ஈசனையும் அம்பாளையும் ஆராதனை, அர்ச்சனை செய்து வழிபட்டு இக்கோயிலிலிருந்து ஒரு பிடி மண் எடுத்துச் சென்று வீட்டில் பூஜையறையில் வைத்து வழிபட்டால் நிலம் சம்பந்தமான பிரச்சினைகள் தீரும் என்பது பக்தர்கள் அனுபவம். உத்திராட நட்சத்திரக் கோயில்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இங்குள்ள கல்யாண கணபதி திருமணம் விரைவில் கைகூட வழிபடக்கூடியவர். கணம்புல்ல நாயனாரின் அவதாரத் தலம்.<br>அருகிலேயே ஸ்ரீ அஷ்ட புஜ பால மதன வேணுகோபால சுவாமி பெருமாள் கோயிலுள்ளது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | உத்தார்க்க ஸமப்ரபாம் தாடீமீ புஷ்ப ஸன்னிபாம்<br>ரத்ன கங்கண கேயூர க்ரீடாம் கதஸம்யுக்தாம்<br>தேவ கந்தர்வ யோகினி ஸ முனி ஸித்தனி ஸேவிதாம்<br>நமாமி விஜயா நித்யாம் ஸிம்ஹோபரிக்ருதாஸனாம்<br>( விஜயா ஸ்லோகம்) |

## 98. இழந்த பொருள் ( நியாயமாக சம்பாதித்தது ) திரும்பக் கிடைக்க

| | |
|---|---|
| *தலம்* | **திருக்கோகர்ணம்** |
| *விலாசம்* | ஸ்ரீ பிரஹதாம்பாள் ஆலயம்<br>திருக்கோகர்ணம்<br>புதுக்கோட்டை - 622 002. |
| *வழித்தடம்* | புதுக்கோட்டை நகரிலேயே உள்ளது. |
| *நேரம்* | காலை : 05.00 - 12.00 மாலை : 04.30 - 09.30 |
| *தொலைபேசி* | 04322 - 236195 |
| *வழிபட வேண்டிய முறை* | இங்குள்ள அரைக்காசு அம்மனை மனமுருகிப் பிரார்த்தனை செய்தால் இழந்தபொருள் திரும்ப கிடைக்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | காமதேனு பசு (கோ) தனது காதில் (கர்ணம்) கங்கை தீர்த்தம் கொண்டு வந்து சிவனுக்கு அபிஷேகம் செய்த தலம் இது. |
| | கர்நாடகாவில் உள்ள கோகர்ணம் 267-ஆவது தேவாரத் தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகங்கள்* | 1) ஓம் ஹ்ரீம் க்ரோம் கார்த்தவீர்யாஜ⁴னாய நம:<br>கார்த்தவீர்யாஜ⁴னோ நாமா ராஜா பாஹு⁴ஸஹஸ்ரவான்<br>தஸ்ய ஸ்மரண மாத்ரேண கதம் நஷ்டம் ச லப்தயே.<br>( கார்த்தவீர்யாஜ⁴னர் ஸ்லோகம்)<br>2) பூஜை அறையில் நெய் தீபமேற்றி, உங்கள் பிரார்த்தனையை வாய் மொழியாக அம்பிகையிடம் சொல்லி,<br>அபராஜிதாயே, வித்மஹே<br>ப்ரத்யங்கிராய தீமஹி<br>தந்நோ உக்ரா ப்ரசோதயாத்<br>என தினம் 108 முறை அம்பாளிடம் மனமுருக பிரார்த்தியுங்கள். தொலைந்த பொருள் உங்களைத் தேடி வரும். நம்பிக்கை மிக முக்கியம். |

## 100. காணாமல் போனவர் திரும்பக் கிடைக்க

| | |
|---|---|
| *தலம்* | **தேரழுந்தூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ செங்கமலவல்லி சத்தியபாமா உடனாய<br>ஸ்ரீ தேவாதி ராஜப் பெருமாள் திருக்கோயில்<br>தேரழுந்தூர் - 609 805<br>மயிலாடுதுறை வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| *வழித்தடம்* | மயிலாடுதுறை - கும்பகோணம் சாலையில் குத்தாலத்துக்கு முன்னதாகவே இடப்புறம் கோமல் செல்லும் சாலையில் 3 கி.மீ.ல் ஊர். |
| *நேரம்* | காலை : 07.30 - 12.00 மாலை : 05.00 - 09.00 |
| *தொலைபேசி* | 04364 - 237952 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்து ஸ்ரீ தேவாதி ராஜ பெருமாளையும் தாயாரையும் அர்ச்சனை செய்து மனமுருகி வழிபட்டால் காணாமல் போனவர்கள் திரும்பி வருவர். நேர்மையாக சம்பாதித்துத் தொலைந்த பொருட்கள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | வைணவ திவ்ய தேசங்களில் 23-ஆவது திருத்தலம். திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டது.<br>கம்பர் அவதாரத்தலம்.<br>இத்தலம் 155-ஆவது தேவாரத் திருத்தலமும் கூட. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தந்தை காலில் பெருவி லங்கு தாளவிழ, நள்ளிருட்கண்<br>வந்தளந்தை பெருமானார் மருவி நின்ற வூர் போலும்,<br>முந்திவானம் மழை பொழியும் மூவா வுருவில் மறையாளர்,<br>அந்தி மூன்று மனலோம்பும் அணியார் வீதி அழுந்தூரே.<br>( திருமங்கையாழ்வார் பாசுரம் ) |

## 101. திக்கற்றோரும், விரக்தியுற்றோரும் வழிபட வேண்டிய தலம்

| | |
|---|---|
| *தலம்* | **வலிவலம்** |
| *விலாசம்* | ஸ்ரீ மாழையொண் கண்ணி உடனாய<br>ஸ்ரீ மனத்துணை நாதர் திருக்கோயில்<br>வலிவலம் அஞ்சல்– 610 207<br>திருக்குவளை வட்டம், திருவாரூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கீவளூர் வழியாகச் செல்லும் திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் வலது பக்கம் உள்ளது. புலிவலம் வழியாக திருவாரூர் – திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூர் வழியாகவும் வரலாம் (10 கி.மீ.) |
| *நேரம்* | காலை : 06.00 – 12.00 மாலை : 04.00 – 08.30 |
| *தொலைபேசி* | 04366 - 205636 |
| *வழிபட வேண்டிய முறை* | திங்கட்கிழமை, சப்தமி திதி, அனுஷம், சுவாதி நட்சத்திர நாட்களில் கையில் மூன்று அகல் விளக்குகளில் தீபமேற்றி இங்கு வலம் வந்து, பிரார்த்தித்து நவதான்யம் + சர்க்கரை கலந்த ரவையை எறும்புகளுக்கு ஆலய மதிலோரம் இட்டு வந்தால் இறையருளால் நல்வழி காட்டப் பெறுவர். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 238–ஆவது தலம். வலம்புரிச் சங்கினால் ஈஸ்வரருக்கு கரும்புச்சாறு அபிஷேகம் செய்தால், பித்ருக்கள் சாந்தி அடைந்து, ஆதரவற்று வாழ்வோருக்கு நல்வழி காட்டுவர். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன்<br>ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்<br>ஆயம் ஆய காயம்தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்<br>மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே.<br>( சம்பந்தர் ) |

## 102. வறுமைநிலை நீங்கி தன அபிவிருத்தி பெற

| | |
|---|---|
| தலம் | **நாதன் கோயில்** |
| விலாசம் | ஸ்ரீ செண்பகவல்லி உடனாய<br>ஸ்ரீ ஜெகந்நாதப் பெருமாள் திருக்கோயில்<br>நாதன்கோயில், பம்பப்படையூர் அஞ்சல்– 612 703<br>கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| வழித்தடம் | கும்பகோணம் கொருக்கை 5கி.மீ. சாலையில் பழையாறைக்கு அடுத்துள்ளது.<br>வலங்கைமானிலிருந்தும் செல்லலாம். (8 கி.மீ.) |
| நேரம் | காலை : 08.00 – 12.30 மாலை : 04.00 – 08.00 |
| தொலைபேசி | 0435 – 2417575; 98437 – 95904 |
| வழிபட வேண்டிய முறை | திருக்குளத்தில் நீராடி பெருமாளுக்கும், தாயாருக்கும் அர்ச்சனை செய்து வழிபட்டால் வறுமை நீங்கும். தனம் பெருகும். குடும்பம் நலமடையும். தொழில் அபிவிருத்தி அடையும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| இதர குறிப்பு | வைணவ திவ்ய தேசங்களுள் 21–ஆவது தலம்.<br>சோழநாட்டுத் திருப்பதி.<br>நந்தி சாப விமோசனம் பெற்ற தலம்.<br>திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்தது. |
| நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்கள் | 1) தீதறு நிலத்தொடெரி காலினொடு நீர்கெழுவி சும்பு மவையாய்,<br>மாசறு மனத்தினொடு றக்கமொடி றக்கையவை யாய பெருமான்,<br>தாய் செறவு ளைந்துதயிருண்டுகுட மாடுதட மார்வர் தகைசேர்,<br>நாதனுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே!<br>( திருமங்கையாழ்வார் )<br>2) தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா<br>மனம் தரும், தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா<br>இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே<br>கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக்கண்களே.<br>(அபிராமி அந்தாதி – 69ஆம் பாடல்) |

## 103. உணவிற்குப் பஞ்சமில்லாத நிலை பெற

| | |
|---|---|
| *தலம்* | **திருச்சோற்றுத்துறை** |
| *விலாசம்* | ஸ்ரீ அன்னபூரணி உடனாய<br>ஸ்ரீ சோற்றுத்துறை நாதர் திருக்கோயில்<br>திருச்சோற்றுத்துறை அஞ்சல் – 613 202<br>திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | தஞ்சாவூர் – திருவையாறு சாலையில் கண்டியூரிலிருந்து கிழக்கே வலதுபுறம் பிரியும் பாதையில் 3 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.00 – 12.00 மாலை : 04.30 – 08.30 |
| *தொலைபேசி* | 99438 – 84377, 74010 – 89822 |
| *வழிபட வேண்டிய முறை* | இத்தலத்தில் அருளாளர் என்ற சிவ பக்தருக்கு ஈசன் அட்சய பாத்திரம் வழங்கியதாக வரலாறு. ஈசனையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து வழிபட்டால் சோற்றிற்கு பஞ்சமே இல்லாத நிலை ஏற்படும். வறுமை நீங்கும்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | தேவாரத் திருத்தலங்களுள் 130–ஆவது தலம்.<br>சோழ நாட்டுக் காவிரி தென்கரைத் தலம்.<br>மூவர் பாடல் பெற்றது. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | நம்பனே நான்மறைகள் ஆயினானே<br>நடமாடவல்லானே ஞானக்கூத்தா<br>கம்பனே கச்சிமா நகருளானே<br>கடிமதில்கள் மூன்றினையும் பொடியாஎய்த<br>அம்பனே அளவிலாப் பெருமையானே<br>அடியார்கட்கு ஆரமுதே ஆனேறுஏறும்<br>செம்பொனே திருச்சோற்றுத் துறையுளானே<br>திகழொளியே சிவனே உன் அபயம் நானே. ( அப்பர் ) |

## 104. அவப்பெயர் நீங்க

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பாற்கடல்** |
| *விலாசம்* | ஸ்ரீரங்கநாயகி உடனாய ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில்<br>ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசன் திருக்கோயில்<br>திருப்பாற்கடல், காவேரிபாக்கம் அஞ்சல்- 632 508<br>வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | காஞ்சிபுரம் வேலூர் சாலையில் காவேரிப்பாக்கத்தில் இருந்து இடதுபுறம் 4 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 - 12.00 மாலை : 04.30 - 07.30 |
| *தொலைபேசி* | 94423 - 13789 |
| *வழிபட வேண்டிய முறை* | பிறரின் பழிகளாலும், சூழ்ச்சியாலும் அவதிக்கு உள்ளானோர், கௌரவம், பதவி, சொத்து இழந்தவர்கள், இத்தலத்தில் பெருமாளுக்கும் தாயாருக்கும் ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி, சப்தமி திதி நாட்களில் அர்ச்சனை செய்து வழிபட்டு பிரார்த்தித்தால் அவச்சொல் நீங்கப்பெற்று இழந்த பதவி, கௌரவம், புகழ், சொத்து இவற்றை மீண்டும் அடைவர்.<br>மாதத்தின் இரண்டு சப்தமி திதிகளிலும் 7 முறை அடிப்பிரதட்சிணம் செய்து விமானத்தை தரிசித்தால் மிக விரைவில் பலன் கிட்டும். மற்ற விபரங்களுக்கு கோயிலைத் தொடர்பு கொள்க.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | திருவோண நட்சத்திரக் கோயில். வைணவ திவ்யதேசங்கள் 106-ஐயும் தரிசித்தவர்கள் இத்தலத்தை 107-ஆவது எனக் கருதி தரிசிக்கலாம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | பையர வினணைப் பாற்கடலுள் பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தி,<br>உய்ய வுலகு படைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய்நான் முகனை,<br>வைய மனிசரைப் பொய்யென் றெண்ணிக் கால னையுமுட னேபடைத்தாய்,<br>ஐய! இனியென்னைக் காக்க வேண்டும் அரங்கத் தரவணைப் பள்ளியானே.<br>( பெரியாழ்வார் ) |

## 105. இழந்த பதவி, செல்வத்தை மீண்டும் பெற

| | |
|---|---|
| *தலம்* | **S. புதூர் (திருத்தண்டிகைபுரம்)** |
| *விலாசம்* | ஸ்ரீ சௌந்தர்யநாயகி உடனாய<br>ஸ்ரீ ஸனத்குமாரேஸ்வரர் திருக்கோயில்<br>S.புதூர் அஞ்சல் - 612 205, திருவிடைமருதூர் வட்டம்<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் - திருநள்ளாறு சாலையில் சுமார் 16 கி.மீ தொலைவில் உள்ளது. ஆடுதுறையிலிருந்து 8 கி.மீ.ல் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து கொல்லுமாங்குடி வழியாக 18 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 10.00 - 01.00 மாலை : 05.00 - 08.50 |
| *தொலைபேசி* | 0435 - 2465421, 97877 99546<br>95858 - 11488, 94436 - 51570 |
| *வழிபட வேண்டிய முறை* | குபேரன் வழிபட்டு இழந்த பதவியையும் செல்வத்தையும் மீண்டும் பெற்ற இடம். இங்குள்ள சோம தீர்த்தத்தில் (குறிப்பாக மாசி மக நன்னாளில்) நீராடி, ஈசனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டால், தான் செய்யாத தவறினால், பதவி இழந்தவர்கள் மீண்டும் அப்பதவி கிடைக்கப் பெறுவர். அதே போல (நியாயமாகப் பெறவேண்டிய) இழந்தச் செல்வங்களை மீண்டும் பெறுவர்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | இத்தலத்திற்கருகிலேயே 151, 176, 178-ஆவது தேவாரத் திருத்தலங்கள் கோனேரிராஜபுரம், திருப்பாம்புரம், திருவீழிமிழலை உள்ளன. |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ராஜாதி ராஜாய ப்ரஹஸபுய ஸாஹிகே<br>நமோ வயம் வைஸபுரவுணாய குர்மஹே...!<br>ஸமேக காமான காமகாய மஹ்யம்<br>காமேஸ்வரோ வைஸ்ரவனோத்தாது!<br>குபேராய வைஸ்ரவணாய<br>மஹாராஜாய நம.......<br>( இந்த மந்திரத்தை தினமும் சொல்லி வழிபட வேண்டும் )<br>( குபேர ஸ்துதி ) |

## 106. வேலை வாய்ப்புக் கிட்ட

| | |
|---|---|
| *தலம்* | **அரியக்குடி** |
| *விலாசம்* | ஸ்ரீ தேவி பூதேவி உடனாய<br>ஸ்ரீ தென் திருவேங்கடமுடையான் திருக்கோயில்<br>அரியக்குடி – 623 202<br>காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம். |
| *வழித்தடம்* | காரைக்குடிக்கு கிழக்கே ராமேஸ்வரம் சாலையில் 4 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 – 12.30 மாலை : 04.30 – 08.00 |
| *தொலைபேசி* | 04565 – 238393 |
| *வழிபட வேண்டிய முறை* | 12 வெள்ளிக்கிழமைகள் ஸ்ரீ தென்திரு வேங்கட வனுக்கும் தாயாருக்கும் அர்ச்சனை செய்து வழிபட்டால் வேலை வாய்ப்பு விரைவில் கிடைக்கும். இங்குள்ள மூலைக்கருடன் விசேஷம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | ‘தென் திருப்பதி’ என இத்தலத்தை அழைப்பர். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஸ்ரீதேவி : அம்ருதோத்பூதா கமலா சந்த்ரசோபனா<br>விஷ்ணுபத்னீ வைஷ்ணவீ ச வராரோஹாஞ்ச சார்ங்கிணீ<br>ஹரிப்ரியா தேவ தேவீ மஹாலக்ஷ்மீ ச ஸுந்தரீ<br>( ஸ்ரீ மஹாலக்ஷ்மி துதி ) |

## 107. தலைவிதி - வாழ்க்கை முறையை மேம்படுத்த

| | |
|---|---|
| *தலம்* | **திருப்பட்டூர்** |
| *விலாசம்* | ஸ்ரீ பிரம்மநாயகி உடனாய<br>ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில்<br>திருப்பட்டூர் அஞ்சல் – 621 005<br>மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| *வழித்தடம்* | திருச்சிராப்பள்ளி – பெரம்பலூர் நெடுஞ்சாலையில், சிறுகனூருக்கு மேற்கில் 4கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 07.30 –12.00 மாலை : 04.00 – 07.30 |
| *தொலைபேசி* | 0431 – 2650439, 94438 – 17385 |
| *வழிபட வேண்டிய முறை* | இது பிரம்மாவின் தலையெழுத்தையே மாற்றிய தலம். ஈசனையும், அம்பாளையும் தரிசித்த பிறகு பிரம்மாவுக்குச் சந்தனகாப்பு அல்லது மஞ்சள் காப்பு அலங்காரம் செய்து, பட்டு அங்கவஸ்திரம் அணிவித்து, புளியோதரை படைத்து ஆத்மார்த்தமாக வழிபட்டால் தீவினைகளினால் ஏற்பட்ட பாதிப்பு அகன்று வாழ்க்கையில் நல்ல திருப்பம் உண்டாகும். ஞாயிறு, திங்கள், வியாழன் உகந்த நாட்கள்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | மிகப் பழைமையான புண்ணிய பூமி இது. பதஞ்சலி, வியாக்ரபாதர், காஷ்யபர் முக்தி அடைந்த தலம். தேவார வைப்புத்தலம். விசாக நட்சத்திரக் கோயில். பித்ருக்களுக்கு வீட்டில் திதி கொடுக்காதவர்கள் இத்தலத்திற்கு வந்து காக்கைகளுக்கு சாதம் வைக்கலாம். |
| | இவ்வூரில் உள்ள காசி விஸ்வநாதர், வரதராஜப் பெருமாள், ஐயனார் ஆலயங்களையும் அவசியம் தரிசிக்க வேண்டும். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய பாடல்* | அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்<br>பொம்மானே பேரருளான் பிடவூரன்<br>தம்மானே தண்டமிழ் நூற்புலவாணர்க் கோர்<br>அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே<br>( சுந்தரர் ) |

## 108. தனது குலதெய்வம் அறியாதவர்கள் வணங்க வேண்டியது

| | |
|---|---|
| *தலம்* | **கதிராமங்கலம்** |
| *விலாசம்* | ஸ்ரீ வனதுர்க்கை ஆலயம்<br>கதிராமங்கலம்– 612 106<br>திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| *வழித்தடம்* | கும்பகோணம் – மயிலாடுதுறை (கல்லணை) சாலையில் சூரியனார் கோயிலை அடுத்து சுமார் 5 கி.மீ.ல் (இடதுபக்கம்) உள்ளது. மயிலாடுதுறைக்கு மேற்கில் சுமார் 15 கி.மீ.ல் உள்ளது. |
| *நேரம்* | காலை : 08.00 – 01.00 மாலை : 04.00 – 08.00 |
| *தொலைபேசி* | 94427 - 79084 |
| *வழிபட வேண்டிய முறை* | தாமரைப்பூவில், தவக்கோலத்தில், முன்புறம் அம்பாள் ரூபமாகவும், மறுபக்கம் சர்ப்பமாகவும் ஸ்ரீ வனதுர்க்கை காட்சியருளுகிறார். குல தெய்வம் தெரியாதவர்கள் இந்த வனதுர்க்கையையே குல தெய்வமாகக் கொள்ளலாம்.<br>கருவறையில் நெய் தீபம் நிறைய ஏற்றச் செய்யுங்கள். |
| *இதர குறிப்பு* | சக்தி தலம்.<br>ராகு தோஷம் உள்ளவர்கள், மிருகசீரிஷ நட்சத்திரக்காரர்கள் வழிபடவேண்டிய தலம். |
| *நம்பிக்கையுடன் தினமும் சொல்ல வேண்டிய ஸ்லோகம்* | ஸரணமஸி ஸுராணாம் ஸித்தவித்யாதராணாம்<br>முனிமனுஜபஸஸுனாம் தஸுபிஸ்த்ராஸிதானாம்<br>ந்ருபதிக்ருஹகதானாம் வ்யாதிபி: பீடிதானாம்<br>த்வமஸி ஸரணமேகா தேவி துர்க்கே ப்ரஸீத<br>( சித்தேஸ்வரி தந்த்ரத்தில் உள்ள ஆபதுத்தாரக துர்க்கா ஸ்தோத்திரம் ) |

# விநாயகர் அகவல் (ஔவையார் அருளியது)

1. **சீ**தக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்பப்

2. **பே**ழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்

3. **நா**ன்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

4. சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

5. தாயாய் எனக்குத் தான்எழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்துஎன் உளம்தனில்புகுந்து

6. குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே

7. உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்

8. கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்து எனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே

9. ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

10. இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின்நாவில் உணர்த்திக்

11. குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்துஅறி வித்தே

12. அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

13. சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாகஇனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

14. கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதுஎனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

15. வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்

16. எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி

17. அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

18. அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்துஎனை யாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்

# நவக்கிரக கவசம்

**சூரியன் :**

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய் !

**சந்திரன் :**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றித் திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சதுரா போற்றி !

**அங்காரகன் :**

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு!

**புதன் :**

இதமுற வாழ இன்னல் நீக்கும்
புத பகவானே பொன்னடி போற்றி
பதந் தருவாய்ப் பன்னொளி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி!

**குரு :**

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வை மகிழ்வுடன் தருள்வாய்
பிரகஸ்பதி வியாழக் குருபர நேசா
கிரகதோஷ மின்றி கடாட்சித் தருள்வாய்!

**சுக்கிரன் :**

சுக்கிர மூர்த்தி சுகசுப மீவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே!
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே !

**சனி :**

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்செகம் வாழ இன்னருள் தாதா!

**ராகு :**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கன்னியே ரம்மியா போற்றி!

**கேது :**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி !

✦ ✦ ✦

## சுந்தரர் பாடிய தேவார பாடல்

**( கண் குறை உள்ளவர்கள் தினமும் துதிக்க வேண்டியது )**

1. ஆலம்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

(காஞ்சிபுரம் – திருக்கச்சி ஏகம்பம் பதிகம்
மொத்தம் 11 பாடல்கள்)

2. மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று,
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர்? திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே.

(திருவாரூர் பதிகம் மொத்தம் 11 பாடல்கள்)

✦ ✦ ✦

குறிப்பு :
மொத்தம் 11 + 11 = 22 பாடல்களையும் படித்துப் பிரார்த்தித்தால் பலன் மிக விரைவில் கிடைக்கும்)

## திருக்கோலக்கா ஸ்ரீ ஓசைநாயகி அம்பாள்

# வாக்வாதினி பூஜை வழிபாடு விபரம்

(பார்க்க வ.எண். 76)

### I அர்ச்சனை சாமான்கள் விபரம் :

| | |
|---|---|
| மஞ்சள் அரக்கு கலர் குங்குமம் | 100 கிராம் |
| விபூதி பாக்கெட் | 1 பாக்கெட் |
| தேங்காய் | 3 |
| வாழைப்பழம் | 1 சீப்பு |
| வெற்றிலை | கால் கவுலி |
| பாக்கு | 25 கிராம் |
| சூடம் | 1 பாக்கெட் |
| வத்தி | 4 பாக்கெட் |
| சாம்பிராணி | 50 கிராம் |
| நல்லெண்ணெய் | 1 லிட்டர் |
| திரிநூல் (பாவு நூல்) | 25 கிராம் |
| தீப்பெட்டி | 1 |
| அகல்விளக்கு | 9 |
| தேன் 1 லிட்டரில் இரண்டு பாட்டில் – | 2 லி |
| சந்தனாதி தைலம் | 200 கிராம் |

புஷ்பம் :

மல்லிகை, முல்லை, ஜவ்வந்தி, ரோஜா, மரிக்கொழுந்து, அரளி, மருவு, சம்பங்கி, மாசிபச்சிலை, இந்த பூக்களில் மாலை கட்ட வேண்டும்.

| | |
|---|---|
| 3 முழு உள் ஆரம் | 2 |
| 3 முழு பக்க மாலை | 1 |
| 3 1/2 முழு பக்க மாலை | 1 |

அரும்பு, முல்லை, மல்லிகை,

இவைகளில் பந்தாக 2

உதிரி புஷ்பம் 1/2 கிலோ

குறிப்பு : சேர்க்க கூடாத புஷ்பம் – சிந்தாமணி, செண்டு பூ, வாடாமல்லி

### II ஆலயத்தில் அர்ச்சனை முறை :

1. பேசாதவரை (குழந்தை / பெரியவர்) அம்பாள் சன்னிதானத்திற்கு அழைத்து வரவேண்டும்.
2. விநாயகருக்கு சிதர் தேங்காய் உடைக்க வேண்டும்.
3. ஸ்ரீதாளபுரீஸ்வர ஸ்வாமிக்கு எல்லோருடைய பெயரைச் சொல்லி அர்ச்சனை செய்ய வேண்டும்.
4. அம்பாள் சன்னதியில் 9 – தீபம் ஏற்ற வேண்டும்.
5. அம்பாளை பிரார்த்தனை செய்து 9 முறை வலம் வர வேண்டும்.

6. பேசாத குழந்தையை (அல்லது பேசாதவரை) அம்பாளிடம் அழைத்து வந்து ஸ்ரீஓசைநாயகி அம்பாளுக்கு வாக்வாதினி அர்ச்சனை செய்ய வேண்டும்.

7. அம்பாளுக்கு மூலமந்திர ஜெபம் செய்து நெய்வேத்யம் செய்த 1- கிலோ தேனை (குழந்தைக்கு / பெரியோருக்கு) கொடுக்க வேண்டும்.

8. 1 லிட்டர் தேனை அம்பாளுக்கு தேன் அபிஷேகம் செய்ய வேண்டும்.

### III வீட்டில் செய்யும் முறை :

1. (குழந்தை / பெரியோர்) பல் தேய்த்தவுடன் நெற்றியில் விபூதி, குங்குமத்தை நெற்றியில் பூச வேண்டும்.

2. அம்பாளை பிரார்த்தனை செய்து விபூதி, குங்குமத்தைச் சேர்த்து வாயில் போட்டுக் கொள்ள வேண்டும்.

3. வெறும் வயிற்றில் 45 நாட்கள் தினமும் தேன் 1 ஸ்பூன் கொடுக்க வேண்டும்.

4. குழந்தையின் தாய், தந்தையர், தாத்தா, பாட்டி அம்பாள் பதிகத்தை தினசரி இரண்டு வேளை பாராயணம் செய்ய வேண்டும். (பதிகத்தை கோயிலில் கேட்டு வாங்கவும்).

5. பிறகு அம்பாள் படத்திற்கு பூ சாத்தவும்.

### IV குழந்தைக்கு பேச்சு வந்தவுடன்

குழந்தையை அம்பாள் சன்னிதானத்திற்கு அழைத்து வந்து ஸ்வாமி அம்பாளுக்கு ஹோமம், மஹா அபிஷேகம் செய்து, பட்டு வஸ்திரம் சாத்தி அர்ச்சனை செய்து தங்கள் பிரார்த்தனையை பூர்த்தி செய்ய வேண்டும்.

* * *

## குறிப்பிற்கு பயன்படுத்திய நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | ✳ பாடல் பெற்ற சிவத்தலங்கள்<br>✳ நால்வர் நயந்த வைப்புத் தலங்கள்<br>✳ திவ்ய தேசங்களும், திருத்தல யாத்திரையும்<br>✳ வந்தாரை வாழ வைக்கும் வைப்புத் தலங்கள்<br>✳ சக்தி தலங்களின் வழிகாட்டி<br>✳ ஆறுமுகனின் திருப்புகழ்த் தலங்கள்<br>✳ அல்லல் போக்கும் ஆறுமுகன் தலங்கள்<br>✳ விக்னங்கள் தீர்க்கும் விநாயகர் தலங்கள்<br>✳ ஷடாரண்ய ஷேத்திரங்கள்<br>✳ பஞ்சப் பிரம்மத் தலங்கள்<br>✳ சிவபெருமானின் 64 வடிவங்கள் | **கே. சாய்குமார்**<br>16/28, இரண்டாம் பிரதான சாலை<br>ஜெய்நகர், அரும்பாக்கம்<br>சென்னை – 600 106<br>தொலைபேசி : 044 – 23637212<br>கைபேசி : 93828 - 72358<br>E.mail : saikumarlalitha@yahoo.com<br>Web: www.sivavishnutemplesguide.com<br>( ஒவ்வொரு யாத்ரீகரிடம் இருக்க வேண்டிய பொக்கிஷங்கள் இவை). |
| 2 | திருமுறைத் திருத்தலங்கள் | **பு.மா. ஜெயசெந்தில்நாதன்**<br>வர்த்தமானன் பதிப்பகம்<br>21, இராமகிருஷ்ண தெரு<br>தியாகராஜநகர், சென்னை – 600 017<br>தொலைபேசி : 044 - 28144995<br>28140347 |
| 3 | ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேச வரலாறு | **ஆ. எதிராஜன்**<br>ஸ்ரீ வைணவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்<br>2/300A, ஆறுமுகம் நகர் மேற்கு<br>மன்னார்நகர், காரைக்குடி<br>கைபேசி : 93913-98439; 95007-65241 |
| 4 | 108 திவ்ய தேசங்களும், 276 தேவார தலங்களும் | **B. கனக சபாபதி**<br>**S. பாலகுமாரன்** |
| 5 | 27 நட்சத்திரக் கோயில்கள் | **V.S. வேலாயுதன்**<br>**B. கனக சபாபதி** |
| 6 | பல்வேறு ஆலயத் தல வரலாறு புத்தகங்கள் | |

✳ ✳ ✳

# குறைகள் நிவர்த்தித் தலங்கள் பாகம் – 2ல் விவரிக்கப்பட்டுள்ள தலங்கள்

1 உடலில் தோன்றும் மருக்கள் நீங்க
2 உடல் கட்டி, தோல் நோய் நீங்க
3 அம்மை நோய் நீங்க
4 ஆறாத புண்கள் ஆற
5 மூச்சுப் பிடிப்பு நீங்க
6 க்ஷய ரோகம் குணமாக, சந்திர தோஷ நிவர்த்தியாக
7 எலும்பு மற்றும் மூட்டுகளில் ஏற்படும் நோய்கள் குணமாக
8 கால் வலி குணமாக
9 பாதங்களில் புரை நோய் நீங்க, கால்வலி குணமாக

10 கர்ப்பக் கோளாறுகள், வயிற்று வலி நீங்க
11 தொழுநோய் நீங்க
12 தேள், பூரான் போன்ற விஷப்பூச்சிகள் கடித்தாலோ அல்லது கடிப்பது போல் கனவு கண்டாலோ
13 தனது சந்ததியினர் எவ்வித அங்கக் குறைபாடுகளின்றி பிறக்க
14 பிறவியிலேயே ஏற்பட்ட வியாதிகள் தீர
15 முதுமையில் நோயின்றி நிம்மதியான வாழ்வு பெற
16 இளமைத் தோற்றத்துடன் இருக்க
17 அதிக வயதாகியும் திருமணமாகாத ஆண்கள் பிரார்த்திக்க
18 ஆண் வாரிசு கிடைக்கப் பெற

19 தம்பதியரிடையே அன்யோன்யம் பெருக
20 மாமியார் மருமகள் ஒற்றுமைக்கு
21 குடும்பக் கவலை தீர
22 குடும்பப் பகை தீர
23 குடும்ப உறவு முறைகளில் சீர்குலைவு இல்லாமல் இருக்க / நட்பு நிலைக்க
24 களத்திர தோஷம் விலக
25 குருதோஷம் நிவர்த்தியாக, தீராத தலைவலி நீங்க
26 பசுவதை தோஷம் நீங்க
27 அனைத்து கிரஹ தோஷங்கள் நிவர்த்தியாக

28 சஷ்டியப்த பூர்த்தி, பீமரத சாந்தி, சதாபிஷேகம் செய்ய
29 சந்ததியினர் தழைக்க, செழிப்பாக இருக்க
30 புத்திர சோகம் விலக
31 மனக்கஷ்டம் விலக
32 எப்போதும் மனக்கலக்கத்தில் உள்ளவர்கள் வழிபட
33 தொடர்ந்து வரும் சோதனைகளும், துன்பங்களும் விலக
34 மரணச் சம்பவங்களால் மனம் பாதிக்கப்பட்டவர்கள் செல்ல
35 சுப காரியத் தடை விலக
36 காணாமல் போன விலை உயர்ந்த பொருள் மீண்டும் கிடைக்க

37 தேர்வு பயம் வராதிருக்க, படித்தது மறவாதிருக்க
38 குருவுக்கு செய்த துரோகம் நீங்க
39 குரு சாபம் நிவர்த்தியாக
40 வாக்கு பலிக்க
41 கோபம் நீங்கிட
42 நேர்மையான வாழ்வு கிடைக்க
43 நல்லது செய்யப் போய் வம்பில் மாட்டாதிருக்க
44 அமோக விளைச்சல் பெற
45 வியாபாரம், தொழிலில் செய்த ஒப்பந்தங்கள் நிறைவேற

46 செய்த தவறுகளை உணர்ந்து மன்னிப்பு வேண்ட
47 ஊனமுற்ற பெண்கள் நலமாக வாழ
48 பொய் சொல்லி ஏமாற்றியவர்கள் தம் பாபம் நீங்க
49 மூர்க்கத்தனம், கோபம் அடங்கி அமைதியான வாழ்க்கை வாழ

| | | | |
|---|---|---|---|
| 50 | தாய், தந்தையை அவமதித்து பெற்ற பாபம் நீங்க | 78 | சலவைத் தொழிலில் உள்ளவர்கள் வழிபட |
| 51 | வாகனங்களில் விபத்து இன்றி பாதுகாப்பாக பயணம் செய்ய | 79 | அஸ்வினி நட்சத்திரத்தினர் வழிபட |
| 52 | புதுமனைப் புகுமுன் செல்ல | 80 | பரணி நட்சத்திரத்தினர் வழிபட |
| 53 | திருத்தலங்கள் பலவற்றைத் தரிசிக்கும் பாக்கியம் பெற | 81 | கார்த்திகை நட்சத்திரத்தினர் வழிபட |
| 54 | ஆசிரியர்கள் பணி துவங்கும் முன் தரிசிக்க | 82 | ரோகிணி நட்சத்திரத்தினர் வழிபட |
| 55 | ஆசிரியர்கள் தம்முடைய பணியில் மிகச் சிறந்து விளங்க | 83 | மிருகசீரிஷ நட்சத்திரத்தினர் வழிபட |
| 56 | கணித ஆசிரியர்கள் வழிபட | 84 | திருவாதிரை நட்சத்திரத்தினர் வழிபட |
| 57 | மருத்துவத் தொழிலில் உள்ளவர்கள் அனைவரும் வழிபட | 85 | புனர்பூச நட்சத்திரத்தினர் வழிபட |
| 58 | குழந்தைப்பேறு மருத்துவர் வழிபட | 86 | பூச நட்சத்திரத்தினர் வழிபட |
| 59 | இருதய மருத்துவர் வழிபட | 87 | ஆயில்யம் நட்சத்திரத்தினர் வழிபட |
| 60 | கண் மருத்துவர் வழிபட | 88 | மகம் நட்சத்திரத்தினர் வழிபட |
| 61 | உடல் அழகு பெற | 89 | பூரம் நட்சத்திரத்தினர் வழிபட |
| 62 | கணக்கர், தணிக்கையாளர் வழிபட | 90 | உத்திர நட்சத்திரத்தினர் வழிபட |
| 63 | மதிப்பீட்டாளர் – மத்யஸ்தர் வழிபட | 91 | ஹஸ்த நட்சத்திரத்தினர் வழிபட |
| 64 | வழக்கறிஞர்கள் வழிபட | 92 | சித்திரை நட்சத்திரத்தினர் வழிபட |
| 65 | நீதியை விரைவில் வேண்டுபவர்கள் வழிபட | 93 | சுவாதி நட்சத்திரத்தினர் வழிபட |
| 66 | வேதம் கற்பவர்கள் வழிபட | 94 | விசாக நட்சத்திரத்தினர் வழிபட |
| 67 | உபநயனம் செய்பவர்கள் வழிபட | 95 | அனுஷ நட்சத்திரத்தினர் வழிபட |
| 68 | நடனக் கலைஞர்கள் வழிபட | 96 | கேட்டை நட்சத்திரத்தினர் வழிபட |
| 69 | யோகாசன நிபுணர்கள் வழிபட | 97 | மூல நட்சத்திரத்தினர் வழிபட |
| 70 | தீயணைப்புத் துறையினர் வழிபட | 98 | பூராட நட்சத்திரத்தினர் வழிபட |
| 71 | உயிருக்கு ஆபத்தான பணியில் இருப்பவர்கள் வழிபட | 99 | உத்திராட நட்சத்திரத்தினர் வழிபட |
| 72 | விஷக்கடி மாந்திரீகர் வழிபட | 100 | திருவோண நட்சத்திரத்தினர் வழிபட |
| 73 | விமானப் பணி/பயணம் செய்வோர் வழிபட | 101 | அவிட்ட நட்சத்திரத்தினர் வழிபட |
| 74 | ஆயுதங்கள் தயாரிப்பவர்கள் வழிபட | 102 | சதய நட்சத்திரத்தினர் வழிபட |
| 75 | ஆயுதத் தொழில் செய்பவர்கள் வழிபட | 103 | பூரட்டாதி நட்சத்திரத்தினர் வழிபட |
| 76 | நீர் சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள் வழிபட | 104 | உத்திரட்டாதி நட்சத்திரத்தினர் வழிபட |
| 77 | பக்தர்களின் பசியை ஆற்றும் பொருட்டு அன்னதானம் செய்பவர்கள் வழிபட | 105 | ரேவதி நட்சத்திரத்தினர் வழிபட |
| | | 106 | ராசிகள், நவக்கிரஹங்கள் நட்சத்திரங்களுக்குரிய மரங்களை ஒரே இடத்தில் வலம் வர |
| | | 107 | வாழ்க்கையில் விரக்தியுற்றவர்கள், மாற்றுத்திறனாளிகள் தன்னம்பிக்கை பெற |
| | | 108 | மகளை புகுந்த வீட்டினர் கொடுமை செய்தால் செல்ல வேண்டிய தலம் |